சரசுவதி மகால் வெளியீடு எண். 107.

T3560

# திருநெறி விளக்கம்.

(மூலமும் உரையும்)

தஞ்சை மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம்,

தஞ்சாவூர்.

கி. பி. 1963] சோபகிருது ஆண்டு [சகம் 1885

[விலை ரூ. 2-75

உ

# திருநெறி விளக்கம்.

## (மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர்:

பண்டித வித்துவான்,

**இராம. கோவிந்தசாமி பிள்ளை**

ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்

பதிப்பித்தவர்:

நிருவாகக் குழுவினருக்காக

**O. A. நாராயணசாமி**, *B. A., B. L.,*

கௌரவகாரியதரிசி

1963.

[சோபகிருது ஆண்டு]

சரசுவதிமால் நூல் நிலைய வெளியீடு 107.

இந்நூல்,

யூனியன் கவர்ண்மெண்டு பொருளுதவியினுல்

வெளியிடப்பெற்றது

பதிப்பகம்:

வெற்றிவேல் அச்சகம், தஞ்சாவூர்.

உ

# முன்னுரை.

"தொல்பரவை சுமந்தோங்குஞ் செம்மைத் தோணிபுரத்"தே தோன்றியவர் "பால்நறுங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளை"யாகிய திருநெறிய தமிழ் வல்ல திருஞான சம்பந்தப் பிள்ளையார் ஆவர். இத்தகைக் காழிப் பதிவாழ் வள்ளலாரின் அருள்வழித் தோன்றலாகிய கண்ணுடை வள்ளலென்னும் பெருந்தகையால் இயற்றப் பெற்றதே இத் "திருநெறி விளக்கம்" என்னும் சாத்திரப் பெருநூலாகும். சைவ சித்தாந்தத் திருநெறிபற்றிக் கூறும் விளக்க நூலாகும் இது. எமது மன்னர் சரபோசியின் சரசுவதிமகால் நூல் நிலயத்தின் சுவடி எண் 298 (L) 836 ஆகும்.

இந்நூல், ஐம்பத்தேழு எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களையும், அறுபது அறுசீராசிரிய விருத்தங்களையும் ஒரு வாழ்த்து வெண்பாவினையும் ஆக ஒருநூற்றுப்பதினெட்டுச் செய்யுட்களை யுடையது. மூலம் மட்டுமே யுடைய இந் நூலினை உரையுடன் அச்சிடுமாறு பணித்த அன்புடை அரசினர் ஆணையினைக்கொண்டு சிறந்த முறையில் சுவடியினின்றும் படியெடுத்து, உரை வகுத்துதவிப் பதிப்பித்தவர் பண்டித வித்துவான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை யவர்களாவர்.

சிறந்த முறையில் இந்நூல் வெளிவரப் பெரிதும் உதவிய மத்திய அரசினர் அவர்கட்கும், தமிழ் நாட்டு அரசினர் அவர் கட்கும் எங்கள் நன்றி.

கண்ணுடை வள்ளல் கன்னித்தமிழ் வாழ்க!

தஞ்சை மன்னர் சரபோசியின்
சரசுவதி மகால் நூல் நிலயம்
தஞ்சை 7—9—63

இங்ஙனம்,
O. A. நாராயணசாமி B.A., B.L.
கௌரவக் காரியதரிசி.

உ

# திருநெறி விளக்கவுரை பொருள் அட்டவணை

## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1 | முகவுரை | 1 | |
| 2 | திருநெறி விளக்கம் மூலமும் உரையும் | 1 | 119 |
| 3 | செய்யுள் முதற் குறிப்பகராதி | 120 | 128 |
| 4 | பிழைதிருத்தம் | 129 | 130 |

# திருநெறி விளக்கச் சிறப்பு

## (அகவற்பா)

'பிரமனூர் வேணு புரமுதற் பெருமைசால்
பன்னிரு நாமப் பழம்பதி யதனிடை
யவதரித் தருளிய தவமுறு ஞான
சம்பந் தப்பெயர் தண்ணருட் குரவன்
தாண்மலர்க் கன்பு பூண்டொளிர் பூசனை
யாற்றி யேற்ற மார்ந்த வள்ளல்
வழிவரு ஞான வள்ளலா ரருளிய
திருநெறி விளக்கத் திருப்பெயர் கொண்ட
இப்பிய வீந்நூல் இப்புவி மாந்தர்
மனவிரு ளோரீஇ மாண்பொரு ளுறுமார்
பதிபசு பாசப் பான்மையா யவைகளை
முற்றத் தெரித்திடும் பெற்றித் தாகும்
பாயிர விருத்தம் பதின்மூன் றாகவும்
நூலின் விருத்தம் நூற்றுநான் காகவும்
வாழிவெண் பாவொன் றாகவும் வயங்கிடும்
இத்திரு விருத்தம் மெய்த்திரு நெறியாம்
விளக்கம் விளம்பிடு மேதகு முத்திசேர்
பத்தி மேலிடு பான்மை முற்றுதற்
குறுபொரு ளுடி யுய்வதற் குபாயம்
விளக்கிடு நிலையினை விரும்பிக்
கொள்ளற் பாலற் குவலயத் தோரே'

இங்ஙனம்
பண்டித வித்துவான்
**இராம. கோவிந்தசாமி பிள்ளை.**

# யோகமார்க்கம்

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்
[களுணர்ந்தங்
கணைந்துபோய்மேலேறியலர்மதி மண்டலத்துண்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்றும்
உழத்தலுழந் தவர்சிவன்றன் உருவத்தைப்
[பெறுவர்

# சன்மார்க்கம்.

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங் டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசு பாசந்தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடையோர் சிவனைப் பெறுவர்காணே

௨

# சாத்திரங்கள் சாற்றும் தவமார்க்கமும் சன்மார்க்கமும்.

## செய்யுள்

### சரியை

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளும் கொய்து பூந்தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வது
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல திருப்பர்

### கிரியை

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய் தாசன மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தர வாகித்துச் சுத்த
பத்தியினு லருச்சித்துப் பரவிப் போற்றி
பரிவினெடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலு மிக்கிரியையினை யியற்று வோர்கள்
நின்மலன்ற னருகிப்பார் நினையுங்காலே!

# முகவுரை

" திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

இவ்வுலகமானது:—

" மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும் "

எனத் தொல்காப்பியர் வகுத்தபடி, திருமாலைக் கடவுளாகக்கொண்ட முல்லை நிலமும் செவ்வேட் பரமனாகிய திருமுருகனைத் தெய்வமாக்கொண்ட நீருண்ட கரிய மேகங்கள் உறையா நின்ற குறிஞ்சி நிலமும், இந்திரனைக் கடவுளாக் கொண்ட மருதநிலமும், வருணனைக் கடவுளாக் கொண்ட கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் நிலமும், ஆகக் காணக்கிடக்கின்றது.

" முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும் "

என்றவாற்றானும்,

" முல்லையுங் குறிஞ்சியுங் மொழிசமப் பாலை "

என்றவாற்றானும், பாலைநிலமும், கடவுளும் உண்டென்று கொண்டு ஐவகையாகக் கொள்வர் அறிஞர்.

திருத்தொண்டை நன்னாட்டு நாவிலத்தைத் திணைவள மும் என்றதனால் நிலத்தால் நால்வகைத்தென்றும் இயனூற் புலவர் இயம்புவர். தண்டமிழ் நூல்கள் சாற்றுவன கடவுட் கொள்கையினைப் பெரிதும் எதுபற்றியோ கைவிட்டு வரு கின்றனர் மக்களாயினோர்.

திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்து எனுமதிகாரத்திற் பத்துக் குறட்பாக்கள் கூறிச் செல்கின்றனர். உலகப் பொது நூலெனப்படும் வள்ளுவர் வாய்மொழியில் கடவுளியலும், அக்கடவுளை மனமொழி மெய்களால் சிந்தித்தலும், வாழ்த் துதலும், வணங்குதலும் செய்யுமுறையும், அவ்விறைவர் தம்நிறைதிருவடிகளைப் பற்றினாலன்றிப் பிறவிப்பெருங்கட லீந்தி முத்தியங்கரையினை யடையும் பெற்றியும் தெரிவிக் கின்றார். இதனோடன்றி மக்களாயினோர் செவியுணவால் அறிவுத்தன்மையாயுள்ள ஆன்மா நிறையறிவுறும் எனவும், வாயுணவால் உடல் தூலிக்குமெனவும், இவ்விருவகை யுண வும் இன்றியமையா வெனவுங் கூறுவர்.

> " செவியிற் சுவையுணரா வாயுணவின் மாக்கள்
> அவியினும் வாழினு மென் "

எனவும்,

> " கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
> புன்மை தெரிவா ரகத்து "

எனவுங்கூறிய பாக்களால் மாக்கள் என மிகவும் இழித்துக் கூறியுள்ளார். மாக்கள் எனப்படுமவர் உணர்வால் விலங் கினை யொத்தும் உறுப்புக்களால் ஆறறிவுடைய மக்களை யொத்தும் இருப்பவராவர். மக்கட்பிறப்புற்றும் விலங் குணர்வு படைப்பது பண்டை வினைப்பயனன்றி வேறியாது? ஆகவே பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப்பத்தி பண் ணுவதென்பது எண்மை யுடைத்தன்று.

தெய்வமென்பதோர் சித்தமுண்டாகலும், பல்லூழி காலம் பயின்றரனை யருச்சித்தலும், நரர்பயில்தே யந்தன்னுள் நான் மறைபயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து தோன்றும் மிக்க புண்ணியம் உடைத்தாகலும் உடையவர்க்ள் பசு நூல்களையும், பாசநூல்களையும் விடுத்து பதிப்பொருள் உணர்த்தும். இறைவனூல்களைப் பயின்று அதன்வழி யொழுகி யிறையருள் பெற்று முத்திப் பேறுறல் என்பது அருமையினும் அருமை யுடைத்தாமெனல் கூறலும் வேண்டுமோ ?

" வினையினீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும் "

என்பது தொல்காப்பியம். இறைவனூலும், இறைவனருள் பெற்ற மொழியாளரும் செய்தவைகளே முதனூலாகும். ஆசிரிய விலக்கணமுற்றவுமுடைய தேசிகர்பால் தீட்சையாதி சமஸ்காரங்கள் பெற்று நல்லொழுக்க முடையவர்கள் எவர்களோ அவர்கள் அருள் நூல்களைப் பயின்று தெருளற் பாலராவார்.

" எழுத்தறியத் தீரும் இழித்தகைமை தீர்ந்தான்
மொழித் திறத்தின் முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
சுட்டறுத்து வீடு பெறும் "

என்பது பழம்பாட்டு. இதனானே முதனூற் பொருளை முற்றவுணர்தற்குக் கருவி நூல்களாகிய இயனூல்களை ஐயந் திரிபு, அறியாமையெனும் முக்குற்றங்களும் அறப்பயின்றாற் பயன் றுய்க்கலாம்.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக "

என்பது குறள்.

சில்வாழ் நாள் பல்பிணிச் சிற்றறிவினருக்கு உயிர்க்குறுதி பயப்பனவன்றிப் பிறபொருளுணர்த்துவன வாகிய நூல்கள் ஆகா. அங்ஙனம் உயிர்குறுதி பயகும் மெய்ம்மை நூல்களை கற்றுவல்ல அறிஞர்பால் முக்குற்றமும் நீங்க நல்லோர் பலருடனும் பல்காலும் பயிறல் வேண்டும். பயின்று இல்வாழ்வுழி, கருமமும் உள்படாப் போகமுந் துவ்வாத் தருமமும் தங்கார்க்கே செய்தலினும் துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும் இடையறுது நிற்றல் வேண்டுமென வற்புறுத்தப் பெறுகின்றது. இங்ஙனம் வாய்ப்பதே மேலான நிலையாகும் எனல் வெள்ளிடைமலை.

ஆகவே இதுகாறுங் கூறியவாற்ருன் இவ்வுலகு அறிவுப் பொருளும் அறிவில் பொருளுமாகிய சித்தும் சடமுமெனப் படும். சித்துப்பொருள் அறிவு வகையான், ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈருக அறுவகைப்பட்டு நிற்கும். ஆறறிவாவன மெய், வாய், கண், மூக்கு, செவிகளான் அறியும் சுவையும் ஒளியும் ஊறும், ஓசையும் நாற்றமும் ஆகிய ஐந்தனுடன் தக்கவின்ன தகாதன வின்னவென்ருெக்க வுணரும் மனவறிவும் ஆயவையாம்.

கீழ்ப்போன அறிவினையுடைய விலங்கு பறவை முதலிய கூட்டங்கட்கு விதித்தனசெய்தலிம விலக்கிய வொழிதலும் ஆகிய அறமும் அறத்தாலீட்டப்படும் பொருளும் அப்பொருளான் இன்பமும், இம்மூன்றும் விட்டமையான் அடையும் வீடுமாகிய நாற்பொருளும் கிடையா. கிட்டவு மாட்டாவாம். நூல்கள் நுவல்வன நாற்பொருளைப்பற்றியே ' அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே '' என்பது நன்னூல் இலக்கணம். இங்ஙனம் மக்கள் தங்கள் கருத்தைப் பிறருக்கறிவித்தற்கும், பிறர்கருத்தைத் தாம் அறிந்து கோடற்குங் கருவியாக அமைந்தது ஒலிவடிவினதாகிய மொழியாகும். அம்மொழிகள் பலவாம். அவற்றுள்

பத்தோடொன்பதுபாடைகள் விழுமியன. அவற்றுள் வட மொழியும் தென்மொழியும் சிறந்தனவென்பர் மொழிநூல் ஆய்வாளர். இவற்றுள் வடமொழியாகிய ஆரியத்தில், வேதக்கலைகளும், ஆகமக்கலைகளும், புராண விதிகாச காவிய நாடக மிருதியாதிய கலைகளும் விரிவாக வெடுத்து விளக்கப் பட்டுள்ளன.

தென்மொழியாகிய செந்தமிழின்கண் மொழிபெயர்த்து யாக்கப்பட்டனவும், துதிநூல்களும், சித்தாந்த சாத்திரக் கலைகளும் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் முதலிய நூல் களும், இலக்கணநூல்களும்; பிறவும் உள்ளன. வடமொழி யிலுள்ள வேதாகமமாதிக்கலைகளைப் பயில்வது அனைவருக்கு முடியாததொரு செயலாகும். ஆகவே எல்லாரும் எளிதின் உணர்வதற்குக் காரணமாகவுள்ளது தமிழ்மொழியாகும். அதனால் சாத்திரக்கலைகளைத் தமிழில் யாத்தனர். அங்ஙனம் யாக்கப்பெற்ற நூல்களுள் சித்தாந்தசாத்திரமெனப்படும் உந்திக்களிறுதியனவாம் பதினான்கு நூல்களும், இவற்றினைத் துருவியாக்கப்பட்டது திருநெறிவிளக்கம் எனும் பெருநூலா கும். இந்நூலானது காழியம்பதியில் வாழ்ந்த வள்ளல் வழி வந்த வள்ளலாருள் ஒருவரால் யாக்கப்பட்டது. இந்நூல் விருத்தப்பாவால் ஆயது. இஃது சரசுவதிமால் நூல்நிலையத் துத் தொகுக்கப்பட்ட ஏட்டுப்பிரதியில் உள்ளது. இதனை பிரதி, யாகச்செய்து ஒருவாறு சரசுவதிமால் நூல்நிலைய வழி வரும் பத்திரியையில் வெளிவந்துள்ளது. இதனை முதன்முத லில் அடியேன் இப்பணியினைச் செய்தேன். இதனை நல்லிய முறையில் வெளியீடு செய்யவேண்டுமென அரசினர் ஆணை பிறந்தது. அதனைமேற்கொண்டு திருநெறி விளக்கத்திற் கொரு உரையிருந்தால் நன்றெனக்கருதிச் சிற்றறிவிற்கெட் டினவாறு வரைந்தேன்.

“ அருநெறி யமறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய பெருநெறிய பிரமமாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை

ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்த னுரைசெய்த
**திருநெறிய தமிழ்** வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே"

என்னும் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருக்கடைக் காப்பினுல் திருநெறிதமிழ் இதுவெனல் புலனுகின்றது. இத் திருஞானசம்பந்தப் பெருமானையே அருட் குரவனுகக் கொண்ட வள்ளலார், இதனைப்பின்பற்றியே திருநெறிவிளக்கம் எனப்பெயர் சூட்டினர் போலும். நன்னெறி யென்பது மிதனையே சுட்டிடும். திருநாவலூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது தேவாரத் திருக்கடைக்காப்பில்

பெற்ற மேறுசுந் தேறவல்லானை
  பெரியவெம் பெருமானென் றெப்போதும்
கற்றவர் பாவப் படுவானைக்
  காணக்கண் ணடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தனெம்மானைக்
  குளிர்பொழிற் றிரு நாவலாரூரன்
நற்றமிழிவை யீரைந்தும் வல்லார்
  **நன்னெறி** யுலகெய்து வர்தாமே

எனக்கூறி யருளுகின்றூர்

திருவென்பது முத்தியாகிய பேரின்பம். நெறியென்பது அதனை யடைவதற்குரிய வழி (மார்க்கம்) விளக்கம் என்பது நன்கறிவுக்குப் புலனுமாறு விளக்குவது ஆகும். பேரின்ப வீடெய்துதற்குரிய நெறியினை விளக்கும் நூலென்பது போந்த பொருளாயிற்று. இந்நூலினை யச்சிடற்குப் பெரிதும் ஊக்கமூட்டியருளிய தனக்கென வாழாப் பெருந் தகையாளராகிய கனம் கௌரவ காரியதரிசி உயர் திரு **O. A. நாராயணசாமி ஐயர்** B. A., B. L. அவர்கட்குப் பெரிதுங் கடமைப்பட்டுள்ளேன். இத்திருநெறிவிளக்கநூலினைப் படியெடுத்தல், ஒத்துப்பார்த்தல், முதற்குறிப்பகராதி முதலியன நன்குசெய்துதவிய, திருவையாறு, சீநிவாசராவ் உயர்

நிலைப்பள்ளித் தமிழாசிரியை திருவளர்செல்வி புலவர் **கோ. திலகவதியம்மையாருக்கு** திருமுருகப்பெருமான் றிருவருளால் எல்லா நலனுமுண்டாகுக. இந்நூலானது சரசுவதிமால் நூல்நிலையப்பட்டியல் இரண்டாம் பாகத்தில் சைவசமய நூல்கள் என்ற பகுதியில் சைவாகமங்களும் சித்லாந்த சாத்திரங்களும் என்ற வரிசையில் ஆறுவது எண்ணில் வள்ளலார் சாத்திரம் என்ற நிரலில் உள்ளது. (151 பக்கம் 836 (L) திருநெறிவிளக்கம் எனக்குறிக்கப் பெற்றுள்ளது இது சைவசித்தாந்த உண்மை கூறும் வள்ளலார் நூல்களுள் ஒன்று இதனையியற்றியவர் கண்ணுடைய வள்ளல். இது அச்சிடப்படவில்லை) இஃது இந்நூலின் ஈற்றுவெண்பாவால் அறியக்கிடக்கும். அதுவருமாறு,

வெண்பா

வாழிபுகழ்க் காழிநகர் வாழிதிருத் தண்டைக்கால்
வாழிதிருக் கண்ணுடைய வள்ளருள்—வாழி
சுருதி தொடர்ந்தபெருந் தோணியிறை வாழி
திருநெறிச்சந் தானத் திரள்

என்பதாம்.

இத்திருநெறி விளக்கமானது, கணபதி வணக்கமுதல் ஐம்பத்தேழு செய்யுட்கள் எண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தமாகவும் நாற்பத்தைந்தாவது செய்யுண் முதல் திருநெறிவிளக்க மெனச் சிவாகமத் தெய்வ நூல் என்னும் வரையிலுமுள்ள அறுபது செய்யுட்கள் அறுசீராசிரிய விருத்தங்களாகவும், வாழ்த்து வெண்பா வொன்றுமாக நூற்றுப்பதினெட்டுச் செய்யுட்களை யுடைத்தாம். சிற்சிலசெய்யுட்கள் சீரும் அடியும் சிதைந்து காணப்படுகின்றன. பீற்காலத்தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்களிற் றலைசிறந்ததென்பது ஒருதலை. விரைந்த நிலையில் அச்சிடப்பட்டமையாலும் அயர்

வாலும், அறியாமையாலும், சிலவழுக்கள் நேர்ந்திருத்தல் கூடும். அறிஞராயினார் பொறை செய்வாராக.

பண்ணும் பதம் ஏழும்பல வோசைத் தமிழவையும்
உண்ணின்றதோர் சுவையுறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே

திருஞானசம்பந்தர்.

கண்ணுடைய வள்ளல் கழலிணைப் போற்றி

இங்ஙனம்,

பண்டித வித்துவான்

**இராம. கோவிந்தசாமி பிள்ளை.**

உ

# திருநெறி விளக்கம்

## மூலமும் உரையும்

### கணபதி வணக்கம்

காயமெனுங் கூடத்து மோகக் கம்பங்
  கற்பனையாங் கணையமவை முறித்துக் காலின்
மாயவிலங் கினையொடித்துக் கருமப் பேராய்
  வரும்பரிக்கா ரரைத்துரந்து வளைந்து நிற்குந்
தீயகுணக் காரணமாம் பாகர் சற்றுஞ்
  சேராத வகைவீசிச் சிவவே கத்தாற்
பாயுமருண் ஞானமத வேழத் தின்பொற்
  பாதமுற வேதமுறும் பவங்கள் போமே. 1

(இ-ள்) உடலென்னப்படும் அறைவீடத்து மோகம் (மயக்கம்) என்னப்படும் கட்டுத் தறியையும், கற்பனையெனப்படும் கணையத்தினையும் (குறுக்கிடும் மரம்) ஒடித்து, காலினால் மாயமெனப்படும் விலங்கினை முறித்து கருமமெனப்படும் பெயராய் வருகின்ற குத்துக்கோற் காரரை ஓட்டி, சுற்றி நிற்கும் தீய குணமெனப்படும் காரணமாகிய யானை யோட்டிகளைச் சிறிதும் அணுகாதபடி வெருட்டி, சிவமெனப்படும் வேகத்தினால் பாய்கின்ற (பாய்ந்து செல்லும்) அருளாகிய ஞான மதத்தினைச் சொரியாநின்ற யானைமுகக் கடவுளாகிய கணபதியின் அழகிய திருவடிகளைச் சேர்ந்து வணங்குதலைப் புரிய, துயரமுறும் பிறவிப் பெரும் பிணிகள் போய்விடும் என்பதாம். இஃது உருவகமாம். போகும் என்பது போம் எனவாயிற்று. ஏ அசைநிலை.

### நடராசப்பெருமான் துதி

பேரொளியாய் அளவில்பே ரின்ப மாகிப்
பேதமற வெவ்வுயிர்க்கும் போத மாகி
யாரறிவு மறிவறியா வகண்ட வுண்மை
யநுபவமே தனுவாகி யம்மை காணப்
பாருலவு பிறப்பகலப் பொதுவி னின்று
பரஞான வானந்தப் பாத நல்குஞ்
சீரொளிய செங்கமலப் பாத மென்றன்
சிந்தையினி லுறவணங்கிச் சென்னி வைப்பாம். 2

(இ-ள்) பெருஞ்சோதி வடிவாய், மட்டற்ற பேரின்ப மாகிய முத்தி வடிவாய், வேற்றுமை யிலாதவாறு எல்லா ஆன்மாக்கட்கும் அறிவு மயமாகிய எத்திறப்பட்டாரும் தம் முடைய அறிவினால் அறிதற்கு முடியாத அகண்ட (விரிந்த) மெய்ம்மை யநுபவ நிலையே திருமேனியாகி, அருட்சத்தியா கிய சிவகாம சுந்தரியம்மையார் கண்டு களிப்ப, மண்ணுலகின் மாயாப் பிறப்பும் நீங்கி விலக. பொன்னம்பலத்தினிடத்து நிலைபெற்று பிரமஞானமாகிய ஆனந்த பாதமாகிய திரு வினையளிக்கும் சிறப்புப் பொருந்திய ஒளியினையுடைய செந் தாமரை மலராகிய திருஅடியினை என்றன் மனத்தினில் பொருந்த வணங்கி முடியிற் சூட்டிக் கொள்ளுவாம். (எ-று) இரு திருவடிகளையும் சிந்தித்து வாழ்த்தி வணங்கு வாம் என்ற குறிப்பு மனம் வாக்குக் காயங்களுடைய வணக் கம் தெரிவித்தபடியாம். சிந்தையின் உற வணங்குதலாவது — நன்றாக உள்ளத்தினை வேறொன்றிலுஞ் செலுத்தாதே தியானித்தலாம். உள்ளக் கிழியின் உருவெழுதல் வேண்டும். இவ் வழிபாடே திவ்வியமாம்.

### சிவகாமசுந்தரியம்மை துதி

மேவுபரை திரோதமுட னிச்சை ஞானம்
வியன்கிரியை யானந்த வீடு நல்குந்

தாவிலரு ஞருவாகி மாமாயை மாயை
தனுகரணு திகடமைப்பத் தலமா யுள்ள
மூவகைய வுபாதானம் பொருந்தி யேக
முதலுமா யைந்தொழிற்கு மூல மாகிப்
பாவனையிற் பொதுவினடங் காண வல்ல
பைந்தொடியாள் பாடகத்தாள் புந்தி
வைப்பாம். 3

(இ-ள்) பராசத்தி, திரோதான சத்தி, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி பேரானந்த மோட்ச வீட்டினை யளித்தருளும் அழிவில்லாத அருட் சத்தி வடிவினைத் தாங்கி, சுத்த மாயை, அசுத்த மாயை, மிச்சிர மாயை (பிரகிருதி மாயை) உடலும் கருவியும், புவனமும், போகமும் ஆயவை தமைப்புற்று விளங்க ஆதாரமாயுள்ள மூன்று வகையான உபாதானங்களாகி (காரணியாகி) தனி முதலாய்ப் படைப்பு, காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்கட்கும் காரணமாகி பாவனு ருபத்தில் சிற்சபை பொலியத் திருநடங் காணவல்ல பசிய வளையல்களை யணிந்த சிவகாமவல்லித் தாயாரின் சிலம்பணி சேவடிகளைச் சிந்தை யில் வைத்து வணங்குவோம் (எ-று) மூவகைய உபாதானம் முதற் காரணம், சுத்த மாயை, அசுத்த மாயை, சுத்தா சுத்த மாயை என்பன. பொது—சபை, சிற்சபை, பொற்சபை, இராசசபை, தேவசபை, நிருத்த சபையும்) இரத்தினம், கனகம், வெள்ளி, தாமிரம், சித்திரம் ஆய சபையும் பாடகம்—சிலம்பு, மாயை — மயக்குவது, திரோதம் — மறைப்பது.

(திருஞான சம்பந்தர்)

பொய்யுடைய பரசமயத் திமிரம் போக்கும்
பொங்குகதிர் அங்கமொரு பூவை யாகி

மெய்யுடைய மறைத்தமிழ்நூற் பாட வல்ல
வெங்குருவாழ் எங்குருவாம் விமல மூர்த்தி
பையுடைய வரவல்குல் உமையாள் கொங்கைப்
பரஞானப் பாலருந்திப் பரனைக் காட்டுங்
கையுடைய கற்பகத்தின் செம்பொற் றண்டைக்
காலிரண்டு மென்னிரண்டு கண்ண தன்றே. 4

(இ-ள்) பொய்ம்மையினையுடைய அந்நிய சமயங்களாகின்ற இருளினை யோட்டும் மிக்க கிரணங்களையுடைய சூரியனும், எலும்பினை யொரு பூம்பாவையாக்கி மெய்ம்மையுடைய வேதத்தமிழ்நூல் (தேவாரத்திருமுறை) பாடும் தெய்வீக வன்மையுடைய விமலமூர்த்தி, வெங்குருவெனும் நாமமுடைய சீகாழியில் வாழ்ந்தருளிய விமலமூர்த்தி, எமது பரம்பரை முதற்குருவாகிய விமலமூர்த்தியும், படத்தினையுடைய பாம்பின் படம்போன்ற நிதம்பத்தினையுடைய உமாதேவியார்தம் திருமுலைகளின்றும் சுரந்த பரஞானமாகிய பாலமுதினைக் குடித்து தோணியப்பராகிய சிவபிரானைத் 'தோடுடைய செவியன், எனச் சுட்டிக் காட்டியருளிய திருக்கை யினையுடைய கற்பகம் போன்றவரும் ஆகிய திருஞானசம்பந்தமூர்த்திகளுடைய செம்பொன்னாலாகிய தண்டையெனும் அணியினை யணிந்தருளிய திருவடிகள் இரண்டும் அடியேனுடைய இரண்டு கண்களின் பாலதாகும், அன்று, ஏ அசைநிலைகள், அங்கம்—எலும்பு.

(திருநாவுக்கரசர்)

பாழமணர் சிறைநீங்கி யதிகை மேவும்
பரஞ்சுடரைப் பணிந்துதமிழ் மாலை பாடிச்
சூழமழ னீற்றறையை வென்று குண்டர்
துய்ப்பிக்கு நஞ்சமமு தாகத் துய்த்து

வேழமது பணிவித்து வையமீதில்
 வெண்ணீறு மஞ்செழுத்தும் விளங்கி யோங்க
வாழிமிசைக் கன்மிதப்பில் வந்த நாவுக்
 கரசினடி பரசமல மகலு மன்றே. 5

(இ-ள்) பாழ்பட்ட கொடிய சமணருடைய காவற் கூடத்தினின்றும் விடுபட்டுத் திருவதிகைப் பதியினை வந்தடைந்து சூலை நோய் நீங்கிப் பரஞ்சோதியாகிய, வீரட்டானரைக் கும்பிட்டு வணங்கிச் செந்தமிழ்ப் பாமாலை பாடிச் சுற்றியுள்ள தீயினாலாகிய சுண்ணாம்பு அறையினைக்குளிர்பொய்கையாக யாக்கி குண்டராகிய சமணர்கள் அருத்துவித்த நஞ்சினை அமுதாக உண்டருளி, அரசன் ஏவலால் தன்னை யிடற வந்த களிற்றி யானை பணியுமாறு செய்வித்தருளி, உலகினிடத்து வெண்ணீறும் பஞ்சாக்கரமும், விளக்கமுற்று உயர்வடைய கடலினிடத்துக் கல்லே தெப்பமாகக் கொண்டு கரையேறி வந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கித் துதிக்க ஆன்மாவினைப் பற்றியுள்ள பந்தமாகிய அழுக்கு விலகிப் போகும். எ-று; சிறை, நீங்கி, பணிந்து பாடி வென்று துய்த்து, பணிவித்து, ஓங்க, வந்த நாவுக்கரசு என வினைமுடிவு காண்க.

## (திருநாவலூரர்)

மறைமுதல்வன் வழுத்தமறை யவனுய் வந்து
 மணம்விலக்கி யாவணத்தால் வலிய வாண்ட
நிறைபுகழோன் ஆரூரிற் பரவை தன்பால்
 நின்மலனைத் தூதுவிடு நேசனையாற்
றிறையவனை யழைப்பளவில் ஆறு நீங்கு(ம்)
 ஏழிசையான் கமலமலர் வெள்நீர் வாவித்
துறைமுதலை மதலையுமி ழென்ன வல்ல
 சுந்தரனற் சேவடியே சிந்தை செய்வாய். 6

(இ-ள்) வேத முதல்வனாகிய விமலன் அனைவரும் துதிக்க அந்தணனாகி வந்து திருப்புத்தூர்ச் சடங்கவி சிவா சாரியார் திருமகளைத் திருமண முடிக்காதவாறு நீக்கி உரிமை யோலை காட்டி அதன் மூலமாக வலிய தடுத்தாட் கொள்ளப் பட்ட நிறைந்த புகழினையுடையவனும், திருவாரூர்த் திருநக ரில் பரவை நாச்சியாரிடத்தில் தியாகராசப்பெருமானை ஒரு கால்அல்ல, இரு கால் தூது போக்கிய தம்பிரான்றோழனும். திருவையாற்றில் எழுந்தருளிய பஞ்சநதீச்சுரப் பெருமானை ஓலமென அழைத்த மாத்திரத்தில் காவிரி வெள்ளம் கடுக நீங்குமாறு செய்தருளும் ஏழிசை வல்லவனும், தாமரைமலர் பூத்ததெளிந்த நீரையுடைய பொய்கையிலுள்ள (அவிநாசிப் பதியில்) ஆழமிக்க நீர்த்துறையின்கண் முதலையுண்ட அந் தணச் சிறுவனை 'கரைப்பான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லுகாலனையே' கக்குக என்று பாடவல்ல திருநாவ லூரனும் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய அழகியதிரு வடிகளைச் சிந்தித்துப் பந்த மறுத்துய்வாம் எ-று. அற்புதங் கள் பலவற்றுட் சிலவற்றினைக் கூறினர் (என்றபடியாம்)

## திருவாதவூரடிகள்.

அருவிசொரி விழியிணையும் புளகக் காடும்
 ஆராத பெருங்காத லவிழ்ந்த வுள்ள
முருகு தொறுஞ் சிவமயமா வோது முண்மை
 யுலவாத வாசகமும் ஒருநீ ராகி
யிருவகையும் இறந்தபே ரின்ப முத்திக்
 கிதுவடிவே யெனும்வடிவும் உடைய ஞானப்
பெருகொளிசேர் நடராசன் கோயில் வாய்தற்
 பிச்சன்மலர்த் தாளிணையே யிச்சை செய்வாம் 7

(இ-ள்) நீரருவியெனப்பொழியும் இருதிருக்கண்களும் புளகாங்கிதமாகிய காடும், தணியாத (குறையாத) பெரிய

காதற்றன்மையினுல் விரிந்த மனம் இளகுந்தோறும் சிவத்தன்மையாக ஓதப்பெற்ற மெய்ம்மைவற்றுப்பெருத திருவாசகமும், ஓரேதன்மைத்தாகி (ஏகமயமாய்) அகம் புறம் எனும் இருவகைப்பற்றும் கடந்த பேரின்பமாகிய முத்திநிலைக்கு இது வடிவமாகும் என்கின்ற வடிவமும் உடைய பிச்சன், ஞானமாகிய அருட்பெருஞ்சோதி சேர்ந்த நடராசன் பெருமான் திருச்சந்நிதானத்திலமர்ந்த பிச்சன் ஆகிய திருவாதவூரடிகள் இருதிருவடிகளையே விரும்பி பிறவிப்பெரும்பிணி போக்கிடுவாம் (எ-று)

## நாயன்மார்கள் துதி.

நீருலவு சடைதாழ நிமலை காண
  நின்றிறைவ னடம்புரியும் நிருத்தா னந்த
வாரமுத நுகர்தில்லை வாழு மெய்ம்மை
  யந்தணரே முதலாக வாரூர் தன்னில்
ஏரிலகு பரவைபா லெந்தை தன்னை
  யிரவிருகா னடப்பித்தோ னீற தாகச்
சீருலவு திருத்தொண்டத் தொகை யிலுள்ள
  சிவனடியார் பதமலரே சென்னி வைப்பாம். 8

(இ-ள்) கங்கைநீர் உலவப்பெற்ற (கங்காதரன்) கபர்த்த மெனப்பெரிய செஞ்சடைகள் தாழ, நிருமலியாகிய சிவகாமவல்லித்தாயார் கண்டுகளிப்ப பொற்சபைபொலிய நின்று நடராசப்பெருமான் பரமானந்த தாண்டவம்புரியும் கூத்தனுகிய ஆனந்தமெனப்பெறும் நிறையமுதை அருந்தப் பெறுகின்ற தில்லையம்பதியில் வாழும் கூத்தப்பெருமானின் வேறல்லாதவராகக் கருதப்படும் அந்தணர் முதலாக திருவாரூரில் அழகினுெடுவிளங்கும் பரவை நாச்சியாரிடத்து எமது பரம கருணுநிதியாகிய தியாகராசப்பெருமானை நள்ளிரவில் இருமுறை தூதாகவனுப்பிய வன்றொண்டர் ஆகிய நாவலூர் கோன் அந்தமாகச் சிறப்புற்று விளங்கும் திருத்தொண்டத்

தொகையினுள்ள தொகையடியாரும் தனியடியாருமாகிய எழுபானிருவர்தம் திருவடிமலரிணைச் சென்னிமீது தரித்துச் சூட்டிக்கொள்வாம் (எ-று)

### சம்பந்த சரணாலயர் துதி

எம்பந்த பாசமறக் காழி வந்த
என்றுணைவன் எழுதுமறை எழுதும் பேறு
நம்பன்ற னருளதனாற் பெற்ற ஞான
நன்முனிதத் துவவிளக்க நவின்ற நாவன்
வம்பின்கட் கதறிவரும் புத்த நந்தி
மௌலியினி லிடிவீழ வண்டமிழ்நூல் பாடும்
சம்பந்த சரணால யன்றன் பாதம்
சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம். 9

(இ-ள்) எம்மைப்பந்தித்து நிற்கும் பாசவலிதொலைய காழியம்பதியில்வந்தருளியஎன்னுயிர்த்துணைவனும், எழுதும் மறையாகிய தேவாரத்திருமுறையினை (எழுதாக்கிளவி—வடமொழிவேதம், தமிழ் வேதம் திராவிடவேதமெனப்படும்) எழுதும்பெரும்பேற்றினைப் பரமேசுரன் றிருவருட்பாங்கினாற் பெற்ற ஞானமுனிவனும், தத்துவ விளக்கமெனுஞ் சீரிய நூலினைச் செய்தருளினவனும் (கூறியருளியநாவினையுடையவன்) வாதமாகிய வம்பினிடத்திற் கதறிக்கொண்டு வந்த புத்தநந்தியின் தலையின்கண் இடிவிழ்ந்திறக்கும்படி வளவிய தமிழ்நூல் எனப்படும் தேவாரப்பதிகம் பாடியருளிய திருஞானசம்பந்தப் பெருமான் சரணமாகிய திருவடிகளைக் கோயிலாக் கொண்டமையால் சம்பந்த சரணாலயன் எனுந்திருப் பெயர்பூண்டவனுமாகிய பெரியோன் திருவடிகளையெப்போதும் மனமிளகிச் சிந்தித்தலைச் செய்வாம். (எ-று) கந்தபுராணச் சுருக்கம்பாடின சம்பந்த சரணாலயரும் இவரும் வேறுவர் என்பது ஆயற்பாற்று.

## தொண்டர் சீர்பரவுவார்

பத்திநிறை கடல்குன்றைப் பதியில் வந்த
பரமமுனி பாரிலறு பத்து மூவர்
சுத்தநெறித் தொண்டவர்தம் பேறு தொண்டத்
தொகை யடைவிற் றுதித்துலகு துன்பந் தீர
வைத்தவிறை வன்றொண்டர் பாதம் போற்ற
வந்தபிறப் பினைவணங்க லுற்றேனென்னுஞ்
சித்தமுடைத் தொண்டர்சீர் பரவ வல்லான்
செய்யமலர்ச் சேவடியென் சென்னி வைப்பாம் 10

(இ-ள்) அன்பு ஆகிய நிறைந்த கடலும், குன்றத்தூர் எனும் நகரில் அவதரித்தருளிய பரமமுனிவனும், உலகினில் அறுபான்மும்மை நாயன்மாருடைய தூயநெறி தொண்டு அவர்தம்முடைய முத்திப்பேறு ஆயவற்றினைத் தொண்டத் தொகையில்வந்த முறைப்படி போற்றிசைத்து, உலகமக்களின் மலவிருளாகிய துன்பம் ஒழியச் செய்து வைத்த முதல்வன். வன்றொண்டராய திருநாவலூரர்தம் திருவடிகளைப் போற்றவந்த பிறப்பினை வணங்குதலையடைந்தேன் என்று கூறும் சித்தமுடைய (மனமுடைய) தொண்டர்சீரினைப் பரவும் ஆற்றலுடையவன் ஆகிய சேக்கிழார் சுவாமிகளின் செவந்த மலராகிய திருவடிகளை அடியேனுடைய சிரசின் கண் தரித்துக் கொள்வாம் (எ-று)

பெரியபுராணப் பாடல் வருமாறு :—

“ நேசம் நிறைந்த வுள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை
யெல்லாவுயிருந் தொழ வெடுத்துத்

தேச முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வ ணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்"

என்பதாம்

### சிவாலய முனிவர்

அன்புநிறை குருவுருவு நீறு முண்மை
யஞ்செழுத்து மாலயமு மறிவுக் கெட்டா
வின்பமிகுஞ் சிவனுருவுஞ் சென்னி மீதே
யிருத்துமலர்ச் சேவடியு மிறைவன் றன்னைத்
துன்பமற வர்ச்சிக்குந் தொழிலுந் தொண்டர்
தொண்டரடித் தொண்டனெனுந் தொண்டில் வீடுந்
தென்பொதியிற் றிருமுனிபால் பெற்ற வெங்கள்
சிவாலயமா முனிபாதஞ் சிந்தை செய்வாம். 11

(இ-ள்) அன்பு நிறைந்த ஆசிரியருடைய வடிவும், திருநீறும் மெய்ம்மையான திருவைந்தக்கரமும், திருக்கோயிலும் தூய அறிவினுக்கும் எட்டாத சிவன் வடிவும் தலைமேல் வைத்திடும் அழகிய திருவடியும் சிவபெருமானைப் பிறவித்துன்பமற அருச்சனைபுரியும் நல்வினையும், அடியவர், அடியவரின் அடியவர் ஆயவருக்கும் அடிமைபூண்டொழுகுந் தொண்டன் எனும் தொண்டின்கண் விடுத்திடலைச் செய்யும் தென்பொதியமாமலையில் எழுந்தருளிய அகத்திய முனிவர்பால் பெற்றருளிய எங்களுடைய சிவாலய முனிவருடைய திருவடிகளைச் சிந்தையால் சிந்தித்து வந்திப்பாம். தொண்டர்தம்இயலும் ஒருசிறிது விளக்கப்பட்டதாம் (எ-று)

### நூற்பயன்

மருளினிலை கெடவழுத காழி வேந்தர்
வாகீசர் வன்றொண்டர் வாத வூரர்

தெருளுநிலைச் செந்தமிழ்ப்பின் செல்வ தாகச்
சிவாகமத்தின் கருத்தகலாச் செய்தி யாக
இருளுமலம் இரிக்குமருள் உண்மை யென்றும்
இன்பமலி பொருளுண்மை யென்று நோக்கி
யருளின் வழி தரவுரைப்பன் இதன் பேர் முத்திக்
கான திரு நெறிவிளக்க மாகு மன்றே. 12

(இ-ள்) அஞ்ஞானவிருளாகிய மயக்கநிலை ஒழிய (பாசமயமாகிய மயக்கநிலை) ஒழியத் திருவாய் மலர்ந்தருளிய சீகாழிப்பதி வேந்தராகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும், ஆகிய நால்வருஞ் செய்தருளிய தெளிந்தநிலையாந் திருமுறைகளாகின்ற செந்தமிழ்நூலைப்பின்றொடர்ந்து செல்வதாகவும், சரியையாதி நான்குபாதங்களை நவிலும் காமிகமாதி இருபத்தெட்டாகமங்களின் கருத்துக்கள் நீங்காத செய்கையாகவும், ஆன்மநிலையறியாவாறு மறைக்கும் இருண்ட மலவலியோட்டும், அருட்டன்மை உண்மை எனவும், இன்பம் நிறைந்த பொருள் உள்ளது (உளதாந்தன்மை) என்றும் ஆய்ந்து திருவருள் வழி பயக்க இந்நூலைக் கூறுவன். இதன்பெயரானது யாதெனில் முத்திநிலை கொடுத்தற்குரிய திருநெறி விளக்கம் ஆம் என்பதாம். (எ-று) அன்று, ஏ. அசைநிலை.

(அவை அடக்கம்)

சொன்மையொடு பொருண்மைபெறத் துணிந்தோர் போல
யானுமொரு நூல்வகுத்துச் சொல்வே னென்றல்
புன்மொழிக ளன்றியிதி னன்மை தானும்
பொருந்தியிடு மாகருதி புடவி தன்னைப்
பன்முறையின் மணலொழியக் கழுவு வான்போல்
பண்டிதர்க டமையீர்க்கும் பரிசுண் டாகில்

என்மனமே யெனக்குநகை தருமா லிந்நூற்
கவையடக்க மறந்துநான் இயம்பிட் டேனே 13

(இ-ள்) சொற்றன்மையுடன் பொருட்டன்மையும் அடைய உறுதிகொண்ட புலவர்போல் அடியேனும் ஒப்பற்ற ஒரு நூலைச் செப்பமாக வகைசெய்து கூறுவேன் என்று சொல்வது புன்மையாகிய (அற்பம்) சொற்கூட்டங்களே யல்லாமல் (பொருள் பொருந்தாமொழி) இதனிடத்து நன்மைதானும் பொருந்தியிடுமாறு எண்ணி, பூமியினைப் பலதடவைகளில் மணலானதுபோகக் கழுவுதலைச் செய்கின்றவனைப் போல பேரறிஞர்களை இழுக்கும் தன்மையானது இருக்குமேயாகில் என்னுடைய மனமே என்றனக்கே சிரிப்பினை விளைக்கா நிற்கும் அங்ஙனமிருப்ப இந்நூலினுக்கு அவையடக்கத்தினை நான் (அடியேன்) மறந்து செய்யத்துணிந்து கூறிவிட்டேன். (எ—று)

## நூல்

அருளிலர்பா லிருளாகி யருளுடையோர்க்
கொளியாம்
ஆடகமும் பணியும்போ லபேத மின்றி
இருள்வெளிபோற் பேதமறப் பலசொலொரு
பொருள்சொல்
எண்ணில்பொருள் போலப்பே தாபேத மின்றி
உருவுயிர்நோக் கிரவியறி வொளிபோல வேறற்
றொன்றல்லா வத்துவித மாயுயர்வே தாந்தத்
தெரிபொருளாய்ச் சிவதருமத் தால்விளையுஞ் சைவ
சித்தாந்த வுண்மையினைச் செப்ப லுற்றாம் 1

(இ-ள்) அன்பின் முதிர்வேயருளாம் அவ்வருள் இல்லாதவர் இடத்தில் இருள் மயமாகி அவ்வருள் உடையவர்க்குப் பேரொளியாம். பொன்னும் அணிகலமும்போல

வேற்றுமையில்லாமல், இருளும் வெளியும் போல் காணப்படும் வேற்றுமை நீங்கப் பலசொற் கொருபொருளும் ஒருசொற் பல்பொருளும் போலப் (பேதம் அபேதம் பேதாபேதம்) வேற்றுமையும் ஒற்றுமையும் இல்லாமல் வடிவுடைய ஆன்மா பார்க்கின்ற சூரியனை அறியும் ஒளியினைப் போல தனிமையற்று (ஒன்றித்து) ஒன்றல்லா அத்துவிதமாகவும் உயர்ந்த வேதாந்தம் தெளிந்த பொருளாகவும், சிவபுண்ணியத்தால் உண்டாகும் சைவசித்தாந்த மெய்ம்மையினை (தத்துவப்பொருளை) கூறத்தொடங்குவாம். (எ-று)

ஆருயிர்மூ வகைமூல மலத்தார் கன்ம
வாணவத்தார் மும்மலத்தார் அநாதி யாகப்
பார்வையெனப் பரனுருவாய் வந்து தெய்வப்
பார்வையினாற் பரிசத்தாற் பரம வாக்கால்
ஓர்வரிய பாவனையால் ஓதுதலா லியோகத்
... ... ... ... ...
சார்வுதரு நிருவாண மிருவகையா மிதுநற்
சத்தியமோட் சத்தியமாய்ச் சாற்று நூலே. 2

(இ-ள்) உயிர்கள் மலத்தால் மூவகைய: மூலமலத்தார், கன்மஆணவமலத்தார், ஆணவம்கன்மம்மாயை ஆகியமூவகை மலத்தார் (விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனப்பெயர் பெறுவர்) அநாதியாக பார்வையென (மானைக்காட்டி மானைப் பிடிப்பது போல) பரமேசுரன் திருவுருவுற்றுவந்து தெய்வீகம் பொருந்திய அருள்நோக்கினால் பரிசத்தினால், பரம உபதேசத்தால், உணர்வரிய பாவனையால் திருவைந்தெழுத்தோதிக்கொடுத்தலால் யோகுநிலையில்................................ சார்தல் பொருந்திய நிருவாணம் இருவகைய:- அவை சத்தி நிருவாணம், முத்திநிருவாணம் என இருவகையாம் என்றவாறு. (சத்திய நிருவாணம் மோட்ச நிருவாண மெனப் பெறும் என்றபடி)

மருவுமனு வர்ச்சனையோ கஞ்சமய விசேடம்
வருமுண்மை நிருவாணம் மந்திரங்கள் பதங்கள்
வருணமிகு புவனங்கள் தத்துவங்கள் கலைகண்
மன்னுதொகை வகைபதின்
றெண்பத்தொன்றைம் பத்தொன்
றிருசதமோ டிருபத்நு நாலாறைந்தி னெய்து
நெறியறுவ கையுமொழித் தொழிலின்பப் பொருளில்
பொருளிலுயிர் இருமையா வொருமையில்தற்
போக்கில்
புதுமைய ருவ நுபோ கம்புணர்க்கு மன்றே. 3

(இ-ள்) பொருந்திய மந்திர அருச்சனையும், யோகங் களும் சமய விசேட தீக்கையும், இவற்றால் வரப்பெற்ற மோக்க தீக்கை யெனப்பெறும் நிருவாணமும், மகா மந்திரங் களும், பதமந்திரங்களும், எழுத்துக்களும், மிக்கபுவனங் களும், தத்துவங்களும், கலைகளும், ஆயவற்றின் தொகையும் வகையும் பதின்மூன்றும், எண்பத்தொன்றும், ஐம்பத்தொன் றும், இருநூற்றோடு கூடிய நான்கும் (இருபத்துநான்கும்) முப் பத்தாறும் (அறுபானான்குகலைகளும்) அறுவகைச் சமய நெறியும் நீக்கி, ஒழிவாகிய இன்பப்பொருளில் (ஆறைந்தின் எய்து நெறியறுவகை (முப்பத்தாறு) என்பது பொருள் இன்பமாகிய பொருளிலும் அஃதல்லாததாகிய பொருளிலும் தங்கிய உயிர்கள் இரு வகையாரும் அவற்றுள் ஒருமையின் கண் தன்னுடைய செல்லுகையில் புதுமைச் செயல் நீங்கா வாம் உடலும் உயிரும் ஒருமையாய காலத்தில் பழமையில் லாத புதுமையானது நீங்கிற்றில, அந் நிலையில் தநு கரணம் புவனம் போகம் ஆயவற்றினை இறைவனருளுகையில் போக மாகிய நுகர்வினை யுண்பிக்க கூட்டுவிக்கும் (எ-று).

(வி-ரை) மந்திரம் பதினொன்றாவன: சிவ, ஈசான, தத்புருட, அகோர, வாமதேவ, சத்தியோசாத, அத்திர,

கவச, சிகா, சிரோ, இருதய மந்திரங்களாம். பதம் எண்பத்தொன்றுவன: வியோம வியாபிநே, வியோம ரூபாய, சர்வ வியாபிநே, சிவாய, அனந்தாய, அநாதாய, அநாச்ருதாய, துருவாய, சாச்வதாய, யோக பீட சமஸ்த்தாய, நித்திய யோகிநே, தியாநஹராய, ஓம் நமச்சிவாய, சர்வப்ரபவே, சிவாய, ஈசாநமூர்த்தாய, தத்புருடவக்த்ராய, அகோர ஹிருதயாய, வாம தேவ குஹ்யாய, சத்தியோசாத மூர்த்தயே, ஓம் நமோநம: (2) குஹ்யாதி குஹ்யாய, கோப்த்ரே, அநீதநாய, சர்வ யோகா திக்ருதாய, சர்வ வித்தியாதிபாய, சோதி ரூபாய, பரமேச்வர பராய, அசேதந அசேதந, வியோமிந் வியோமிந், வியாபிந் வியாபிந், அரூபிந் அரூபிந், பிரதம பிரதம, தேஜஸ்தேஜ: சோதிர்சோதி: அரூப, அநக்நி, அதூம, அபஸ்ம, அநாதே, நாநா நாநா, தூதூ, ஓம் பூ; ஓம்புவ:, ஓம்சுவ: அநீதந, நீதந, நிதநோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மந், மகேச்வர, மகாதேவ, சத்பாவேச்வர, மகாதேஜ: யோகாதிபதே, முஞ்ச முஞ்ச, பிரதம பிரதம, சர்வ சர்வ, பவபவ, பவோத்பவ, சத்வபூத சுகப்ரத, சர்வசாநித்ய கர, பிர்ம விட்டுணு ருத்ரபர, அநர்ச்சித அநர்ச்சித, அஸம்ஸ்துத அஸம்ஸ்துத, பூர்வஸ்தித பூர்வஸ்தித, சாக்ஷி சாக்ஷி, துரு துரு, பதங்க பதங்க, பிங்க பிங்க, ஞான ஞான, சப்த சப்த, சூட்சும சூட்சும, சிவ, சர்வ, ஸர்வத, ஓம் நமோ நம: ஓம் சிவாய நமோ நம:, ஓம்

வருணம் (வர்ணம்) அட்சரம் (எழுத்துக்கள்) ஐம்பத்தொன்று. (வடமொழிக் கண்ணுள்ளவாறு வன்னம் 51) உயிர் எழுத்துப் பதினாறும், மெய்யெழுத்து முப்பத்தைந்தும் ஆக ஐம்பத்தொன்றும். இவைகள் சாந்தீயாதி கலை, சாந்தி கலை, வித்தியா கலை, பிரதிட்டா கலை, நிவர்த்தி கலை எனும் பஞ்ச கலைகளில் அடங்கும்.

அகர முதலிய உயிரெழுத்துக்களுக்கு (16) அதிபதி சிவமும், ககர முதலிய முப்பத்தைந்து மெய்யெழுத்துக்

களுக்கும் அதிபதி சத்தியுமாவார். அவைகள் எட்டு வர்க்கங் களாகவும் பிரிக்கப்படும் அகராதி பதினாறுக்கும் அதி தேவதை கணேசர் எனவும், ககாராதி க்ஷகாரந்தமான ஏழு வர்க்கங்களுக்கும், பிராமி: வைணவி, கவுரி, கௌமாரி முதலிய சப்த மாதர்களும் அதிதேவதைகளாம் அகராதி பதி. னாறும் பராசத்திக்கு சூக்குமவடிவென்றும் ககாராதி முப்பத் தைந்து எழுத்துக்களும் தூல வடிவு என்றுங் கூறுவர்.

புவனங்கள் இருநூற்றிருபத்து நான்காவன, முப்பத் தாறு தத்துவங்களிலும் எண்ணில்லாத புவனங்களுள. அவற்றுள் சிறப்புற்றன இவைகளாம். (1) பிருதிவிதத் துவத்தில் நூற்றெட்டும், அப்புவில் எட்டும் தேயுவில் எட்டும் வாயுவில் எட்டும் ஆகாயத்தில் எட்டும் ஆங்காரத் தில் எட்டும் புத்தியில் எட்டும் சித்தத்தில் எட்டும் புருடனில் ஆறும் அராகத்தில் ஐந்தும் வித்தை, கலை, நியதி; காலம், ஆயவற்றில் வகைக்கு இவ்விரண்டும், மாயையில் எட்டும், சுத்த வித்தையில் ஒன்பதும், ஈச்சுவரத்தில் எட்டும், சாதாக் கியத்தில் ஒன்றும், விந்துவில் ஐந்தும் நாதத்தில் பத்தும் ஆக 224 ஆம்.

முப்பத்தாறு தத்துவங்கள், ஆன்வ தத்துவம் 24, வித்தியாதத்துவம் 7 சிவதத்துவம் 5 ஆ. 36 ஆம். ஆன்மா வினுக்கு விழைவதும் வெறுப்பதுமாகிய இரண்டினாலும் நல் வினையும் தீவினையும் அருவமாகிப் பின் உருவமாகித் தனு கரண புவனங்களைச் சார்ந்துழி இன்பத் துன்பங்களாகிய போகத்திற் கூட்டப்படும். அங்ஙனங் கூட்டுமவன் நிமித்த காரணனாகிய சிவபெருமானேயாவன்,

மன்னுசரி தாகிரியை யோக ஞானம்
வாய்ப்பதனுக் கேதுவதன் வழிநின் றோர்க்குத்
தன்னுலகு தன்னருகு தற்போ லீசன்
றருஞான மிருஞான மாகச் சாற்றும்

பன்னரிய பரஞானம் பரம ஞானப்
பற்றொழியப் பரம்பொருளாம் பரிசொன் றொன்று
சொன்னபொரு டனைவிளங்கச் சொல்லா நிற்குஞ்
சுருதிசிவா கமமென்னச் சொல்வ ரன்றே. 4

(இ-ள்) நிலைபெற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கு பாதங்கள் வாய்க்கப் பெறுவதற்குக் காரணமும் அதன்வழிநின்ற நால்வகை மார்க்கத்தினருக்குச் சிவலோகமும், சிவசாமீப்பியமும் சிவசாரூபமும் (இவைபதமுத்தியெனப்படும்) சிவசாயுச்சியமும் (பரமுத்தியெனப்படுவது) ஆம். சிவபெருமான் தந்தருள்ஞானம் சிவஞானமெனப் பெறும். பெரியஞானமானதுசாற்றும் பரமஞானம் ஆம். பரமஞானம் பற்றுநீங்கப் பரம்பொருளாகும். இதன் றன்மை ஒன்று ஒன்றாகும் என்று சொல்லப்பட்ட பொருளினை விளக்கமுறச் சொல்லுதலைச் செய்யும். வேதங்களும், சிவாகமங்களும் என்ன மெய்ம்மைபெற்றஞானிகள் கூறுவார்கள். அன்று, ஏ—அசைநிலைகள் எ—று. வேதம் பொதுநூல், சிவாகமம் சிறப்பு நூலாம், இவ்விருவகைநூல்களும் பரம்பொருளினைப் பலவாறாக விளக்கிப் பகரா நிற்கும்.

முற்சுருதி மிருதிசிவா கமமெதினு மிதய
முதன்மூன்று தெரித்ததின் முதுபதிதான் முடிவில்
தற்பரமா யருவுருவு தவிர்ந்துகுணங் குறிகள்
தாக்கின்றி யமலமாய்த் தனக்குநிக ரின்றி
யொற்கமறு பொருளாகி யுயிர்க்குயிராய் ஒன்றாய்
உணர்வரிதாய்ச் சுகாதீத வுண்மையதாய் ஒழிவற்
றற்புதமா யபேதருடன் பேதந்தமக் கரிதாய்
அத்துவிதற் கெளிதாகி யணுவாகி மகத்தாம். 5

(இ-ள்) முற்பட்ட நூல்களாகிய வேதங்களும், மிருதிகளும், சிவாகமங்களும், ஆகிய எவற்றினிடத்தும் இதய தாமரையில்அரு, உரு. அருவுரு, ஆகியமூவகைவடிவினையும் விளங்கக்கூறி (சொற்பிரபஞ்சமும், பொருட்பிரபஞ்சமும் ஆகியவிரண்டும் இதயத்தில் வர்ணம், பதம், மந்திரம், மூன்றும்ஒருவகையாகவும் புவனம், தத்துவம், கலை மூன்றும் ஒருவகையாகவும் கொள்ளப்படும்) இங்கே உளத்தில் பிரம விட்டுணு உருத்திர வடிவாயுள்ள சிவலிங்கப் பெருமானாகிய முதுபதிதான் அந்தத்தில், ஆன்மாவிற்கு மேலாய், அருவமும் உருவமும் நீங்கி, குணங்களும் அடையாளமும் பாய்தல் இன்றித் தூய்மையாய், எவ்வாற்றானும் தனக்குவமையில்லாமல் குறைவிலா நிறைவுஆகி, உயிர்கட்குயிராகி (பசுபதியாகி) ஏகமாகி, உணர்ந்தார்க்கும் உணர்தற்கரிய பொருளாகி, பேரின்பமாகிய மெய்ப்பொருளாய், நீக்கமற்று, அற்புதமாம் ஞானவடிவாய், ஒற்றுமை வேற்றுமைகட் கருமையுடைத் தாய்ச் சுத்தாத்துவித நிலையினர்க்கு எண்மையாகி, அணுவடிவாய்ப்பெருவடிவாய் ஆகும் (எ-று) இதய முதல் மூன்றாவன இதயமும்நாபியும் புருவமத்தியும் (இதயத்தானம், நாபித்தானம் இலாடத்தானம்) என்பனவாம்.

நண்ணுபரை யிச்சைதொழில் ஞான நல்க
நானதுதனையுற்று நற்கருணை யுருவாய்
எண்ணருநா தாதியினை யெழுப்பியிட வந்த
வெழிற்குடிலை யதோமாயை தனையேந்து வினையாற்
பண்ணியிடு தனுகரண புவன போகம்
பாவித்தங் கவையொடுக்கி மூர்த்திதனைப் பகரிற்
றிண்ணமுற நற்சகள நிட்களமென் றிதனைத்
தெளிந்துரைப்பர் சிவாகமநூல் தெரிந்துளோரே. 6

(இ-ள்) பொருந்திய பரையினின்றும், இச்சையும, கிரியையும், ஞானமும், தோன்ற நான் அதனைப் பொருந்தி நல்ல அருள்வடிவாய் எண்ணமுடியாத நாதாதியினை எழுப்ப

அந்த அழகிய குடிலையானது அதோ மாயையினைத் தாங்கிய (தரித்த) நல்வினை தீவினைகள் காரணமாகத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து (தோற்றுவித்து) அங்ஙனந் தோற்றுவித்த முறையே ஒடுக்கி, மூர்த்தியைப் பகருமிடத்து (கூறுமிடத்து) உறுதியாக (தூய்மையுற) நல்லசகளம் நிட்களம் (சகள சிவம், நிட்கள சிவம்) என்று இம்மூர்த்தியினை ஆராய்ந்து உரைப்பர். சிறப்பு நூல் எனப்படும் சிவாகமங்களை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் நன்கு எடுத்து விரித்துரைப்பர். தனு—உடல், கரணம்—கருவிகள், புவனம்—உலகம், போகம் — நுகர்பொருள். ஏ—அசைநிலை.

சிவம்—சகளமும் நிட்களமுமாக இலங்கும், சகளம்—வடிவுடையது, நிட்களம்—வடிவிலது(உரு.அரு வடிவங்கள்) சிவாகமம்: சிவபெருமானுடைய ஈசானம் தத்புருடம் அகோரம், வாமதேவம் சத்தியோசாதம் ஆகிய ஐம்முகங்களினின்றும் தோன்றியவை. பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களையும் சரியை கிரியை யோக ஞான பாதங்களையும் பற்றியுரைப்பது. காமிகம், யோகசம், சிந்தியம், அசிதம், தீப்தம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், சூட்சுமம். சகச்சிரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இல்லிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம். இவை மூலாகமம் எனப்பெறும். வேதங்களுள் உபவேதம் இருப்பதுபோல உபாகமங்களும் இருபத்தெட்டுண்டாம். காமிக முதலிய பத்தும் விஞ்ஞான கலருட் பரமசிவனது அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய பத்துச் சிவன்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் சிவபேதம் எனவும், விசய முதலிய பதினெட்டும் பரமசிவன்பால் உபதேசம் பெற்ற அநாதிருத்திரர் முதலிய பதினெட்டு ருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திர பேதமெனவுஞ் சொல்லப்படும்.

சிவபேதம் பத்தையுங் கேட்டவர் ஒருவரிடத்தொருவராய் ஒவ்வோர் ஆகமத்துக்கு மும்மூன்று பேராய் அணுசதாசிவருட்டலைவராகிய பிரணவர் முதல் முப்பதின்மராவர். உருத்திரபேதம் பதினெட்டையும் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோர் ஆகமத்துக்கு இவ்விரண்டுபேராய் அநாதிருத்திரர் முதல் முப்பத்தறுவராவர். இங்ஙனமாக ஆகம இயல் கிளக்கப்படும்.

சுட்டறிவுக் கெட்டரிய தொன்மை யானுஞ்
　சொல்லுமடி நடுமுடிவு துடைத்த லானும்
மட்டறுசின் மயனாகி வளர்த்த லானும்
　மதித்திடுவோர் வரமதிப்பின் மறைத லானும்
எட்டனையுஞ் சுகதுக்க மிலாமை யானும்
　எவ்வுயிர்க்கு முயிராகி யிருத்த லானும்
வெட்டெனவே தனதிச்சை யான மேனி
　விரும்பிவேண்டும் பெருங்கருணை விமலன் றாளே.7

(இ-ள்) ஆன்மஞானத்திற்கு எட்டமுடியாத பழமையானும், கூறப்படும் முதலும் நடுவும் இறுதியும் கடத்தலானும் (ஆதிமத்தியாந்த ரகிதன்) அளவற்ற ஞானவுருவனாகி உயருதலாலும், ஆராய்பவருடைய மேலான ஆய்வின்கண் கரத்தலானும், எள்ளளவும் இன்பத்துன்பங்கள் இல்லாத காரணத்தாலும், ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் இறுதியாகிய அனைத்துயிர்களிடத்தும் தங்கியுறைதலாலும், விரைவாகவே தன்னுடைய இச்சைக்குரிய திருமேனியினை விரும்பி மேற்கொளும், பேரருட்டன்மையனாகிய பரமேசுரன் திருவடிநிலை (எ-று) விமலன்றானே யென்பது பாடமாயின், அப்பரமேசுரன் றானே மேற்குறித்த செயலுக்கேற்ப திருவுருவெடுப்பன், என்றுகோடல் ஏற்புடைத்தாம் ஏ-ஈற்றசை.

செங்கமலத் தயன்படைக்கு முலக மெல்லாந்
　திருமாலங் களிக்குமது தன்னைத் தீர

வெங்களரன் அழித்திடுவன் அதனு லந்த
இருவருமற் றிறைவனரு ளேவ லாகுஞ்
சங்கரன்றன் சங்கரிக்கு முலகம் யாவுந்
தானடத்தும் விகாரமறத் தவனன் முன்னர்ப்
பங்கயங்க ளலர்ந்துமுகை துலர்ந்து வெல்லும்
பான்மையென மேன்மையதாப் பகர்வ ரன்றே. 8

(இ-ள்) திருமாலின் உந்தியந்தாமரையிலுதித்த செந்தாமரை மலரிணையாசனமாகவுடைய பிரமன் படைத்தலைப் புரிகுவன், அங்ஙனம் படைக்கப்பட்ட உலக மெல்லாவற்றினையும் திருமாலானவர் அவ்விடத்தே நின்று காத்தலைப் புரிவர். அவ்வுலகினையறவே எங்களுடைய பரமேசுரன் அழித்தலைப்புரிவர் ஆகையினுல் அந்தப் பிரம விட்டுணுக்கள் இருவரும், பரமேசுரனுடைய அருளாணையினுல் அவ்விரு தொழில்களையும் ஆற்றுவர்.

சங்கரித்துச்சுகந்தருதலான் சங்கரன் என்னும் திருநாமம் ஆம். உருத்திரன் அழிக்கும் உலகம் முழுதும் தான் இயக்குவிக்கும் வேறுபாடு எத்தன்மைத்தெனில் அறவடிவினனுகிய சூரியன் முன்னர்த் தாமரைமலர்கள் மலர்ந்து,அரும்புவிரிந்து வெல்லும் தன்மையென மேலாந்தன்மைத்தாகக் கூறுவர் எ-று அன்று, ஏ-இவ்விரண்டும் அசைநிலைகள் பங்கயங்கள் அலர்ந்து முகையுலர்ந்து வெல்லும் பான்மையெனப்பாடங் கோடலு மொன்ரும், நீர்ப்பூக்கள்விரிதலும் குவிதலும் உலர்தலும் இயற்கைத்தாதல் கண்கூடு, (பிரத்தியக்கம்) ஆகவே விரிதலும், பின்னர் விரிந்தவாறேயிருத்தலும், பின்னர்க் குவிதலும் படைப்புக்காப்பு அழிப்புக்குவமையாக்கியுரைப் பினுமாம்.

வையமெலா மாண்பெணலி யென்று தோன்றி
வல்வினைமா லுழன்றெரிரு மலத்தாற் பின்னும்
மெய்யணையும் வெகுவிதரு பங்கண் மாறி
விடுவதுபற் றுவதாகி விரித லானும்

பொய்யமருமுலகுசட மாத லானும்
  போகமுரு வறிந்துபொருந் தாமை யானும்
செய்வினைசெய் துயிருருவி னமைத லானுஞ்
  செகமுழுது நின்றுசிவன் செய்வன் றானே. 9

(இ-ள்) உலகமெலாம் ஆணும், பெண்ணும், அலியும் என மூவகைத் தன்மைத்தாகக் காணப்பட்டு வல்வினையாகிய மாயையினாற் கட்டுண்டு வருந்தி தொடர்ந்துவரு பாசங்களால் பின்னரும், உடலினைப் பற்றும் பலவித வடிவங்கள் மாறி மாறி (உரு மாறி பவக் கடல் வீழ்ந்துழலுவது உயிர்த் தன்மை) ஒரு பொருளை விடுவதும் பற்றுதலும் ஆகி விரிதலை யடைதலானும் பொய்மை நிறைந்த உலகு அறியாமையுடைமையானும், போகப் பொருள் நுகர்வதற்கேற்ற உருவினை யறிந்து பொருத்தப் பெருமையானும், அருவுற்றவினை உருப் பெற்ற ஞான்று ஆற்றும் வினைகளை யாற்றி வினைக்கேற்ற தனுவினில் அமையப்பெறலானும், தோன்றிநின்று அழியுந் தன்மைத்தாய உலகமுழுதும் உள்ளும் புறம்புமாய் நின்று (நிலைத்து) சிவபெருமானாகிய முழுமுதற்கடவுள் நிமித்தக் காரணனாகியாக்கிடுவன் என்பது போதருமென்க. (எ—று) தான், ஏ அசைநிலைகள்.

நாட்டியவைந்தொழிலிறைவன் அருள்விளையாட்
டாக
  நவின்றிடுயிர் பிறப்பினணு காமல் ஞான
வீட்டையருள் புரிவதற்குக் காரணமா மென்று
  விளம்பிடுவ ரிறுதியிளைப் பாற்றன் மெய்யிற்
கூட்டல்வினை தொலைத்தற்குத் திதிபோக மருத்தல்
  கூறுமறைப் பிணிதாக்கல் அருட்கழற்கே கூட்டி
வாட்டமற வநுபோகம் வளர்வித்தல் மூன்னே
  வகுத்தவையு மநுக்கிரக மெனவுரைப்பர்
மதித்தே. 10

(இ—ள்) நிலைபெறுத்தின படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்து வகைத் தொழில்களைப் பரமேசுவரன் அருள் விளையாடல்களாகப் புரிய, கூறப்பட்ட வினைக்கீடாக உயிர்கள் எடுக்கும் பிறப்பின் கண் அடையாதபடி ஞான சாதனத்தாலடையும் முத்தியினைக் கொடுத்தருள்வதற்கு கருவியாகுமென்று கூறுவர், அந்தத்தையும், இளைப்பு ஆற்றுதலையும், உடலினிடத்து ஆன்மாவினைப் புணர்த்தலும், காப்பாற்றுதலும், போகத்தைப் புசிப்பித்தலும், சொல்லப் பெறும் திரோதமாகின்ற மறைத்தலையும், இன்பத்தினையுண்டுபண்ணுதலும், கருணையாகிய திருவடிகளிடத்துச் சேர்ப்பித்துத் தொல்லை நீக்க(துன்பம்) சிவாநுபோகமெனப்படும் நுகர்ச்சியினை மிகுவித்தலும் ஆயவற்றிேனாடு பழமை வினைகாரணமாக இன்னார்க்கின்னபடியென வகை செய்தவற்றினையும் இறைவன் ஆன்மாக்களிடத்தே வைத்த கைம்மாறற்ற கருணை நிலையென அறிவுடைப் பெரியார்கள் நூல்களால் ஆராய்ந்து கூறுவர். (எ -- று)

அகணிதமாய் அழிவிலதாய் ஆணவத்தான்
மறைப்புண்
டருவினைக்கா முருவெடுத்தங்கதுவதுவாய்க்கன்ம
வெகுவிதமுன் னுகர்வழியா லிருவினைகள் புரிந்து
மீள்வதுபோ வதுவாகி மேவுமல பாகத்
தகுதியினிற் றூரகமா மருளொளியான் முன்னைத்
தமமகற்றித் தாணுவினற் றுணிழல்சார்ந் தின்ப
மிகுதிபெறு மாருயிரின் றொகுதிகளென் றென்றே
வேதமுமா கமந்தானும் விளம்பு மன்றே. 11

(இ—ள்) கணிக்கப் படாததாய், அழிவற்றதாய் ஆணவமெனப்படும் மூலமலத்தால் மறைக்கப்பட்டு, ஆன்மாவினை யநாதியே பற்றப்பட்ட அருவினையின் காரணமாக (வினைப் போக நுகர்வதற்கு) உடலாகிய உருவெடுத்து எடுத்த தேகத்

திற்கேற்ப (கூத்தாடி போல) அதுவே அதுவாகி செயல்கள் பலவற்றினையும் முன்னர் அநுபவிக்கும் மூலமாக நல்வினை தீவினைகளாகின்ற இருவினைகளையும் ஈட்டி அதனிடத்தினின்றுந் திரும்புவது போல அவ்வான்மாவேயாகி சூக்கும உடலுடன் பொருந்தும். இருவினையொப்பு மலபரிபாகச் சத்திநிபாதத் துத்தமராய நிலையில் பிரணவமாகிய தாரக மந்திரமெனும் அருட்பிரகாசத்தால் முன்னையபிறப்புக்களிற் செய்த தவத்தினால் பிறப்பறுக்கவேண்டி வேண்டுதல் வேண்டாமை யாகிய விருப்புவெறுப்புக்களைக்களைந்து, உலக காரணனாகிய பரமேசுரன்றன் நல்ல திருவடி நிழலை (சார்ந்து) ப்பற்றிப் பேரின்பமாகிய மேம்பாட்டினைப்பெறும் அரிய உயிர்களுடைய கூட்டம் எனவே வேதங்களும் சிவாகமங்களும் கூறுநிற்கும். என்று ஏ—அசைநிலைகள்.

ஒன்றாகி யொன்றுமிலாக் கேவலத்தின் மீளா
 மூலவாத சேட்டைகளா யிருளையொளி யாக்குங்
குன்றாத கூரிருளாய்ச் செம்பகலாக் களிம்பின்
 கொள்கையதா மக்கட் செவிக் கொடுவிடமே
  போன்று
பொன்றாத தனிமூல மலமாகி யுயிரின்
 போதமெலாந் தானாகிப் போதமற மறைத்து
நின்றாலு மிருபொருட்கு நிலையின்றி யருட்பால்
 நீங்கிடுமா ணவமென்று நிகழ்த்து நூலே. 12

(இ-ள்) ஒன்றன்றன்மைத்தாகி, ஒன்றுமிலா கேவல நிலையில் மீளுதலைச் செய்யும், என்றும் வற்றாதசேட்டைகளாகி இருட்டன்மையினை ஒளித்தன்மையாக்கும், குறையாத மிக்க இருட்டன்மைத்தாகிச் செம்பினின்றும் நீங்காத களிம்பினைப்போல உயிரினின்றும் விலகாத பற்றுக் கோட்டதாம். மனிதர்களுடைய காதுகட்குக் கொடிய நஞ்சினை யொத்து (கொடுஞ் சொல்லாகி சுடுமொழிகளைச் சொல்லுமாச் செய்து)

அழியாத மூலமலமெனும் பெயருடையதாகி, ஆன்மாவின் அறிவு முழுதும் நான்தான் என்பதாகி, அறிவு நிலையினை முற்றும் மறைத்தலைப் புரிந்து கொண்டிருந்தாலும், பசுப் பொருட்கும் பதிப் பொருட்கும் நிலைபெறுதலில்லாமல் அருளினிடத்து விட்டு விலகும் தன்மைத்தாகும் ஆணவமல மென்று நூல்களெல்லாம் நுவலா நிற்கும் (எ-று) கேவலம் —ஆணவ மலம். சேட்டை — இயக்கம், நிகழ்த்தும் — கூறுதலையுறும்.

வெந்துரைநோ யாளனுடல் வெங்கனற்கோல் கொண்டு
வெதுப்புறுமக் காலையினில் மிகுபரிவா லுன்னை
முந்தியவன் கண்புதைக்கு நெறிநிகர்த்து விழிப்பால்
மூடியவெண் டுசிருளா திருளளிக்கு முறைபோற்
சந்ததமும் பாகம்வர வுயிர்க்குமலஞ் செலுத்துஞ்
சார்பின்மல மென்றிடினும் தானலவாய் மறைத்து
வந்தநிலை யதுமாறித் திருவருளா லுலு
மறைப்பொழியா துயிர்க்காதி வாழ்வுதரு மிகவே. 13

(இ-ள்) மிகவும் வேதனையுற்று பலவாறுகப்பிதற்றுரை கூறிக்கொண்டிருக்கும் பிணியாளன்றன் சரீரத்தில், கொடிய அக்கினியாற் காய்ச்சிய இருப்புக்கோல்கொண்டு சுடுகின்ற சமயத்தில் வெகு (மிக்க) அன்பினுல் உன்னை, முற்பட்டு ஒருவன் கண்களை மூடிவிடும் (பொத்தும்) வகை (மார்க்கம்) யினைப் போன்று, விழிப்பினுல் மூடியுள்ள வெள்ளிய ஆடை (வத்திரம்)யினுக்கு இருட்சி யடையாமல் இருட்டன்மை யினைக் கொடுக்குமது போல எப்பொழுதும் உயிர்கட்குப் பரி பக்குவத்தன்மை வந்தடையப் பந்தமாகிய பாசம் இயக்கும்

சார்பின் (வந்தடைதல்) மலம் என்று கூறினும் தானே யல்லவாகி (மலமானது) மறைத்துக் கொண்டு வந்த நிலை யானது மாறித் (திரிந்து) திருவருளிடத்தாகிடினும் மறைத்த லினின்றும் நீங்குதலையடையாது. ஆனால் உயிர்கட்கு முதலா வதாக மிகவும் வாழ்வினை விளைய அளிக்கும் பெற்றித்து. இது பாச நிலை யுணர்த்திற்றும். (எ—று)

ஓங்குபரா பரனருளாற் குடிலையிலே நாத
  முளவாகு மறிந்துவதி லுற்பவிக்கும் விந்துப்
பாங்கருநற் சதாசிவராஞ் சதாசிவர்பான் மகேசர்
  பாலிப்ப ரவர்வித்தை மயங்கிடுவ ரியைந்திட்
டீங்கிவர்க ளைவருமுண் டாயிவர்க்கு முன்னே
  யெழுமென்ற விந்துவிலே சூக்குமைபை சந்தி
நீங்கலரு மத்திமைவை கரிவருமென் றருளான்
  நிகழ்த்திடுவர் பாசவலை நெகிழ்த்து ளோரே. 14

(இ-ள்) மிகவும் மேலான மகாதேவன் கருணையினால் குடிலை யென்னுஞ் சத்தியினில் நாத தத்துவம் தோன்றி யிடும். மீண்டு அதிற்றோன்றும் விந்து தத்துவம் தோன்றும் (உதிக்கும்) இத் தத்துவத்தினிடத்து நல்ல (தூய) சதா சிவராகிய பெருமான் அதிட்டிப்ப அச்சதா சிவரிடத்து மகேசர் அதிட்டிப்பர். மகேசர்பால் வித்தை வந்து விடும். ஆகவே நாதம் வந்து, சதாசிவம், மகேசுரம், சுத்த வித்தை ஆகிய இவ் வைந்து தத்துவங்களும் ஞானக்கிரியா சொரூப பேதங்களாகும்,

> "ஞானமே யானபோது சிவன்றொழில் ஞானமொக்கின்
> ஈனமில் சதாசி வன்பேர் ஈசனுந் தொழில தேறின்
> ஊனமில் கிரியை வித்தை யுருத்திர னிலய போகம்
> ஆனபே ரதிகா ரத்தோ டதிகரணத்த னாமே"

என்னுஞ் சித்தி யாரானும் தெளியப்படும்.

இவைகள் ஒன்றுபட்டு, இங்கே இவர்கள் ஐவரும் உண்டாகியபோது இவர்கட்கு முன்னர்த் தோன்றுமென்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தினிடத்து சூக்குமை பைசந்தி இவற்றினின்றும் நீங்கப்பெறாத மத்திமை வைகரியாயவை யுதிக்கும் என்று திருவருளான் பந்தபாசத்தளை கழன்ற சாம்பசித்தராகிய சீவன் முத்தர் கூறிடுவர். (எ-று)

மெய்யாதி நால்வகையா யொன்றுக்கொன் றெவ்வா
வெகுவிதமா யேகமா யவிதவிதன் றருவாய்
எய்யாமல் வினையிலுழ லாருயிர்க ளெவைக்கும்
இருப்பாதியசேதனமாய்ச் சலிப்பிலதாய்த் தனது
பொய்யாய நிலையளவும் பூரணமா யாவும்
போந்தவடை வேபுரிந்து பொருந்திவினை [யென்றும்
செய்யாத விறுகாலைச் சேதனங்கட் கெல்லாஞ்
சேர்விடமா மாயையெனச் செப்பு நூலே. 15

(இ-ள்) மெய்ம்மையாக முதலாவதாக மேலே கூறப்பட்ட நான்கு வகையாக ஒன்றனுக்கு ஒன்று ஒக்கமாட்டாதன ஆம். இவை பல வகையாய், ஒன்றாகி, வேறுபாடு வேறுபாடின்மையாய் அருவாய் இளைக்காமல் இரு வினைகளால் வருந்தும் அரிய எல்லா உயிர்களுக்கும் இருத்தலாகிய முதல் அறியாமை யுடைத்தாகி சலித்தல் அற்றதாய், தன்னுடைய பொய்ம்மையான நிலையுள்ளவளவும் நிறைவாகி அனைத்தும் வந்தடைந்த முறையிலே யவற்றினைச் செய்து, இயைந்து வினைகளைச் செய்யாது தங்கிய (விடத்து) போழ்து அறிவுடைமைகட்கெல்லாம் சேருகின்ற இடமாகும் மாயையினது தன்மையெனக் கூறும் நூல்கள் (எ-று)

சொல்லியவிம் மாயையெதற் கென்றுரைக்கில் [வையந்
தோற்றுவதற் கிடமின்றாந் துணைவனிட மென்றாற்

புல்லியபொய்ச் சடஞ்சித்தி லுற்பவியா தென்றும்
பொருந்தியுள தேலிறையேன் புகன்றவசத் [துருவாய்ச்
செல்லுநெறி யிதுவாகுஞ் சிவனுமது வன்றிச்
செயும்வகையொன் றிலதாவன் சிவனசத்த னுகில்
அல்லல்தரு மாயையுமற் றவன்போல்வ னுதி
யனை நடத்தி டுந்தலைமை யதுகொடுத்த தன்றே. 16

(இ-ள்) மேலே கூறப்பட்ட மாயையானது எதன் பொருட்டு என்று கூறினுல் உலகமானது உண்டாதற்குக் காரணமாகிய இடமில்லையாகும். மாயாகாரணராகிய சிகண்டருத்திரன் இடமாகு மென்றுரைக்கில் பொருந்தியுள்ள பொய்ம்மையாகிய அறியாமையால் சித்தாகிய அறிவுடைமை தோன்றமாட்டாது. எக்காலத்தும் பொய்யாகிய சடம் பொருந்தியிருக்குமேயாகுல் இதற்கந்நியமாக இறைவன் எற்றுக்கு? கூறப்பட்ட அசத்து (அறியாமை) வடிவமாய்ச் செல்லும்வழி இதுவாகும் சிவனும் அதுவல்லாமல் செய்யும் (கிரியையாக்கும்) வகையும் சிறிதும் இல்லாதவனுகுவன். சிவனும் சத்தன் ஆனுல் துன்பம் விளைவிக்கும் மாயையும் அச்சிவனைப்போல அநாதியாகிய சிவனை நடத்திடும். அங்ஙன மியக்கினும் அச்சிவனுக்கு இறைமைத் தன்மை மாயையானது கொடுத்ததன்று, இறைவனுக்கு இறைமை யியல்பு எக் காலத்திலும் உண்டாம். (எ-று)

அனையவுரு வொருவகை யாகாமன் மக்கள்
அமரர்பசுக் காதியென வாக்கியதென் னுக்கம்
வினையின்வழி யென்னில்வினை யுளதாகி லிறையேன்
வினையசித்தா மதுதன்னை விளம்பிலுயிர் நுகர்ச்சி
யெனையவினை தருமுருவும் பிற்பெறுமாற் றுனே
யெய்தும் வினைக்கானவுரு வென்றுரைக்கிற் [சடமாந்

தனுவகையுந் தனக்கென வொன்றறியா தானுஞ்
சாரும்வகை யிலதென்று சாற்று நூலே. 17

(இ-ள்) சத்தும் அசத்துமாகிய அவ்வடிவுதான் ஒரு தன்மைத்தாக ஆகாமல் மக்களும், தேவரும், ஆகிய உயிரினங்கட்கு முதலாக உண்டாக்கியது யாதாம் (எங்ஙனம்?) அங்ஙனமாதல் வினையின்வழியாக வந்துற்றது என்றால் வினைதானும் உள்ளதாகுமேயானால் இறைவன் எதன்பொருட்டு வினையோவெனில் அசித்து (அறிவிலது) ஆகும். அவ் அசித்தாகிய வினையினை, கூறிடின் உயிர்களுக்குரிய போகம் (நுகர்வுப்பொருள்) எத்தன்மையவாயவினைகளும் கொடுக்கும் வடிவங்களும் பின்னப்பெறுகின்ற வகையினாலே அடைகின்ற வினைகட்காயின உருவங்கள் என்று கூறிடின் அவையும் சடமாகும் வினைக்கீடாகவந்துற்ற உடலங்களும் அவ்வுடலின் வேறுபாடுகளும் தனக்கென ஒன்றனையும் அறியப் பெருமையானும் உடலுக்கென தானாகவே யடையும் வகையும் இலதாகும் என்று நூல்கள் துவலா நிற்கும் (எ-று)

அளவிலிருண் மாயையினும் பரனுயிர்ப்பா லணைதல்
ஆருயிர்கள் வினையருந்தற் காகிலதோ வினையோ
உளதெதுமுன் னுயிர்க்கென்னில் உயிரதுமுற் சுத்தம்
உறையலவென் றுயிருளவன் றேயிவையு முளவாம்
விளையுமிரு வினைமாயை விடுவதுபற் றுவதாம்
விடாதுமல மிதுமுதலா மும்மலமு நெற்கு
முளையினொடு தவிடுமிபோ லியல்புயிர்கட் கென்று
மொழிந்திடுவர் பாசமயக் கொழிந்து ளோரே. 18

(இ-ள்) அறிவினை மயக்குகின்ற அளவற்ற இருட்டன்மையானது மாயையினிடத்தும் பராபரனாகிய இறைவன் உயிர்ப்பினால் (மூச்சினால்) வந்துறல் அரிய உயிர்வர்க்கங்

கள் வினைப்போகங்களை நுகர்வதற்காகிலதோ? வினையோ? உள்ளது யாது? முதலில் உயிர்கட்கு என்றால்? உயிர்கள் முதலாவது நிலையில் சுத்தத்தன்மைத்தாம். தங்குவன அல்ல என்று உயிர்கள் உள்ளன அல்லவே எனில் இவைகளும் உள்ளனவாம் (வினைகளும் நல்வினை தீவினையென விருபகு தித்தாம்) மாயையோ வெனில் ஒன்றை விடுவதும் பற்று தலைச்செய்வதுமாம், விடாதுமலம் இதுமுதலாகிய மூன்று வகை மலங்களும் (மாயை ஆணவம் கன்மம் என்பனவாம்) இம்மலங்கள் நெல்லினுக்கு அங்குரத்துடன் தவிடும் உமியும் போல உயிர்கட்கு என்று இயல்புடைத்தாம் (இயற்கைத் தாம் எனப் பாசமாகிய மயக்கங்கள் நீங்கப்பெற்ற (பாச விமோசனர்) நற்றவர்கள் கூறுவர் (எ-று)

மேவியவிம் மாயையினிற் கலைகால நியதி
  வித்தையுட னராகமிவை விளங்கியிடு மென்றத்
தேவர்தம்மா லுருத்திரரிற் றிகழ்கலையிற் பகுதி
  திரிகுணமா மாங்காரம் புத்தியினிற் செனித்து
மூவகையாந் தைசதவை கரியொடுபூ தாதி
  மொழிதருசாத் துவிதகுண முயங்கியிடு மனமுந்
தாவில்செவி யாதியெனச் சாற்றிஞானேந் திரியம்
  தானுமிகு தைசதத்திற் சாரு மன்றே. 19

(இ-ள்) பொருந்திய இம்மாயையினின்றுங் கலையும், காலமும், நியதியும், வித்தையும், இவற்றுடன் அராகமும் விளங்கியிருக்கும் என்று அவற்றிற்குரிய கடவுளரால் உருத் திரரிடத்து விளங்கும் கலையினில் மூலப்பிரகிருதியும் முக் குணமும் ஆங்காரம், புத்தியினிடத்தும் தோன்றி, மூவகை யாகிய தைசதாங்காரம் வைகரியாங்காரம், பூதாதியாங்காரம் ஆயவை. கூறப்பெற்ற சாத்துவித குணத்தைப் பொருந்தி யிடும் மனமும் கேடில்லாத செவி முதலாகியவெனக் கூறிய ஞானேந்திரியந்தானும் மிக்க தைசதாங்காரத்தினை யடையும் (எ-று)

எண்ணியகன் மேந்திரிய மென்றுசொலப் பட்ட
விராசதமா வாக்காதி யெய்திடும்வை கரியின்
நண்ணிடுபூ தாதிதா மதத்தின்மாத் திரையின்
நவில்வுறுசத் தாதியினை நல்கியிடுஞ் சத்தக்
கண்ணதனில் வெளிப்பரிசங் காலுருவந் தன்னில்
கனலிரதத் தேபுனலிற் கந்தத்தே தரையாம்
மண்ணிறுதிக் கலைமுதலா வந்தவகை மடங்கும்
மாலயனுதிகள் வடிவும் வந்தமைபோ
[லொடுங்கும் 20

(இ-ள்) நன்கு எணணப்பட்ட தொழிற்பொறியாகிய கன்மேந்திரியமென்று சொல்லப்பட்ட இராசதகுணத்தொடு பட்ட வாக்குபாதம் பாணிபாயு உபத்தங்களை யடையும் வைகரியின் பொருந்தியிடும் பூதங்கள் தாமத குணத்தினிடத் தனவாய் தன்மாத்திரையாய்க் கூறப்பட்ட சத்தபரிசரூபரச கந்தங்களைத் தரும். அவை விண்ணிடத்து ஒலியும், வாயுவி னிடத்துப் பரிசமும், (ரூபம்) வடிவு கனலிடத்தும், புன லிடத்துச் சுவையும், மண்ணிடத்துக் கந்தமும் பொருந்தப் பெறும், மண்ணிறுதியாக கலை முதலாக எங்ஙனந் தோன் றினவோ அங்ஙனமே போல மடங்கியிடும் மாலும், பிர மனும் ஆதிகள் உருவங்களும் வந்தமை போல ஒடுங்கும் சத்தக்கண்ணதனில் — சத்தத்திளிடத்து (எ—று) பொருந்திய அவைகளும் சுட்டப்படும் அறிவு அறியாமை களிடத்து நிலைபெறும், மாற்றத்தினையடையும் அறியாமை யினைப்போல் அறிவுடைமையும் ஆனல் நீங்குதலைச்செய்யும் வினையில்லையாகில் நீங்குதலையடையாது. அவ்வினையுள்ளி டத்து,

" பிணக்கி லாத பெருந்துறைப்
பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்பமேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லேவினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீவந்து
காட்டி னாய்க்கழுக் குன்றிலே."

—திருவாசகம்.

தொல்குரம்பைக் காரணமாய்த் தொகையளவு படாத
துன்பமுட னின்பமாய்த் தோற்றமுட னீறும்
மல்கியிடும் வழியதனு னித்த மாகி
மன்னுயிர்க டொறுமருவிப் பின்ன மற்றுப்
பல்விதமா யுணர்நினைவு தொழிலாற் செய்யும்
பண்ணதாய்ப் புந்தியில்வந் தடையும் பான்மை
நல்வினைதீ வினையாகிக் கடைநாண் மாயை
நண்ணியுறு மிதுகன்ம நாட்டி லன்றே. 21

(இ-ள்) அநாதி தொட்டு ஆன்மாக்களைப் பிணித்திருந்த, பாசங் காரணமாக வந்த உடம்பின் காரணமாய் அளவற்ற, துன்பமும் இன்பமும் ஆகிப் பிறப்பும் இறப்பும் பொருந்தியிடும் (நிறைவுறும்) அங்ஙனம் வரும் பெற்றியினால் என்றுமுளதாகி நிலைபெற்ற உயிர்களோடும் பொருந்தி வேற்றுமை நீங்கிப் பலவகைப்பட்ட உணர்வும் நினைவும் செயலும் செய்யும், (அறிவு இச்சை தொழில்) பண்பினதாய் அறிவில் வந்தடையும் தன்மை. நல்வினை தீவினையென்னும் இருவினையாகி இறுதிக் காலத்தில் மாயைதன்னை யடைந்திடும். இது போக பூமியிலன்றி கர்ம பூமியில் ஆகும் (எ-று) அன்று, ஏ அசை நிலை.

சாற்றியவிக் கன்மவழிக் குலமாயுப் போகத்
தன்மையதா மிம்மூன்றுந் தொன்மையதா
[முயிர்க்குத்
தேற்றமுற முற்செய்வினை யன்றியுறா ததுவுஞ்
செய்தவடை விற்செறியா சேருமுறை மாறித்
தோற்றருதெய் முகத்தினொடு பவுதிகமான் மிகமாஞ்
சுட்டறுமொன் றவைதாமும் சுட்டுசட
[சித்தினிலா
மாற்றலுறு மசேதனம்போற் சேதனமு மாகில்
அகலும்வினை யன்றாகி லறாதுவினை யுனக்கே. 22

(இ-ள்) சொல்லப்பட்ட கன்மத்திடமாகக் குலமும் ஆயுளும் நுகர்வும் ஆகிய தன்மைகளாம். இவை மூன்று தன்மைகளும் அநாதியாக உள்ள உயிர்கட்குத் தெளிவுபட முன்னைப் பிறப்புக்களிற் செய்த இருவினைகளாலன்றி வந்தடைய மாட்டாது. அங்ஙனம் வந்தடைதலும், முற்பிறப் பின்கண் செய்த முறைமையின்கண் வந்துற மாட்டாவாம். வந்தடையும் முறையும் மாறுபாடுற்று, உண்டாகும் (நேரும்) ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகம் எனப் படும் பிறவித் துன்பங்கள் கருதப்படலும் நீங்கப்பெறும் (இவை தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களான் வருவனவும் தெய்வத்தான் வருவனவும் ஆம்) சுட்டு—எண்ணம், கருதல். இவ்வினை வேண்டுதல் வேண்டாமை காரணம் பற்றி வருவனவாம், அங்ஙனம் உயிர்களைப் பற்றிவரும் அவைகள் தாமும் கருதப்படும் அறியாமையும் அறிவுடைமையும் கலந்த உயிரோடு கூடிய உடலகத்தினில் ஆம். வலிமை மிக்க அறியாமைபோல் அறிவுடைமையுமானால் வினைகளறும் இன்றேல் உனக்கு இருவினைகள் நீங்கப்பெறா இதனை யோர்வாயாக—எ-று.

எய்தியிடு மறுமையினுக் கேதுவினை யென்னில்
ஏதுவினி லிதமகித மென்றுகொணீ யதுவுஞ்
செய்திபெற லிருளதுமுற் றிகழிலறு நீமுற்
றிகழில்வினை பெருகியிடு மெனவுரைப்பர்
தெளிந்தோர்
மெய்தகமற் றிருவினையாம் வினைகளது நினைவின்
மேவாத வினைமேவும் வினையாக விளைந்திட்
டுய்தலா லிதமகித மாகிவிடு மிவற்றால்
ஒற்கமற விருவினைதா னுற்பவிக்கு முனக்கே. (23)

(இ-ள்) அடையப்படும் அடுத்த சன்மாவிற்குக் காரண மானது என்னை என்றால் அக்காரணத்தில் இதமாகிய இன் பமும் அகிதமாகிய துன்பமும் என்று கொள்வாயாக, நீ! அது வும் செயலைச் செய்யப் பெறுவதானது இருட்டன்மைத்தாம் (மாயையின் வழிச்செயல் புரியப் படுதலினால்) அதனை முழு தும் வெறுத்தால் அவ்வினை விலகப்பெறும், ஆன்மாவாகிய நீ முனைப்பினால் வெறுத்தால் இருவினைகளும் பிறவிப் பெரும்பிணிக்கேதுவாக வளர்ச்சியுறும் என வேதங்களைத் தெளிந்த வித்தகராயினார் விளம்புவர் மெய்மையாக (உண் மையாக) சொல்லப்பட்ட இருள்சேர் இருவினைகளாகின்ற நல்வினை தீவினைகளெனப்பட்டவை நினைவிலும் பொருந் தாத வினை, பொருந்தும் வினையாக உண்டாகிக் கடைத்தேற லால் (பிழைத்தலால் செலுத்தப்படலால்) இன்பத் துன் பங்களாகி விடுதலைச் செய்யும், இவைகளினால் ஒற்கமற (குறைவின்றி) இருவினைகளும் உன்றனிடத்து வந்து தோன் யியிடும் எ—று. இதம் — இன்பம், அகிதம் — துன்பம் "இருள்சேர் இருவினைஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பது ஈண்டுக் கருதத் தக்கதாகும்.

வாக்குமனங் காயமெனு மூவகையால் வினைகள்
வருமொன்றி லொன்றொழியா மாறுது நுகர்ச்சி

போக்கலுறு பாவமிகு புண்ணியத்தா லென்று
புகன்றிடும்வே தாகமநூல் புகன்றமுறை யீற்றில்
மீக்கொளலின் மிகுதிகெடும் விடத்தடைபோ லந்த
மெய்யிலுறு தழிவின்றி மேலைக்கு வித்தாய்
ஆக்கலுறு மரும்பொருளாற் கோடலுமா மென்றே
யறைந்திடுவர் சிவஞான நிறைந்துளோரே (24)

(இ-ள்) வாக்கும், மனமும் காயமும் ஆகிய முக்கரணங்களாலும் நல்வினை தீவினைகள் வந்தடையப்பெறும் (எங்ஙனமெனில் நல்லனவற்றைச் சிந்தித்தலானும் உரைப்பதனுலும், ஈட்டலினுலும் நல்வினையும், தீயனவற்றைச் சிந்தித்து, உரைத்து, ஈட்டலினுல் தீவினையும் வரும்) ஒவ்வொரு கருவியினுல் ஒவ்வொரு வினை நீங்காது, போகநுகர்வது (அநுபவிப்பது) மாறுபாடுருது. நுகர்ச்சியடைதல் மிக்கபாவத்தாலும் மிக்க புண்ணியத்தாலும் என்று கூறுகின்ற வேதாகமங்களாகின்ற நூல்கள் கூறப்பட்ட நெறிமுறையானது இறுதியில் (அந்தத்தில்) மேற்கொள்ளப்படலால் பெரும்பாலும் கெட்டுவிடும், நஞ்சினை மேலெழாதவாறு மந்திரித்துத் தடைபுரிந்ததுபோல, இருவினைக்கீடாக வந்துற்ற அந்த உடலினிடத்து வந்தடைய மாட்டாது, அழிவிலதாய் மேலைக்கு (வருப்பிறப்பினுக்கு) மூலவிதையாய்த் தோற்றத்தினையடையும் அரியபொருளினுல் கொள்ளுதலுமாம் என்றே சிவஞான நிறைவுற்ற செல்வர்கள் செப்புவார்கள் (எ—று) விடந்தலைக்கேறின் மரிப்பன், ஏறியவிடம் மேற்சென்று கொன்றிடாவாறு மாந்திரீகன் விடமந்திரம் விளம்பி யவ்விடத்தையிறக்குமாறு போலக் குருவானவர் பரிபக்குவமுற்றமாணவர்க்கு நல்லுபதேசமும் தீக்கைகளும் புரிந்து ஆன்மாவினைப் பிணித்த விடமாகியவினைகளின் (ஆகாமிய சஞ்சித வினைகளின்) வலியறுப்பர் என்பதையுப் உய்த்துணரவைத்துள்ளனர். சிவஞானம் நிறைந்தவர் பவஞானம் போக்கினேராவர் என்பது துணிவு

வஞ்சமுறு மாருயிர்கட் கிரண்டறவே நின்று
மயக்கியிடு மாணவ மந்தமயக் கினுக்குத்
தஞ்சமிகு வாகுதி ரோதாயி மாயை
தாவிலிரு வகைகருமந் தனுவாதி செலுத்து
மெஞ்சலிலா மாமாயை யென்னுமிவை தன்னை
யிழித்தலரி தாமென்று மிவையருளா மென்றும்
பஞ்சமல மென்னுமர னருளா னோக்கிப்
பகர்ந்திடுவர் பாசமெலா மகன்று ளோரே (25)

(இ-ள்) மாயையினால் வஞ்சித்தலை யடைந்த கிடைத்தற்கு அரிய மானிட உயிரினங்கட்கு இரண்டற வேநிலைத்து (ஒன்றாகி) மயக்குதலைச் செய்யும். ஆணவமல மாம். அந்த ஆணவமலத்திற்குப் பற்றுக்கோடாக மிகவும் ஆகுதலைப்புரியும் திரோதாயிமாயையும் கேடில்லாத இரு வகைக் கருமமலமும் தனுகரணபுவன போகங்களிடத்துச் செலுத்தியிடும் ஒழிவற்ற பெரியமாயை யென்னும் இவற் றினை அறவே அகழ்ந்திடலும் கூடாதாம். எக்காலத்தும். இவை இறைவனுடைய அருட்டன்மைப் பாலவாம் இவை எக்காலத்தும் ஆணவம் கன்மம் மாயை திரோதாயி மாயேயம் என்னும் ஐந்துமலங்களும் ஆயவற்றினைப் பர மேசுரன்றன் திருவருட்பாங்கால் ஆராய்ந்து உற்றுநோக்கி பாசமெலாம் கழலப்பெற்ற பெரியோர் மேலே சொன்ன நெறியாகக் கூறிடுவர். (எ—று)

அருமைஉயிர்—ஆருயிர் எனவந்துற்றது. ஆருயிரென் றது மக்கட் சட்டகந் தாங்கிய உயிரைக் எனக்கோடல் வேண் டும். உயிர்ப்புத்தன்மைத்தாதலால் உயிர்எனநாமம் பூண்டது போலும். உயிரும் ஆணவமும் செம்பிற்களிம்பு போலவும் பாலிற் நீர்போலவும் ஒற்றித்திருத்தலின் இரண்டறவே நின்று என்றுரைக்கப்பட்டது. தஞ்சம் — பற்றுக்கோடு (அடைக்கலம்) திரோதம்—மறைப்பு மாயை—விரிந்து

நின்று ஆன்மாவினைச்சுருங்கிடச் செய்வது. கன்மம்—கருமம் செயல்படுத்துவது. இச்செயல் நற்செயலும் தீச்செயலு மென விருவகைப்படும். இவற்ருல் பாவபுண்ணியங்கள் வந் தெய்தும். தனுவாதி—உடலும், கருவியும், புவனமும், போ கங்களும் ஆம் மாமாயை—மாயேயம், இழித்தல்—நீக்கல். பாசமெல்லாம் அகன்றுளோர்—இறைவன்றன் திருவருட் பாங்கிஞல் பாசங்களின் சேட்டைகள் விடமற்றபாம்பு போல் நீங்கப்பெற்றவர்கள். இவர்கள் இறையருள் நிறையப்பெற்ற சீவன் முத்தராகிய சாம்பசித்தர் எனல் வேண்டும் (எ—று)

தொகுதிமிகு முயிரதுகே வலசகள சுத்தஞ்
சொல்லிடும்வ கையவத்தைப் புல்லியிடு மூலப்
பகுதிமுதல் பாரளவு சார்வகன்று கலாதி
பற்ருது மாமாயை படராது குணங்கள்
தருகுறிகள் வடிவகன்று தனதுண்மை யிழந்து
தம்விழிபோன் றதுவாகித் தனிமலமாய் மோக
மிகுதியினில் வியாபகமாய் ஒழிவறவந் நிலேயில்
மேவிருள்கே வலமென்று விளம்பும் நூலே. (26)

(இ—ள்) தொகுதியாகவுள்ள உயிர் களானவை கேவலம், சகளம் சுத்தம் எனக்கூறப்பட்ட முறைப் படி அவத்தைகளேப் பொருந்தியிடும் மூலப்பகுதியாகிய பிர கிருதி தத்துவமுதல் பூமியாகிய மண் என்னும் தத்துவா் வரை உள்ள பற்றுக் கோடுகள் நீங்கப் பெற்றுக் கலே வித்தை யராகம் என்பன வற்றினேப்பற்றிடாதும் மாயையெ னுந் தத்துவத்திலும் செல்லாதும் இராசத தாமத தத்துவ குணங்களிஞல் வரும் உருவும் சின்னமும் விலகப் பெற்று, தனது உண்மைநிலே விடப் பெற்றுத் தம்முடைய கண்களே யொத்துச் சிறப்புடைத்தாகி ஏகமலமாகி மயக்கம்மிகுதியான விடத்து நிறைவாகி நீக்கமறநின்று அந்தநிலேமையில் பொருந்

நிய இருட்டன்மைகேவலம் என்று நூல்கள் நுவலாநிற்கும். மூவகையவத்தைகளுள் கேவலாவவத்தை கிளக்கப் பட்ட தாகும் இச்செய்யுள் என்பதாம். (எ—று)

''கேவல சகல சுத்தம்
என்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன்
னுண்மைமெய் பொறிக ளெல்லாம்
காவலன் கொடுத்த போது
சகலனு மலங்க ளெல்லாம்
ஓவின போது சுத்த
முடையனுற் பவந்து டைத்தே''

என்ற சிவஞான சித்தியார் செய்யுளும் சிந்திக்கத் தக்கதாம்.

காணாத வாணவநீர் கட்டுரைக்க வேண்டா
கண்டது நான்மாயை கன்மமெனு மிரண்டே
யானான வாருயிர்முன் செய்வினைகட் கீடா
வவ்வுயிர்க்கு மெய்யாதி யளித்திடுவ னவற்றான்
நாணாது வினைகள்புரிந் தருந்திவினை யொப்பின்
நணியிடு மலமகல நல்லருளா லவையின்
பூணாது முன்புதனக் குள்ளவிம லதையைப்
பொருந்தியிடு மென்றவுரை பொருந்தாது
நமக்கே. 27

(இ—ள்) காணப் பெறாத உயிருடன் ஒற்றித் திருக்கும் ஆணவ மலத்தை தேவரீர் உறுதிப் படுத்தியுரைக்க வேண்டா? அடியனேன் ஆராய்ந்தது மாயையும் கன்மமும் ஆகிய இரண்டுமேயாம். ஆனாகிய அரியவுயிர் முன் செய்த நல்வினை தீவினைகட்கீடாக வினைகளையீட்டிய அந்தஉயிர்கட்கு தனுகரணபுவன போகங்களை இறைவன் அளித்தருள்வன், அக்காரணத்தான் நாணுதலை யடையாது செயல்களைச் செய்து

வினைப்போகங்களை நுகர்ந்து விருப்பு வெறுப்பற்ற காரணத் தானே இருவினை யொப்புவர அதுகாரணத்தானே நண்ணி புள்ளபாசநீங்க மலபரிபாகமுற்று மீண்டும் வினைப்பாசங்கள் வந்து மேற்கொளாது நற்கருணை வயத்தான் சந்திநிபாதம் வந்துறும் என்ற மொழி பொருந்துதலைப்பெறுது நங்களுக்கு விமலதை—சத்திநிபாதம். நண்ணியிடும் என்பது நணியிடு மென வாயது. மெய்யாதி—தனுகரணபுவன போகங்கள் (எ—று)

ஆர்ந்தவினை யாதியென வறைதன்முன மாயை
வையமிக வின்றளவு மறுதிபெரு துனக்குப்
பேர்ந்தவுரைபோற்றில்விதைபோலுமலம் விமலம்
போதாமைபொருந்தாதுபொருந்தியதென்முத்தி
சேர்ந்திடினு நிலையிலை நீ செப்பியது நிற்கச்
சேர்கருவி கலாதிசிவ தத்துவமொன் றற்றூற்
சார்ந்தவுணர் வின்மையவ னறியாமை யென்றல்
தானேகாண் வையகத்தின் றன்மை தானே(28)

(இ-ள்) ஆன்மாவினைப்பிணித்துள்ள வினை யானது முதல் என்று கூறற்கு முன்னம், மாயையினைப் பற்றிய ஐயமானது மிகவும் உனக்கு இன்றளவும் முடிவுபெற மாட்டாது ஆகவே, இங்குக் கூறப்பட்ட வாசகத்தினையேற் றுப் போற்றிடின் இவ்வினைவித்து ஆகும். மலமும் விமலமு மாகிய பாசமும் பாசமின்மையும் வாராமல் வந்தடைய மாட்டா. அங்ஙனம் பொருந்தியதேல் முத்தித்தன்மை வந் தெய்திடினும், நிலையுறுதலாகாது. மாணவக! நீ கூறியது ஒருபுறங்கிடக்க, பொருந்திய கருவிகளாகின்ற வித்தியாதத் துவங்களும் சிவதத்துவங்களும் பொருந்துதல் அறப்பெறு மேயானுல் அதுபற்றியுளதாகின்ற அறிவு இன்மையும் ஆன்மா யறியாத்தன்மையும் என்றல் வந்துறல் காண்பாயாக இஃது உலகத்தின் இயல்பேயாம். தான், ஏ-என்பன அசை நிலைகள். (எ—று)

மெய்யுணர்வைப் பாழ்படுத்திப் பொய்யுணர்வை
மெய்யாய்
விளைவித்து நின்றிடுத லானும்மை யருள்வந்
துய்யுநெறி யெய்திலவன் யாவையுமா யெங்கும்
ஒழிவறவே நின்றநிலை யுற்றுணர்த லானும்
மையலுறு மலத்தின்மலஞ் சிவத்தினுமச் சிவமே
மாறாது மூலமல மாறிவரு மாயை
யையனருள் பெறிலந்த வாணவத்தி னுண்மை
யறியவெளி தரிதுனது போதமதற் கெனவே 29.

(இ-ள்) மெய்ம்மையெனப்படும் அறிவினைப் பாழாக்கி (வீணாக்கி) பொய்ம்மையாகிய அறிவினை உண்மையாகிய அறிவாக உண்டுபண்ணி நிலைத்தலானும், ஐயவாகிய (அழகு) இறையருள்வந்து மலங்களைவிட்டு கடைத்தேறும் வழிவந்தடையின் அவன் (சிவஞானவன்) எல்லாப் பொருளுமாய் எங்கணுமாய் நீக்கமற நின்றநிலையினைப் பொருந்தி யறிதலானும் (மயக்கத்தினைச் செய்யும் மலத்தினது அழுக்கானது சிவத்திடம்அச்சிவமேயாம். ஒளிமுன் இருள்நிற்றல் யாண்டும் இலையன்றோ!) மாறுதலையுறும் என்பதில்லை ஆணவமலமானதும் மாயாமலமானதும் மாறிமாறி வரல் இயற்கைத்தாம். இவற்றிற்கெல்லாம் கருணைவடிவினனாகிய சிவபெருமான். அருள் பெற்றால் ஆன்மாவினையநாதியேபற்றி யுள்ள மூலமலமாகிய அந்த ஆணவமலத்தின் உண்மைத்தன் மையுணர எளிது. உன்னுடைய ஆன்மஞானம் அதனையறி தற்கு அருமையுடைத்து என ஆசிரியர் மாணவகனுக்கு உபதேசித்தபடி—எ-று.

ஓதுமிருண் மூலமல மொழிப்பதற்கு மாயா
உபாதிசெறித் திடுமருளா லிருளிலொளி யொப்ப

போதமெழும் போகநுகர் பொருட்டாக முன்னர்ப்
புகன்றமல முயிர்ப்பொருளைப் பொருந்தாமன் மறைக்கும்
பேதமுறு மிவையிருளும் வெளியுமெனும் பெற்றி
பெறுமிறைவன்மலமலத்தான் அன்றிகட்கலையின்
மீதிலுவர் சாணிமலி வித்ததற்கு வெண்மை
விரவுவித்தல்போலுமெனவிதித்துரைப்பர் மதித்தே. (30)

(இ-ள்) கூறப்பட்ட இருள் மயமாகிய ஆணவ மலம் நீங்கப்பெறற்கு மாயாமலத்தின் உபாதிகள் செறிந் திருக்கப் பெறும்; அருளினுல். இருளில் ஒளிபோல அறிவு எழும்பியிடும். போகந்துய்த்தற்காரணமாக முன்னர்க் கூறப் பட்ட பாசங்கள் உயிர்ப்பொருளை (ஆன்மாவாகிய வஸ்து வினை) ப்பற்றியறியாவாறு முனைப்புடன் மறைத்தலைச் செய் யும். வேற்றுமையுற்ற இவை இருளும் ஒளியும் என்று கூறும் தன்மையினைப் பெறுநிற்கும். அநாதி மலமுத்தனுகிய பரம் பொருளாம் இறைவன், மலத்தினை மலத்தினுலன்றிப்போக் கலாகாவாறு ஆன்மாக்கட்குற்ற பாசங்களைப் பொருத்திக்கழு வுவன். எதுபோலும் என்னில், அழுக்காகிய இடமகன்ற ஆடையினிடத்து உவரும்சாணியும்போட்டுப்பேர் அழுக்கின தாக்கி மீண்டும்அவ்வாடையினுக்கு வெளுப்பினையுண்பித்தல் போலும் ஆம் என்று ஆகமக்கலைவல்ல அறிஞர்கள் கூறுவர் எ—று. மதித்து—ஆராய்ந்து, விதித்து—விதித்தலைச்செய்து ஆடையொலிப்போன் ஆடையின் அழுக்கினைப்போக்கற்கு உவரும் சாணியுங்கலந்த நீரிற்றேய்த்து மிக்க அழுக்கினை யுடையதுபோலாக்கிப் பின்னர் ஒலித்து முன்னைய அழுக்கும் போக்கியாடையினை வெளிப்புறச்செய்தல் கண்கூடு. இதனையு பமேயத்துடன் இயைத்துக்காணல் வேண்டும்.

நாடரிய வுணர்வாகி யொளியாய் விந்து
நண்ணியுள மகலாத நாத மாகி
நீடுமது சூக்குமைபை சந்திவரு ணங்கள்
நிகழுநெறி யுள்ளொடுக்கி மயிலண்ட நீர்போற்
கூடியிடு முணர்வாகிச் சிந்தைசெயு முயிர்கட்
குய்க்குமுருத்தெரித்துணர்வாய்க்குமிறுதன்மத்திமைதான்
கேடதற வுதானனொடு கெழுமியசொற் பொருள்சேர்
கேள்வியுமாய்ப்பிறர்செவிக்குக்கேட்பதுவைகரியே.(31)

(இ-ள்) ஆராய்ந்தறிய வொண்ணு அறிவு ஆகி. ஒளியாகி விந்து தத்துவத்தினைப் பொருந்தி மனத்தத்துவத்தினை விட்டு நீங்காத நாததத்துவமாகி உயருமது (அந்நாதமானது) சூக்குமை பைசந்தி எழுத்துக்கள் எழும்பி யொலிக்கும் வகையினை யுள்ளொடுக்கி மயில் முட்டையில் உள்ள கருவில் பல வர்ணங்களை (நிறங்கள்) யுடையநீர்போல யாவற்றொடுங்கூடும் அறிவுடைத்தாகிச் சித்தித்தலைச்செய்யும் உயிர்கட்குச்செலுத்தும் ஒலிவடிவினைத் தெளிவித்து அறிவாய்க்குமுறுதல் மத்திமையாகும். இம்மத்திமையானது பத்துவகையான வாயுக்களில் கேடில்லாதவாறு நிலவ உதானன் என்னும் வாயுவினொடு பொருந்திய சொல்லும் பொருளும் சேர்ந்த கேள்விக்குரிய ஒலியாய்ப் பிறருடைய காதுகட்கு கேட்டலைச் செய்யுமதுவைகரியாகும் என்றவாறு.

விந்துவினின்று நாதமும், நாதம் மனத்துடன் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரிவழியாக ஆகாயத்தின் குணமாகிய செவிப்புலனும் அணுவாகி வருணங்கள் (எழுத்துக்கள்) வரலை விளக்கியவாறும்.

ஈங்கிவைமற் றுயிர்போக நுகர்வதற்குத் தக்க
வெய்தியிடும் வித்தாதியை வாதமா லென்பர்
யோங்குமலஞ்சிறிதொதுக்கித்தொழில்விளைக்கு
மாயை
யுற்றகலை வித்தைவிட யங்களிலே யுயிருக்
காங்கறிவு விளங்கும்வகை யெழுப்பியிடு மராகம்
ஆசையினை யளவுபடா தடைந்தாலு மடையாய்ப்
பாங்குபெற வமையாத பண்பளிக்கு மிதனாற்
பயின்றிருமூ வகையுருவு பரனருளாலுயிர்க்கே. 32

(இ-ள்) இம்மண்ணுலகாகிய இவ்விடத்தே பந்தபாசத் தடையுடைய உயிர்வருக்கங்கள் வினைகளான் வந்த தனுகரணங்களைக் கொண்டு போகங்களை அநுபவித்தற்குரிய அறிவுகளையுற்றடையும் வித்தை முதலியவற்றை வாதம் (வாயு) ஆகும் என்றுரைப்பர். இதற்குமேல் உயர்ந்த ஆணவ மலத்தைச் சிறிதுநீக்கி, கன்மமலம் செயலைச் செய்விக்கும். மாயாமலமானது, அடைந்த கலைவித்தை விடயங்கள் (பஞ்சப் புலன்கள்) ஆயவற்றில் ஆன்மாக்கட்கு அவ்விடத்து அறிவானது நன்குவிளங்கும் வகைத்தாக எழுப்புதலைச் செய்யும்; அராகதத்துவமானது, கண்டு கேட்டுண்டு யிர்த்துற்றறியும் ஆசைகளை எய்தியடைந்தாலும், முறையாய் (ஒழுங்காக) பண்புபெறப் பொருந்தாத பண்புகளையளித்திடலைப் புரியும். இப்பெற்றியினால் அறிவு இச்சை தொழில் கலை வித்தை யராகம் ஆயவற்றில் பயின்று இருமூவகைத்தாம் உருக்கள் பரமேசுவரன்றிருவருளான் உயிர்களுக்குவரும். எ-று பரன்—மேலானவன், அருள்—கருணைநிலை.

நீணிலமீ தினிலரச னணையெனக் கன்ம
நிச்சயித்துத் தனதளவி னிறுத்துவிக்கு நியதி
காணலருங் கழிகால நிகழ்கால மெதிருங்
காலமெனு மிவையெல்லாம் பலபுதுமை காட்டும்

பூணமுறு பொறிகடொறு மிறையிலொரு நிலையே
போல்வருதல் புருடனெனப் பகன்றிடுவ ரிதற்குப்
பேணவரும் பஞ்சகலா சொரூபத்தா லன்றி
பிறிவிலதென் ருகமநூல் பேசுந் தானே. (33)

**(இ-ள்)** இப்பெரிய பூமியினிடத்துப் பேரரசன் கட்டளையென்று கன்மமலமானது உறுதிசெய்து (எல்லைப் படுத்தி) தன்னுடைய அளவின்கண் நிலைபெறுத்துவிக்கும், நியதிதத்துவம் ஆகும். காண்டற்கு அருமையவாகிய இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆம்காலங்கள் என்னும் இவற்றினையெல்லாம் பல புதுமைகளாக் காண்பிக்கும் காலதத்துவமாகும். மேற்கொள்ளுதலைப்புரியும் பொறிகளாகிய இந்திரியங்கள் தோறும் தலைமையில்லாத ஒருதன்மைத்தேபோல் வருதல் புருடதத்துவமெனப் புகல்வர் கலைஞர். பேணுதலைப் பொருந்தி வரும் பஞ்சகலைகளாகின்ற வடிவத்தினுலல்லாமல் பிரிவினையுடையதன்றென்று சிவாகமநூல் செப்பியிடும். எ-று தான், ஏ. அசை நிலைகளாம்.

மூக்குணத்தின் சேர்வாய பகுதிதிரி குணமா
மொழியிலவை சாத்துவித ராசததா மதமாம்
அக்குணங்க ளோரொன்றி லிரண்டிரண்டு குணங்கள்
ஆகியவை யொன்பானு மாருயிர்ப்பா லணைந்திட்டு
ஒக்கவரு புலன்களிடத் துறுபயன்க ளெல்லாம்
உற்றிடுதற் கிடமாகி யுணர்விலொளி யாகுந்
தோக்கவிட யங்கடொறு மொருமைபல விதமாய்த்
துணிவுதரு மதுபுந்தி யெனவுரைப்பர் துணிந்தோர் (34)

(இ-ள்) மூன்று குணங்களின் அடைவாகிய மூலப் பகுதி, மூன்று குணமாகக்கூறின் அவை சாத்துவித இராசத தாமதங்களாகும், அக்குணங்கள் ஒவ்வொன்றில் ஏனைய இரண்டுகுணங்களும் பொருந்தியுறலால் ஆகியவை ஒன்பதும் அரிய உயிர்களிடத்துச் சேர்ந்திட்டு, ஒருசேர வருகின்ற விடயங்களிடத்து வந்துறும் பயன்களெல்லாம் (நலமெல்லாம்) வந்தடைதற்கு ஆதாரமாகி அறிவில் பிரகாசமாகும். ஒருசேர விடயங்கள்தோறும் ஒன்றுபலவும் ஆகிய வகையாய்த் துணிவுதருதல் புத்திதத்துவமாகுமெனக் கூறுவிப்பர் ஆகம நூற்றுணிபுடையோர், என்றவாறு.

ஒன்பான்குணங்களாவன:— சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் இராசதம், சத்துவத்தில் தாமதம், என்பனவும் இராசதத்தில் இராசதம் இராசதத்தில் தாமதம், இராசத்தில் சத்துவம் ஆயவும், தாமதத்தில் தாமதம், தாமதத்தில் இராசதம் தாமதத்தில் சத்துவமும் ஆம்.

இல்லாத தனைப்பண்ணி யானெனதிங் கெழுப்பி.
யென்னையொப்பர் புவியின்கண் யாருமிலை யென்றே
பொல்லாத வாங்காரம் புணர்ந்துயிரி னிற்கும்
புலன்கடொறு மிந்திரியம் பொருந்துமுனமுந்திச்
செல்லாநின் றிடுமிச்சை வடிவாகி யென்றுஞ்
செலலாகிப் பரவையினிற் செறியுமனஞ் சிந்தை
நில்லாத பொருளின்கட் டுணர்வாகி யைய
நீடியிடு மென்றுமிக நிகழ்த்து நூலே. (35)

(இ-ள்) இல்லாததனை யுளதெனப்பண்ணி அகங்கார மகாரங்களாகின்ற யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் எழுப்பி, என்னை யொப்பவரும் பூமியினிடத்து ஒருவருமிலர் என்றே கூறும் கொடிய ஆங்காரம் பொருந்தி உயிர்கடோறு நிற்கும் விடயங்களிடத்து . பொறிகள்

பொருந்து முன்னர் முற்பட்டுச் செல்லுதலைச் செய்யும் இச்சை வடிவாகி எப்பொழுதும் போதலைப் புரிவதாகி உலகத்திடத்துப் பொருந்தும் மனம் சித்தத்திடத்து நிலை பெறாத பொருள்களின் கண்ணதாய் அறிவுடைமையாகி ஐயம் (சந்தேகம்) நீளுதலைப் பொருந்துமென்று நூல்கள் நுவலா நிற்கும் எ—று நில்லாத பொருள்—நிலையிலதாகிய பொருள்.

சாற்றுசெவி துவக்குவிழி நாக்கு மூக்குத்
  தன்னிலடை விடயவிடை யுன்னியிடி லவைதாம்
மாற்றருஞ்சத் தப்பரிச ரூபரத கெந்தம்
  மன்னியிடு முறைமுறையே வாக்குப் பாதம்
மாற்றரிய பாணிதரு பாயுவிஞே டுபத்தம்
  மன்னியிடு மஞ்சுக்கும் பகர்வசன கெமனம்
ஊற்றமிகு தானவிசர்த் தானந்த மைந்தும்
உறுதொழிலென் றறுதிபெற வுணர்த்து நூலே (36)

(இ-ள்) கூறப்பட்ட காதுகளும் மெய்யும் கண்களும் மூக்கும் நாக்கும் ஆயவைகளிடத்தில் பொருந்துகின்ற புலன்களிடத்துக் கருதியிடில், அவைகள் தாம் மாற்றற்கரிய சத்தமும் பரிசமும் உருவமும், இரசமும், கந்தமும் நிலைபெறுதலையுறும். முறைமுறையாகவே வாக்கும் பாதமும் வேறொன்றிற் பொருந்தாத கையும் பாயுவும் உபத்தமும், (எருவாய் கருவாய்) ஆகப் பெற்ற கருமேந்திரியங்கள் (தொழிற்பொறிகள்) ஐந்தினுக்கும் முறையே பகரும் மொழியும் செலவும் பெருக்கமிகு கொடையும், மலசமலம்விடலும், இன்பமும் ஆயவை ஐந்தும் பொருந்திய செயல்கள் என்று முடிவுற நூல்கள் நுவலா நிற்கும். (அறிவுப் பொறிகள் ஞானேந்திரியம் எனப் பெயர் பெறும்.) எ-று.

மேதகுமைம் பூதவழி னைம்பொறிக ணின்று
விடயங்கண் மேவுநெறி விண்ணதனிற் செவியின்
வாதமூறுந் துவக்கெரியில் விழிபுனலி னுமண்
மருவியிடு நாசியினில் வருபுலன்கொள் வகையாற்
போதமுறப் பொருந்தியிடும் வழுவாமன் முன்னர்ப்
பூதங்கள் ஐந்துமுறப் புணர்ந்துயிரி னிற்றல்
ஒதியிடிற் கடினமுத லாகமுறு மென்றிட்
டுணர்ந்திடுவ ருபாதியெலாந் தணந்துளோரே 37

(இ-ள்) மேம்பட்ட ஐம்பூதங்களினிடமாகப் பொறிகள் நிலைத்துப் புலன்கள் பொருந்தியிடும். அங்ஙனம்பொருந்து நெறி விண்ணிடத்துச் செவியின் வழியாகச் சத்தமும் (வாயு) வளி வழியாக மெய்யினைப் பொருந்திப் பரிசமும், தீயினிடமாக கண்களிற் பொருந்தி உருவமும், நீர் வழியாக நாவினைப் பொருந்திச் சுவையும், மண்ணாகிய பூதத்தின் வழி மூக்கினைப் பொருந்தி மணமும் அறிவுப் புலன்களாக வந்துறும். தவிராமல் முற்படப் பூதங்களைந்தும் நன்றாகக் கலந்து உயிரினிடத்து நிலைபெறல் கூறிடிற் கடினமுதல் உடலினைப் பொருந்தி யுற்றிடும் என்றே யறிவர். பிறவித துன்பங்கட் கேதுவாய வினைகளை நீங்கப் பெற்றசீவன் முத்தர் எ-று.

கடினமுதலாக முறும் என்பதனை கமனம் முதல் ஆக முறும் எனப் பாடமோதி தொழிற் பொறிகளின் புலனாகிய வசனித்தலையும், செல்லுதலையும், கொடையையும், மலசலம் விசர்ச்சித்தலையும் ஆனந்தத்தினையும் உடலிடமாக ஐம்பூத வழியாக வந்துறும் எனப் பொருள் கோடலுமாம். தணத்தல்—விடல், நீக்கல்.

புறத்துநிரந் தரமாகி யிடங்கொடுக்கும் வானம்
பொற்பறுகால்சலிப்பினையுற்றெப்பொருளுந் திரட்டும்
நிறத்தின்மிகுந் தழலதுசுட் டொன்றுவித்து நிற்கும்
நீர்குளிர்ந்து நெகிழ்ச்சிதரும் நிலனுரத்துத்தரிக்கும்

திறத்தவிதன் றொகையுரைக்கிலைஞ்சேழெனமூன் றுஞ்
செப்பலருஞ் சுத்தஞ்சுத் தாசுத்த மசுத்தம்
பிறத்தலகன் றவர்முப்பத் தாறெனவே விதனைப்
பேசிடுவர் மயக்கமறப் பிறித்தருளி னின்றே 38

(இ—ள) வெளியில் எப்பொழுதும் உளதாகி ஆகாயம் ஏனைய பூதங்கள் விரிதற்குக் காரணமாக இடங்கொடுத்திடும் உரு இல்லாத காற்றானது உளர்தலைப் பொருந்தி (அசைந்து) அனைத்துப் பொருள்களையும் ஒருசேரக் குவித்தலைச் செய்யும் நிறத்தினால் மேம்பட்ட நெருப்பானது சுடுதலைச் செய்து ஒன்றாகப் பொருந்தச் செய்யும், தண்ணீரானது (அப்பு வெனும் பூதமானது) இளகுதலைப் பொருந்தி நிற்கும், பூமி யானது (பிருதிவி) வன்மையுற்று அனைத்தினையுந் தாங்கி நிற்கும். இங்ஙனம் வகைப்பட்ட இப்பூதங்களின் தொகை யினை யுரைக்கில் ஐந்தும், ஏழும், மூன்றும், ஆன்ம தத்துவங் களும், வித்தியாதத்துவங்களும், சிவதத்துவங்களும், ஆயவைமூன்றும் சுத்தம்சுத்தாசுத்தம், அசுத்தம்எனப்பிறத் தலாகிய பிணியற்ற சீவன் முத்தர்கள் முப்பத்தாறு தத்துவங் களாக இத்தத்துவங்களைக் கூறுநிற்பர். மயக்க நீங்க ஒவ் வொன்றினைப் பிரித்து அருட்டன்மையினின்று இவ்வா றுரைப்பர். மாயை, சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம் என மூவகைப்படும். காலம், நியதி, கலை, வித்தை, அராகம் புருடன், மாயை என்பன ஏழாகும். பிறத்தல் அகன்றவர் பிறவிப் பெரும் பிணிக்குக் காரணமான வினைகள் ஒழியப்பெற்றவர் (எ-று)

பகர்ந்திடுமிக் கருவிகளி லுயிர்மயங்கின் கன்மப்
பயனருந்தி வருமுருவம் பாறிடும் போதரவு
திகழ்ந்திடு மண்டசங்கள் பரகாயச் சேறல்
செற்றியதொன் றுடல்விட் டகலுஞ்செயல் போல

அகந்திகழும் கலாதிதரு மறிவுதொழி லிச்சை
யாகியசூக் குமவடிவில் அருநிரயந் துறக்கம்
புகுந்துவினை நுகர்ந்துபர னருளான் மண்ணிற்
பொருந்தியிடு மெனமறைகள் புகலு மன்றே 39

(இ—ள்) கூறப்பட்ட மாயாகாரிய மாகிய கருவிகளி னிடத்து உடலோடு உயிர் பொருந்திடின் (தனுகரணங் களுடன் கூடின போது) வினைகட்கீடாக வந்த கன்மப் பலன் களாகின்ற போகங்களை நுகர்ந்து வரும் உருவம் சிதறுண்ட லைச்செய்யும். வருதலையும் புரியும் ஆன்மாக்கள், (அஃது எது போல என்னில்) முட்டைகள் வெடித்து வெடிக்கப்பட்டன வற்றினை விட்டு வேறுடல் உடன் செல்லுதல் போலவும், நெருங்கிச் செறிந்த தொன்றினை யாடுதலைப் புரியவிட்டுத் தான் அதனைவிட்டு நீங்குதல் போலவும் ஆம். உள்ளத் திடத்து விளங்கிடும் கலை வித்தை முதலியன, தரும் அறி வும் செயலும், விருப்பமும், (இச்சை ஞானம் கிரியை) ஆகிய சூக்குமவடிவில் (நுண்ணிய உருவில்) கொடிய நரகத் தின்கண்ணும் நல்லசுவர்க்கத்தின்கண்ணும் சென்று பாவ புண்ணியங்களால் வந்த துன்ப இன்பப்பயன்களை நுகர்ந்து (சலிப்புற்று) [பருவுடல் நீங்கி நுண்ணுடல் தாங்கி யநுப விக்குநிலை] வினைப்போகங்களில் வெறுப்புற்று வந்தபோது அநாதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருளின் கருணையி னால் மீண்டும் அவ்வவ்வுலகங்களினின்றும் நீங்கிக் கர்மபூமியா கிய மண்ணுலகினையுற்றுத் தோன்றியிடும், உயிர்கள். அது காலை இறைவன் கருணையினால் உடலினையும் கருவிகளையும் அவ்வுயிர்கட்கு அளிப்பன் என வேதங்கள் விளம்பியிடும். அன்று ஏ. அசை நிலைகள் (எ—று) அரவு சட்டை நீக்குதல் போலவும் பரகாய பிரவேசஞ்செய்தல் போலவும் உயிர்கட்கு

கூத்தன் என்னும் நாமமுளதாதல் பற்றி உடலினிடத்து ஆடிக்கொண்டு நின்று நன்னூரிற்கட்டிய சூத்திரப்பாவை போலப் பின்னர் விலகியாடாமல் விட்டுப்போதல் போலவும் என விளக்கங்காணல் வேண்டுமெனத் தோன்றுகின்றது.

யோனிவகை யெண்பத்து நான்குநூ றென்று
ஓதிலவை யண்டசநற் சுவேதசமுற் பீசம்
ஆனசரா யுசநான்கிற் றுபரம்பத் தொன்பான்
அமரர்பதி ஞென்றூரும் அவைபதி னைந்தா
வானமுறும் பரவைநீர் வாழ்வன நாற்காலி
வகைபத்தா மனிதர்வகுப் புரைக்கி லொன்பான்
ஈனமற முன்னுரைத்த தொகைவகையீ தெனநீ
யேற்றியுனக் கிசையவறி யிவையனைத்து மன்றே (40)

(இ-ள்) உயிர்களின் பிறப்புவகை எண்பத்துநான்கு நூறுயிரம் என்று கூறினல் அவைகள் அண்டசமும் சுவேதசமும், உற்பீச்சமும், பொருந்திய சராயுசமும் ஆகிய நால்வகைத் தோற்றங்களும், ஆம் எழுவகைப் பிறப்புக்களும் இந் நால்வகைத் தோற்றத்தினிடத்தும் தோன்றியிடும் (1) தாவரம் பத்தொன்பது நூறுயிரயோனி பேதங்களும், (2) தேவர்கள் பதினேருநூறுயிரயோனி பேதங்களும், (3) ஊர்வனவாயுள்ளன. பதினைந்நூறுயிரயோனிபேதங்களும், (4) பறவைகளும் (5) நீர்வாழ்வனவும், (6) விலங்குகளும் வகைக்குப்பத்துப்பத்து நூறுயிரயோனி பேதங்களும் (7) மனிதர் ஒன்பது நூறுயிர யோனிபேதங்களும் குற்ற நீங்க முன் சொல்லப்பட்ட எண் பத்துநான்கு நூறுயிரயோனி பேதங்கள் என்பதாம் மாணவக நீ அறிவினிடத்துப் பொருத்தி நினக்குப் பொருந்த அறிவாயாக இவையெல்லாமும். அன்று ஏ-அசைநிலைகள் (எ—று)

தொல்லையவிப் பிறவிகளில் இறந்துபிறந் தளவில்
துன்பமுட னின்பங்க டுய்த்ததனுற் கன்ம
வெல்லையற வீட்டியதற் கீடான வாக்கை
யெடுத்தெடுத்தவாக்கைதோயமிரண்டறவேநின்று
ஒல்லையுறுகருவிதொறுமொருநிலைபோற்றெருமந்(து
உறுபயன்கள் நுகர்ந்தொழிவில் லிதமகிதமுருவாய்ச்
செல்லுமது சகலமெனப் புகல்வரருட் கடல்வாய்ச்
சேர்ந்துசிவா னந்தவமு தார்ந்துளோரே. (41)

*(இ-ள்)* அநாதியாகவுள்ள இவ்வுயிர்த் தொகைகட்குப் பழமையதான இப்பிறப்புக்களில் செத்தும் பிறந்தும் எல்லையற்ற துன்பங்களையும் இன்பங்களையும் நுகர்ந்ததனுல் கன்மவினைகளை முடிவில்லாதவாறு செய்து அங்ஙனம் ஈட்டிய வினைகட்கேதுவாக உடலினையெடுத்து அங்ஙனம் எடுத்த உடலானது நீரும் நீருங் கலந்தாற்போல ஒன்றுக நின்று விரைவாக உற்ற கருவிகள் தொறும் ஒருதன்மைப்போலச் சுழன்று, அதனுல் உற்ற பயன்களை அநுபவித்து நீக்கமில்லாத இன்ப துன்ப வடிவாய்ச் செல்லுவதானது சகலம் எனப் புகல்வர். கருணைக் கடலிடத்துச் சிவானந்தமாகிய அமிருதத்தினையருந்தியுள்ள சிவஞானிகள் (எ—று) இதம்—இன்பம், அகிதம்—துன்பம், சிவ ஆனந்தம்—சிவானந்தம், ஆர்தல்—அருந்தல், உறுபயன்—மிகுபலன்கள், அருட்கடல்—உருவகம் ஆக்கை—யாக்கையென மருவிற்று.

இருவினைகள் புரிந்தருந்தி யெண்ணில்வினை யீட்டி
யின்பமொடு துன்பமுறு மெல்லையினி லுளதாம்
பெருவினைகளிரண்டு மொருகாலமுறு திகைப்பிற்
பெய்தவினை யெய்தும்வினை செய்திவர்பி றந்திட்)

ஒருவியிடு நிலையதனால் வினைகள் துலை யொப்ப
வொன்றுபடக் கெடுப்பதுபோ னின்றதி ரோதாயி
கருணைதர வன்னிலய விதமகித மாகக்
காட்டிடுசத் திநிபாத நீட்டு மன்றே. (42)

(இ-ள்) நல்வினை தீவினைகளைச் செய்து போகநுகர்ந்து, மீண்டும் கணக்கற்ற வினைகளைச் செய்து, இன்பமும் துன்பமும் வந்தடையும் முடிவின்கண் உள்ளதாகும். பிறவிப் பெரும் பிணிக்கேதுவாய் அப்பெருவினைகள் இரண்டும், ஒரு காலத்தில் மிகவும் திகைத்திட்டத்தினால் ஆகாமிய சஞ்சிதங்களினால் வந்துற்ற வினைகளைச் செய்து பின்னர் இவற்றினை யாற்றினவர் பிறந்திடலைச் செய்து அவ்வினைகள் நீங்கப் பெறுவர், அங்ஙனம் வினைப்போகம் ஒருவிய நிலையதனால், வினைகளானவை தராசுத்தட்டின் நடுநிலைபோல ஒருசேரக் கேட்டினைப் புரிவதுபோலநின்றது திரோதாயியாகும். அருள்தர அக்கினியில் ஒடுக்கம். இதமும் அகிதமும் ஆகக்காட்டியிடல் சத்திநிபாதமாக நீளுதலைப் பெறும். அருட்சத்திபதிதலே சத்திநிதபாதமாம். இறைவன்றன் கருணைவிளக்கத்தால் உயிர்கட்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகிச் சத்திநிபாத முண்டாகும்.

கூறியசத் திநிபாத நான்கு மெய்திற்
குறைவிலறை யருட்குருவாய்க் குறுகி ஞானப்
பேறுபெற்ற பொருட்டிருட்கே வுளசகலம்பிறித்துப்
பிறித்தநிலை நிகழாமற் பெருகருளி னிறுத்தி
வாறுமே லச்செல வினித்தம்வழா வகையால்
வாழவா வுயிர்க்குமலம் வாட்டிடுதல் சுந்தந்
தேறும்வகையிவையுணர்த்தற்காவதெவர்க்கென்னிற்
றீவிரருக் கென்றுமறை செப்பு மன்றே, (43)

(இ-ள்) சாத்திரங்களிற் கூறப்பட்ட சத்திநிபாதம் நான்கும் அடைந்திடில் (சத்திநிபாதம் நான்காவன: மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்பன) குறைவிலதாகிய நிறைவைக் கூறியருளுகின்ற ஆசாரிய புருடனுகி அணுகி அறிவுப்பொருளைப் பெற்ற காரணத்திற்கு, இருட்டினுக்கே உளதாகிய சகளத்தன்மையினைப் பிரிவுறச்செய்து அங்ஙனம் பிரித்தநிலை நிகழாவாறு மிகவும் வளரும் அருளினிடத்து நிலைபெறுத்தி. அங்ஙனம் நிறுத்தியவாறு மேலே அச்செலவின் நாடோறும் வழுவாத வகையினுல் வாழ்க்கைக்கு அவா வந்துற உயிரினுக்கு ஏற்பட்டுப் பாசத்தடை கெடுமாறு புரிதல் சுத்தமதாம். தெளியும்வகை இவையறிவுறுத்தற்காவது எவர் பொருட்டு என்னில்? தீவிரம் உற்ற சத்திநிபாதருக்கு ஆகும் என்று மறைநூல்கள் அறையா நிற்கும். எ-று

பாவையர்கட் படும்வீடு பஞ்ச கந்தம்
பாழ்படும்வீ டிருவினைகள் பாறும்வீடு
மேவுகுணங் கெடும்வீடு விவேக வீடு
மேனிநிலை வீடுமலம் வீயும் வீடு
ஓவிலுயிர் கெடும்வீடு சித்தி வீடு
உடல்கேடு பாடாண முற்றிடும்வீ டென்ற
யாவுமிருள் செறிவீடு சிவனுரு ளெய்தி
யிரண்டறும்வீ டதுவீடென் றியம்பு நூலே (44)

(இ-ள்) இதுவீடாகிய முத்தியின் இலக்கணம் இயம்புகின்றது. பாவைபோலும் அழகினையுடைய மகளிர்தங் கண்களினின்றும் விடுபடலே வீடாகும், பஞ்சேந்திரியங்கள் பஞ்சப் புலன்களைப் பாழ்படுத்தி ஐந்தவாக்களினின்றும் விலகி நிற்றலேவீடாகும், நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும்சிதறவுண்ணப்பெறலே வீடாகும், பொருந்திய முக்குணங்களும் கேடுறலே வீடாகும். பசுபாச அறிவு நீங்கப்பெறலே வீடாகும், பொருந்திய ஆச்சிர தருமங்கள் விட்டொழிதலே,

வீடாகும், மலங்கள் நசிக்கப்பெறலே வீடாகும், ஒழிவற்ற உயிர் உடலினைவிட்டுக் கேட்டினை யுறலே வீடாகும், அட்டமாசித்தி அடைதலே வீடாகும், உடல் அழிந்து பாடாணத் தன்மையடைவதே வீடாகும் என்று மதவாதியர்தம் கூறுவன அனைத்தும் அஞ்ஞானமயமாகிய இருள்செறிந்த முத்தியாகும் (முத்தியெனும் பெயருஞ்சூட்டிடினுகாதாம்). இறப்பும் பிறப்புமிலனாகிய எட்டுக்குணங்களுடைய சிவபெருமான்றன் திருவடிகளை அடைந்து, இரண்டற்ற அத்துவிதநிலையுறலே மோட்சமாகும் என்று முதனூல்களாகிய வேதாகமங்கள் விளக்கமுறக் கூறிடும். எ-று.

### வேறு

சொற்றன னருளி னுண்மை
சொல்லுவ னுயிரின் றன்மை
யுற்றிடு மைய வத்தை
யுணர்த்துதல் ஞான வாய்மை
தற்றெரி சனந்தற் சுத்தி
சாற்றரு மான்ம லாபம்
அற்றமி லஞ்செ ழுத்தோ
டணைந்தவர் தன்மை தானே. (45)

(இ-ள்) மாணவ! உன்றனக்கு முத்தியிலக்கண முதலியனவும் நன்கெடுத்து நவின்றேன். இனி, கருணையினாலே தத்துவவுண்மையினைச் சாற்றுவன். உயிர்களுடைய இயல்கள், இவையடையும் ஐந்து அவத்தைகளை அறிவுறுத்தல், அறிவு வாய்மை ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மாவின் பலன் ஆயவைகளே அற்றமில்லாத் திருவைந்தெழுத்துடன் செறிந்தவர்தம் தன்மைகளாம். (எ—று) தான் ஏ. அசைநிலைகள்.

அவையவ மதனு ளெய்தி
　　　ஐம்புலன் பொறியாற் பற்றி
யவையவை யாக வுற்றுற்
　　　றறியினு மறியுஞ் செய்தி
யெவையுமற் றவத்தை யெய்து
　　　மெய்தினு மதீத முண்மை
நவையறு முயிருக் கென்று
　　　நாட்டுவர் வீட்டி னின்றோர். (46)

(இ-ள்) உறுப்புகளிடத்து, அடைந்துசுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் ஆகிய ஐந்துவிடயங்களையும் மெய்யும்வாயும் கண்ணும் மூக்கும்செவியும் ஆகிய ஐந்து இந்திரியங்களும் பற்றுதலைச் செய்து அவற்றினை யவைகளாகவே பொருந்தி, பொருந்தியறியுஞ் செயலானது யாவையும் நீங்கி அவத்தையினை யடையும். அங்ஙனம் அடையினும் அதீதமாகியநிலை யுளதாதல் குற்றமற்ற உயிர்கட்கு உண்டு என்று நிரதிசயவின்பமாகிய வீட்டினில் நிலைபெற்ற சீவன் முத்தர்கள் நிலைநாட்டுதலைப்புரிவர். (எ-று)

புரமறி விலாமை யானும்
　　　புலன்றெறு மறித லானும்
கரணநான் கதனி லுற்ற
　　　வவனது கவர்த லானும்
சரமுறு பிராண வாயுத்
　　　தான்சட மாத லானும்
உருவுறு சேத னன்றான்
　　　உணர்வினு லுணரு மன்றே. (47)

(இ-ள்) உடலானது அறிவிலது ஆகையானும் ஆனல் உடலினிடத்துள்ள பொறிகள் (கருவிகள்) விடயந்தொறுஞ் சென்று உற்றறிதலானும், மனம் புத்தி சித்தம் ஆங்காரம் எனும் உட்கருவிகள் நான்கனுள் பொருந்தியுள்ள அச்சீவன் அதனைப்பற்றுதலானும் அசைதல் பொருந்திய பிராண வாயு வானது சடம் (அறியாமை) உடைமையாலும் உருப்பெற்ற அறிவன் ஆகிய ஆன்மாவானது அறிவினுல் அவற்றினை யறியுமாம் (எ-று) அன்று, ஏ—அசைநிலைகள்.

போதமேற் பொறியென் போத
 மன்றெனிற் புலன்க ளார்க்குப்
போதநின் றுதவு மென்னிற்
 புகன்றவை சடங்க ளாகு
மாதியிங் குயிர்க்குப் போத
 மளிப்பனென் றறையி லாவி
சேதன மன்று மண்ணல்
 செடத்தினுக் கறிவி யானே. (48)

(இ-ள்) அறிவினிடத்துப் பொறிகள் (இந்திரியம்) யாது? அறிவானது இல்லை யென்றுல் விடயங்கள் (புலனு கவின்புலனெனப்பட்டது பொறிகளுக்குப் புலனுதல்காண்க.) யாருக்கு அறிவு நின்று உதவிபுரியும் (துணைசெய்யும்) என் றுல்? கூறப்பட்டவை அறிவற்றவையாகும். ஆதியாகிய பரம் பொருள் அறிவுமயமாகிய ஆன்மாக்கட்குப் போதம் அருளு வன் என்றுரைப்பின் உயிர்கள் அறிவுடைமைத்தன்றுக முடி யும். பரமேசுரன் அறிவற்ற பொருட்கு அறிவிக்கவும் மாட் டான். புலன்களானவை யாருக்கு அறிவுநிலைத்து உதவும் எனவும், (என்போதம் என்னறிவு.) என்னறிவு இல்லை. யென்னில் புலன்களார்க்குத் தாமாகவே உணரும் ஆற்றல் இல்லையென்றுய் முடியும். எனவும், பொருள் கோடல் வேண்டும் எனத் தோன்றுகின்றது. (எ-று.)

போதமே தறிந்த வந்தப்
 பொருள்சட மாதல் திண்ணம்
போதமெய் யறியா தாகிற்
 பெறுபொருள் பொய்பு கன்ற
போதமே யருளை முந்திப்
 பொய்யினை மெய்யாக் காணும்
போதமெய் யசத்து மற்றப்
 போதநிற் புலப்ப டாதே. (49)

(இ-ள்) போதமாகிய உணர்வு எது? உணர்ந்த அந்தப் பொருளானது அறியாமையினை யுடைத்தாதல் உறுதியாம். போதமானது மெய்யினை யுணராது ஆயின், பெற்ற பொருளைப் பொய்ம்மையெனக் கூறிய போதமே. இறைவன்றன் கருணையினை முற்பட்டுப் பொய்ம்மையாயினவற்றினை மெய்ம்மை யுடைத்தாக் காணப்பெறும். போதமாகிய மெய்யும் அசத்தாகும். அதுவேயுமன்றி அப்போதமானது நினக்குப் புலப்படவும் செய்யமாட்டாது. (எ—று)

மற்று—அசைநிலை. நின் என்றது ஆன்மாவினை, இறைவன் அருள் விழிகொண்டு தன்னையும் இறைவன்றன்னையும் காணப்பெறும் போதமே போதமாகும். ஏனைய ஆன்ம போதம் பொய்யினை மெய்யாக்காட்டும், பாசபோதமும் அன்னவாறேயாம். போதமானது சிவபோதமும், சீவ போதமும், பாசபோதமும் ஆகும்.

‘ அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்,
 இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே ’

என்னும் அப்பர் அருள் வாக்கும்

‘ அவனருளாலே அவன்றாள் வணங்கி ’

என்னும் திருவாசக அடியும் நோக்கித் துணியற்பால தாகும். சடம்—அறிவிலது, அசத்து—இல்லாதது (அறிவற்றது) அறிவற்றது பாசம். அறிவுற்றது ஆன்மாவே. அறிவிக்க அறிவதும் ஆன்மாவே. அறிவு மயமாகி விளங்கி நிற்பது பரம் பொருளாம்.

ஏதசத் தறிந்த போத
மென்றிட லுயிரன் றெங்கோ
ஞாதியிற் றான்ச டங்கட்
கறிவில திவையு மற்றைச்
சேதனன் றானுஞ் சேரிற்
றெரியாசிற் சத்தி காணு
ஆதியுஞ் சடமு மென்னி
லருக்கனு மிருளுங் கூடா. (50)

(இ-ள்) அசத்தாகிய அறிவிலது யாது? அறிந்த போதம் என்று கூறல் ஆன்மாவன்றும். எம்பெருமான் முதன் முதலில் எப்பொருளிடத்தும் கலந்து நிற்பன் சடமாகிய பொருளுக்கு அறிவென்பது இல்லை. இச்சடங்களும் ஏனைச் சேதனனாகிய ஆன்மாத்தானும் சேர்ந்தால் அறிய மாட்டா. ஞானசத்தியும் காணல் கூடா. ஆகவே முதற் பொருளும் சடமும் என்றால்? சூரியனும் இருளும் ஒன்று பட்டிருக்க மாட்டாவாம்.

அசத்து—அறியாமையுடையது, அருக்கன் — சூரியன், உடலம் — அசேதனத்தன்மைத்தாம். இரண்டும் கூட்டக் கூடிடின் அறியுந் தன்மை யுண்டாம். பிரிந்திடில் இரண்டுஞ் சடங்களேயாம். இறைவன் றன் முச்சத்திகளுள் ஒரு சத்தியாகிய சிற்சத்தியைக் கொண்டியக்கிடின் இந்நிலையடையும். இதனைத்தான் இருளும் அருக்கனும் கூடாவென்றார். அறிவிக்க அறிபவை உயிர்கள். அறிவிப்பவன் முதற்பொருள். சடம்—பாசப்பொருள், உயிர்கள் பசுக்கள் ஆம்.

சித்தினை யசித்துக் காணு
சித்தினுக் கறிய வேண்டா
சித்தையு மசித்தை யுந்தே
... ... ...
... ... நம்முமல்லா
வான்விழி போலும் வாய்மை
சித்தினி னின்ற சித்தைத்
தேர்தலாற் சிதசித் தாமே. (51)

(இ-ள்) சித்துப்பொருளை யசித்துக் காணமாட்டா. சித்துப்பொருள் பிற பொருளை யறிய வேண்டாவாம் தானே யாவுமறியப் பெறலான், ஆகவே சித்தினையும் அசித்தினையும் தெளிந்தால் ........................ வாய்மையாகிய சித்து நின்று அசித்தினைத் தெளிதலால் சித்து அசித்து எனும் நாமம் பெறும் என்றபடி [இப்பாட்டுச் சிதைவுற்றுள்ளது]

நோக்கொளி தீப மாகி
னோக்கினுக் கொளிமுன் பில்லை
நோக்கொடு தீப பேத
நுவன்றிடிற் பிறந்து காணு
நோக்கொளி சென்று தீப
நுடங்கொளி யடங்கி னாலு
நோக்கொளி காணுந் தீப
நுடங்கொளி காட்டு மன்றே. (52)

(இ-ள்) நோக்குகின்ற ஒளியானது (கண்ணாற் காணப்படும் பிரகாசமானது) விளக்கொளியாயின் கண்களுக்கு இயற்கையாகவே ஒளியானது முன்னர் இல்லாததாகும். கண்ணொடு விளக்குக்கு வேற்றுமையை விளம்பினால் நோக்கினொளியானது தோன்றிக் காணப்பெறாதுபோய் விளக்கொளி அசைந்து அடங்கினாலும் நோக்கொளியினைக் காணப்பெறும்

தீபத்தினது அசைகின்ற ஒளியானது காட்டப்பெறும். அன்று ஏ—அசைநிலைகள். கண்ணொளிக்குத் தீபவொளி துணையாகும். கண்ணுக்கு இயற்கையில் ஒளியுண்டு. தீபத்திற்கு எண்ணெய், திரி முதலியன வேண்டப் பெறும் செயற்கை யொளியுண்டு. தீபத்திற்குக் கண்ணொளி சாதனமன்றும். கண்ணொளியானது அசைகின்ற தீபவொளியினைக் காண்பியா நிற்கும். ஒளியானது தீயின்குணம். ஆண்டுச் செயற்கை, ஈண்டு இயற்கை என்பது ஆயற்பாற்று, நுடங்குதல்—அசைதல், கண்பொறி—உடலின் ஒருவகை யுறுப்பு. ஆன்மவுணர்வால் இது காண்டலைச் செய்யும் என்க.

தங்கிய வேக தேசந்
தனுவெலா நிறைந்து நிற்றல்
எங்குமாயி ருத்த ருனே
யாவையு மாத லெல்லாம்
அங்கசித் துணர்த்த லென்ப
தறைந்திடா மறைக ளான்மாப்
பங்கற வுணர்த்தல் பஞ்ச
நிறமகல் படிகம் போல. (53)

(இ-ள்) பொருந்திய சிறிதிடத்தும், உடம்பு முற்றும் பூரணமாயிருத்தல், எல்லாவிடத்தும் ஆகியிருத்தல், எல்லாமாய் ஆகுதல், அனைத்தும், உடல் அறிவானது அறிவுறுத்தல் எனலை வேதங்கள் விளம்பமாட்டாவாம். உயிரானது குற்றமற அறிவுறுத்தும். எதுபோலவெனில் பளிங்கினில் ஐவகை வண்ணங்களும் பரந்து காணப்பெறல் போல ஆம் (எ—று) ஏகதேசம் — சிறிதிடம், தனு—சரீரம், உடல் — அசித்துப் பொருள், ஆன்மா—சித்துப்பொருள், உடலும் உயிரும் ஒன்றுபட்ட விடத்து மனமுதலிய கருவிகள் வினைகளைப் புரியும். அதுபோழ்து உடல் உணர்வு மயமாகி நிற்கும்

(அசித்து — அறியாமையுடையது) மறைந்த பொருள்களை யுடைமையின் மறையெனப் பட்டது. பஞ்சப் பொறி களுக்கும் புலனுதலை பஞ்சவர்ண மெனப்பட்டதாம். படிகம் வடமொழிச் சிதைவு, பங்கம்—குற்றம், பங்கு என நின்றது.

கரிபரி தேரோ டாளாற்
காவலன் பவனி போந்திட்டு
உரியமா ளிகையின் வாயில்
தொறுந்தொறு முற்ற காவல்
புரியவந் தப்பு ரத்துட்
புகுதல்போற் பிராண காவல்
திரியவை யவத்தை மெய்யிற்
படுமுயிர் சிவன்ற னாலே. (54)

(இ-ள்) யானையும், குதிரையும், தேரும், பதாதியும் (காலாளும்) ஆகிய நால்வகைச் சேனைகளோடும் அரசனானவன் புறவுலாவந்து தனக்குரிய அரண்மனையின் வாயில்கடோறும் நியமிக்கப்பட்ட காவலாளர் காவல்புரிய அவ்வரண்மனையின் உள்ளிடத்துப் புகுதல்போலப் பிராணன் காவலைப் புரிந்திட ஐந்து அவத்தைகளையுடைய உடலில் வினையாற் பொருந்திய (உடலினையெடுத்த) ஆன்மா சிவபெருமான் ஆணையினால் அதனைச் சார்ந்தே நிற்கும் (எ—று)

பஞ்ச அவத்தைகளாவன:— சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவாம். கீழாலவத்தை மத்தியாவத்தை, நின்மலாவத்தை வகைக்கு ஐந்தாம், அந்தப் புரம்—உள்ளிடம், பவனி—உலா, கரத்தை யுடையது கரி, பரிந்து (விரைந்து) செல்லுதலின் பரி எனவாயிற்று

நனவினின் முப்பத் தைஞ்சு
நண்ணிடு நெற்றி தன்னிற்

கனவினி லிருபத் தைஞ்சு
  களத்தினிற் சித்தந் தன்னில்
நினைவுறு சுழுத்தி மூன்று
  நீடிய துரிய நாபி
தனிலிரண் டதீதந் தன்னிற்
  சாற்றி(று) மூலத்தி லொன்றே. (55)

(இ-ள்) நெற்றித்தானமாகிய இலாடத் தானத்தில் விழிப்பின்கண் முப்பத்தாறு தத்துவங்களில் அறிவுப்பொறி யைந்தும், தொழிற்போறியைந்தும், தன் மாத்திரையைந்தும் வசனுதியைந்தும், வாயுக்கள் பத்தும், புருடன் ஒன்றுமாக முப்பத்தைந்தும் பொருந்தியிடும். கனவின்கண் (சொப் பனத்தில்) கண்டத்தில் முற்கூறப்பட்ட ஞானேந்திரிய கன் மேந்திரியங்கள் பத்தும் நீங்க, இருபத்தைந்தும் பொருந்தி யிடும். இருதயத் தானத்தில் நினைவுடன் கூடிய சுழுத்தியில் புருடனும், உட்கருவி நான்கனுள் சித்தம் ஒன்றும், வாயுப் பத்தனுள் பிராணன் ஒன்றும், ஆக மூன்றும் பொருந்தி யிடும். துரிய நிலையில் நாபித்தானத்தில் பிராண வாயுவும் புருடனுமாகிய இரண்டும் நிலைபெற்றுப் பொருந்தியிடும் துரியாதீதநிலையில் மூலாதாரத்தினில் ஆன்மா புருடனோடு பொருந்தியிடும் (எ—று) தானங்கள், இலாடம், கண்டம், இருதயம், நாபி, மூலம் என்பனவாம் நனவு—சாக்கிரம், கனவு—சொப்பனம்

எண்ணுசாக் கிராதி சொல்லி
  லிருதிற மாகுங் கீழ்மேல்
நண்ணுசாக் கிராதி யாக
  நவிலுமுற் பவத்தை யொன்று
பண்ணுமொன் றருளி லுய்க்கும்
  பரமசாக் கிராதி யாலே

யண் ணுவர் பிறப்பை நீக்கி
யரனடி யடைய லுற்றார். (56)

(இ-ள்) எண்ணப் படுகின்ற நனவாதியவத்தைகளைக் கூறின் இருவகைப்படும்- அவை கீழாலாவத்தை, மேலாவத்தை யென, இங்ஙனம் கீழும் மேலுமாகப் பொருந்திய சாக்கிரம், சுவப்பனம், சுழுத்திதுரியம், துரியாதீதம் ஆகச் சொல்லப்பட்ட தோற்றத்தை யொன்று பண்ணும் ஒரு முகப்படுத்தும் ஓரவத்தை (மேலாலவத்தை) அருளிடத்துச் செலுத்துவிக்கும் பரம சுத்தாவத்தையாலே பொருந்தப் பெற்றவர் பிறப்பினைப் போக்கி இறைவன்றன் றிருவடியடைய லுற்றவர் ஆவர் அண்ணுவர்—அடையலுற்றாராவர் (எ—று)

உயிர்கள் கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்துழலு நிலையில் அவர்கட்கு இருவினையொப்பும், சத்திநிபாதமும், குருவருளும், ஞானசாதனமும், மும்மல நீக்கமும் வாதனைக்சழிவும், ஞானப்பெருக்கமும் முறையே உண்டாகப் பெற்றுத் திருவருளைக் கூடுவதேயாம். இது இரவில் இருளோடும், விளக்கோடும் கூடியிருந்த கண்ணானது சூரியனுதித்தவிடத்து அதன் கிரணத்தால் சூரியனைக் காண்டல் போலும் ஆம்

சாக்கிர நிலைமை யின்கட்
சார்தரு மவத்தை யைந்து
நோக்கிடி லதீத மாகி
யாகவே நோக்கி யங்கண்
போக்கருங் (கருவி) யோடே
புகுதருங் கருவிப் பொற்பை
நீக்கமில் பரமந் தன்னில்
நிலைதொறு நின்று பார்நீ. (57)

இப் பாடலானது ஆசாரியர் மாணவனை நோக்கி கூறியதாகும்.

(இ-ள்) சாக்கிரமெனப்படும் நனவின்கண் (விழிப்பின் கண்) அடையப் பெற்ற அவத்தைகளைந்தும் நோக்கினால் அதீத நிலையாகி யாகுதலைப் புரிய நோக்குதலைச் செய்து அவ் விடத்து நீக்கற்கு அரிய கருவிகளுடன் புகுதலைப் புரியும் அக் கருவிகளின் பொலிவினை நீக்கமற நிறைவேற்ற பரமத் தினிடத்து (சுத்த நிலையில்) ஒவ்வொரு நிலைதோறும் நிலைத்து நின்று பார்ப்பாயாக எ-று. பொற்பு—அழகு. பரமம்—மேலாந்தன்மை, சுத்தம். அதீதம்—அளவின் மேம்பாடுடை யது, கருவி—கரணம், இந்திரிய சாலங்கள், நிலை—சாக்கிர நிலை, சொப்பன நிலை, சுழுத்தி நிலை, துரிய நிலை, துரியாதீத நிலைகளாம்.

இருடரு மதீத மொன்றில்
இரண்டினிற் றுரிய மூன்றில்
தெரிதரு சுழுத்தி நான்கிற்
றிகழ்தருங் கனவ தஞ்சில்
விரிதரு சாக்கி ரம்பின்
விளங்கிடு மென்பர் மிக்கோர்
இரிதருங் கீழ்மே லாக
விரண்டையும் புந்தி செய்யே. (58)

இதுவும் மாணவனை நோக்கிக் கூறியதாகும்.

(இ-ள்) இருளைத் தருகின்ற துரிய அதீத நிலையில் ஆன்மா மூலாதாரமாகிய தானத்தில் புருடனையும், இரண் டாவதாகிய துரியத்தில் பிராண வாயுவும் புருடனும் ஆகிய இரண்டினையும், சுழுத்தியில் புருடனும் சித்தமும், பிராண வாயுவும் ஆகிய மூன்றினையும், கனவினில், தன் மாத்திரைக் கொத்தும் வசனாதியைந்தும், அந்தக்கரணம், புருடன் ஆகிய நான்கினையும், சாக்கிரத்தில் ஞானேந்திரிய கன்மேந்திரியங் களும் தன் மாத்திரையும் அந்தக்கரணமும், வாயுவும், புருட னும், இலாடத்தானத்தில் விளங்கா நிற்கும் என்று கூறுவர்.

அறிவான் மிக்க பெரியோர் ஒட்டெடுக்கும் கீழாலவத்தையும், மேலாலவத்தையும் என்னும் இரண்டினையும் புத்தி பண்ணிப் பார்ப்பாயாக (எ-று.)

அவத்தை ஐந்து, சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவாம். சாக்கிரம் இலாடத் தானத்திலும் சுவப்பனம் கண்டத்தானத்திலும் சுழுத்தி இருதயத்தானத்திலும், துரியம் நாபித்தானத்திலும். துரியாதீதம் மூலாதாரத்திலும் ஒன்றும், இரண்டும், மூன்றும், நான்கும், ஐந்தும் ஆகிய தத்துவங்களோடு பொருந்தி நிற்கும் (எ-று).

இரிதரும்-ஓடும், இரிதரல்-ஓடல், புந்தி-அறிவு.

கருவியில் விடயந் தானும்
காண்பவன் ருனு மந்தக்
கருவியு மற்று நிற்றல்
கேவலஞ் சகலங் காட்டும்
கருவியில் விடயந் துய்த்தல்
சுத்தம தென்று கண்ணிற்
கருவியி லின்மை யான
கேவல சகலங் காண்டல் (59)

(இ-ள்) பொறிகளிடத்துப் புலன்களும் பொறிவாயிலாகப் புலன்களை அறியும் ஆன்மாவும், அந்தத் தொழிற் பொறியும் அறிவுப் பொறியும் நீங்கி நிற்றலே கேவல அவத்தை நிலையாகும்.

சகலமானது அவற்றினைக் காண்டல் செய்யும் பொறி வாயிலாகப் புலன்கள் நுகரப்பெறலைக் காண்பித்தலைப்

புரியும், சுத்தமாவது பொறியினிடத்து விடயங்களில் (புலன்கள்) நுகர்தலைப் (புரிவித்தலும்) பண்ணும், என்றறிவுறுத்திக், கண்ணுகிய பொறியில் இல்லாத தன்மையான கேவலசகல அவத்தைக்காண்டலைப் புரிவியாநிற்கும் (எ—று)

கருவி, அகக் கருவி, புறக் கருவி, அறிவுக் கருவி தொழிற் கருவி, என்பனவாம்.

சத்திய போத மாய்த்தற்
காண்டல்சாக் கிரம தாகுஞ்
சுத்தமெய்ப் பரையைக் காண்டல்
சுவப்னமாஞ் சுழுத்தி சொல்லில்
மெய்த்தகு பரையாய் மேவல்
துரியமே லின்ப மாதல்
அத்தகு மின்ப மேவீ
டதீதமென் றறிந்து கொள்ளே (60)

இது, மாணவகனை நோக்கி ஆசாரிய மூர்த்திகள் அறைவது:- நின்மலாவத்தை ஐந்து வகைத்து. உண்மையறிவாய் ஆசாரியராலே ஞானதீட்சை பெற்று முப்பொருள் உண்மையறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நிற்பது) ஆன்மாவாகிய தன்னிலையினைக்கண்டல் சாக்கிரமதாகும், (2) நின்மலமாகிய மெய்ப்பரையைக் காண்பது சுவப்பன நிலையாம், (3) சுழுத்தி நிலையினைச் சொல்லில் மெய்ம்மைத் தன்மைத்தாய பரையாகவே ஒன்றுபடலாம் (4) கேவலநீங்கி அருளினுலே தன்னையுங்கண்டு அருளையுங் கண்டு அவ்வசத்ததாய் நிற்றல்) துரிய நின்மலாவத்தையாவது இன்பசுகமாதலாகும (5) துரியாதீதமாவது அந்தச் சிவத்தைத்தரிசித்து சிவானந்தத்து அழுந்திடலாம் என்று நின்மலாவத்தையின் காரியங்களை யறிந்து கொள்வாயாக. (எ—று)

பொறிகளி லொன்று பஞ்ச
பூதங்க டன்னி லொன்று
மறிதரு கரண நான்கு
மறிவிக்கும் கலாதி யேழுங்
குறிதரு சுத்த மைந்துங்
கூடியோர் புலனை யுண்பன்
அறிவுரு னிவனு லொன்றை
யிவனொழிந் தவையு மாங்கே. (61)

(இ-ள்) இந்திரியமாகிய பொறிகளிலொன்றும், ஐம்பூதங்களில் ஒன்றும் பொறிபுலன்களை யறியும் மனம் புத்தி சித்தம் ஆங்காரமாகிய நான்கும் காலம், நியதி, கலை, வித்தை அராகம், புருடன், மாயை என்னுங் கலைகள் ஏழும் குறிதரும் (குறித்துணர்தலைத்தரும்)நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம், சுத்தவித்தையாகிய ஐந்துங்கூடிப் புலனை நுகர்வன். ஆன்மாத் தானுகவே அறியப் பெறமாட்டான் இவன்றன்றுல் ஒன்றையும் (ஒருபொருளையும்) இவ்வான்மாவும் இவனொடுபட்ட தத்துவத்தொகுதியும் அங்ஙனமேயறியப் பெறமாட்டாவாம். இவனுல் என்ற விடத்து ஆல் அசைநிலையாக்கிப் பொருள் கோடல் ஏற்புடைத்தாகும் (எ—று)

சிற்றறி வறியான் றனுய்ச்
செடங்களை யறிந்து சேரான்
சிற்றறி வறியான் கண்ணிற்
செடத்திற னறிந்து சேரா
சிற்றறி வறியான் றன்மை
சேர்ந்ததே வடிவாய் நிற்றல்
சிற்றறி வறியான் றன்னுற்
சேர்புல னுர்வ னன்றே. (62)

(இ-ள்) ஆன்மாச் சிற்றறிவுடையனுயிருத்தலின் அச் சிற்றறிவினைக்கொண்டு தானாகவே யறியப் பெறமாட்டான் செடங்களாகிய அறியாமையினை யறிந்து சேரமாட்டான். தான் சிற்றறிவினால் அறியமாட்டாமையினால் கண்ணால், அறியாமைத் திறனறிந்து சேரமாட்டாதவனுவன். சிற்றறிவு கொண்டு பொருட்டன்மையும் தன்றன்மையும் அறியமாட்டான். தான் சேர்ந்த வண்ணமும் வடிவுமாய் நிற்றலைப்பெறுவன். புலனாதிகளைச்சிற்றறிவினால் அறியமாட்டான் தன்னால் தானாகவே எடுத்துக்கொண்ட உடலுக்கேற்ப புலன்வழிப் போக நுகர்வன் (எ—று) அன்று ஏ அசைநிலை.

இறையவ னறிவு கொண்டே
யிவனறி வுறுவ னென்னில்
இறையவன் முதலி யன்றாய்
இவன்பெரு முதலி யாவன்
இறையவன் இவனுக் காய்நின்(று)
யாவையு மறிவ னென்னில்
இறைய னிருக்க மற்றிங்
கிவன்பிறந் திறத்த லென்னே. (63)

(இ-ள்) இறைவனாகிய அம்மையப்பன் அருளினால் இவ்விறை யறிவுகொண்டு சிற்றறிவுடைய ஆன்மாவானவன் அறிதலை யடைகுவன் என்றால்? இறையவன் முதற்காரணப் பொருளாய் அன்றாய் இவ்வான்மாவே பெரிய முதலியாகுவன் (முதலி–முதற்பொருள்) இறையவனே இவனுக்காகவே நின்று எப்பொருளையும் அறிகுவன் என்றால் இறையவன் இறந்தும் பிறந்தும் உழலுதலைச் செய்யாமலிருப்ப இவ் வான்மாவானவன் பிறத்தலையும் மீண்டு இறத்தலையும் செய்தல் எதன் பொருட்டோ?

இறையவன்-எல்லாப்பொருள்களிடத்தும் சென்று தங்குபவன். நின்று-நிலைபெற்று, மற்று—அசைநிலை, இங்கு—இவ்வுலகினில், பிறத்தல்—உண்டாதல், இறத்தல்—சாதல் (எ—று)

வெய்யவ னன்றி யொன்றும்
விளங்கிடா விழிகள் போல
வையன தருளை யன்றி
யாருயி ரறியா தொன்றும்
பையுள்செய் யிருளைப் பாற்றிப்
பரிந்துயிர் பற்றாய் நிற்குந்
துய்யமெய் யருளை யன்றி
வேறுயிர்த் துணையொன் றின்றாம். (64)

(இ-ள்) வெப்பமுடையவனாகிய சூரியன் ஒளியில்லாமல் கண்கள் ஒருசிறிதும் காணும் விளக்கத்தினை யடையமாட்டாவாறுபோல ஐயனாகிய நிருமல வடிவினன் கருணையில்லாமல் சிறு தொழிலையுடைய சிற்றுயிர்கள் ஒரு பொருளையும் அறிந்துகொள்ள மாட்டாவாம். துன்பத்தினைச் செய்யும் அறியாமையாகிய இருளைப்போக்கி, விரும்பி உயிர்கட்குப் பற்றுக்கோடாய் இருத்தலைப்புரியும் தூய்மையாகிய மெய்யவன் அருளையின்றித் தனியாக உயிருக்குத் தோன்றாத் துணையாக வேறொன்று மிலதாம் (எ—று)

பாற்றி—கெடுத்து, பையுள்—துன்பம், பரிந்து-விருப்பி, பற்று—ஆதரவு, விளங்கிடா — விளங்கிக்கொள்ள மாட்டா, வேறு—தனி, வெய்யவன்—வெப்பமானவன், இருள்—அறியாமை.

அறிவினாற் பொறிக ளந்தக்
கரணமற் றறிந்திட் டாலும்
அறிவினா லறியுஞ் செய்தி
யவற்றினுக் கின்மை போல

வறிவுதா னவன்ற னாலே
யறியினு மறியா தண்ணல்
அறிவுதான் வினைகள் யாவும்
அறிந்துயிர்க் கருத்து மன்றே. (65)

(இ-ள்) பொறிகளாகிய இந்திரியங்கள் அறிவாகிய போதத்தினால் அந்தக்கரணங்களாகிய உட்கருவிகளானவை அறிந்துகொள்ளப்பட்ட போதிலும், அறிவினைக்கொண்டு அறியப் பெறுஞ்செயல் அப்பொறிகட்கு இல்லாத தன்மை போல, அறிவானது சிவன்றன்னால் அறியப்பெறினும் அண்ணலையறியப் பெறமாட்டாது (ஆகவே) அறிவே நல்வினை தீவினைகளாகிய இருவினைகளை முற்றும் அறிந்து ஆன்மாக்கட்குப் போகங்களை நுகரும்படிச் செய்யும் (எ—று)

செய்தி—செயல் (கிரியை), அண்ணல்-இறைவன், மறு—வினைமாற்று, யாவும் — அனைத்தும், அருத்தும் — உண்பிக்கும். அன்று ஏ—அசை நிலைகள்.

ஒன்றிடுங் கரண மின்றே
லொன்றையு முணரொ ணாதாம்
ஒன்றிய விவற்றா லண்ணல்
உண்மையை யுணர வொண்ணா
ஒன்றுமி லவனே யுன்போல்
உருவெடுத் தருளால் வந்திட்(டு)
ஒன்றுதன் னிலையி லுய்க்கு
முபாதியை யொழித்தல் செய்தே. (66)

(இ-ள்) உயிர்களோடும் ஒற்றித்துப் பொருந்தி நிற்கும் பொறிகள் (அந்தக்கரணம்) இல்லையேல் ஒரு பொருளையும் அறிந்து கொண்டிடல் முடியப்பெறாது ஆகும். ஆயின் உயிருடன் ஒன்றுபட்ட இவற்றினால் (உட்கருவிகளினால்) பதியாகிய அண்ணலின் உண்மைத் தன்மையினை ஒரு சிறிதும் அறிய

முடியாவாம். யாதொரு பற்றுக்கோடும் இல்லாதவனுகிய அப்பதியே மாணவக! மனிதனுகிய உன்னைப் போலவே மக்கட் சட்டகந்தாங்கி கருணையினுல் திருநோக்கஞ் செய் தருளிப் பொருந்திய நன்னெறியாகிய நிலையின்கண் பந்த பாசாதிகளை யணுகவொண்ணுதவாறு செய்து அந் நிலையில் செலுத்துவன், (எ-று.)

உருவெடுத்தல்-திருமேனி தாங்கல், அண்ணல் உண்மை —பதித்தன்மை, உய்த்தல்—கொண்டு செலுத்தல், உபாதியை யொழித்தல்—பிறப்பு இறப்புக்கட்கு ஏதுவாகிய இரு வினைகளைப் போக்குதல், வந்திட்டு—வந்து, ஏ–(அசை) தேற்றமுமாம்.

பற்றிய நிறங்க ளாகும்
பளிங்கின தொளியும் பற்றி
நிற்றலைப் பளிங்கும் வெய்யோன்
நீடொளி யதுவும் போல
முற்றுல கதற்குச் சார்வாய்
முற்றிலும் முந் நீர் விண்போற்
சிற்றனிற் சடங்க டோயா
தென்பர் சிற்சத்தி தேர்ந்தோர். (67)

(இ-ள்) பற்றப்பட்ட நிறங்களாகப் பரிணமிக்கும் பளிங்கினது பிரகாசமும், அங்ஙனம் பற்றி நிற்றலையுடைய பளிங்கும் சூரியனுடைய பேரொளிப் பிரகாசமும் எங் ஙனமோ அங்ஙனமே போல, உலக முழுதினுக்கும் பற்றுக் கோடாய் முழுதும் (நாற்புறமும்) கடலும் ஆகாயமாகிய விண்ணும்போம் சித்தினில் அறிவினில் அறியாமையானது பற்றிடப் பெறமாட்டா தென்று கூறுவர். ஞானசத்தியாகிய சிற்சத்தியினைத் தெளியப்பெற்றவர் (எ—று)

சடம்—அறியாமை, (அசித்து) தோயாது—பற்றமாட் டாது, தேர்ந்தோர்—தெளிந்தோர், சார்வு—பற்றுக்கோடு.

பளிங்கு—கண்ணடி, நிறம்—வண்ணம், முந்நீர்—கடல், சத்தி—மூவகைய இச்சை, கிரியை, ஞானம் என, பற்றிநிற்றல்—பொருந்திநிற்றல்.

இருளுயி ரான காலை
  யாவையு மிருளாய் நின்ற
பொருளது புரைய வெங்கும்
  புரைவற நிறைந்த வுண்மை
யருளுயிர் விரவி யெல்லாம்
  அருளொளி யாகி நிற்கும்
மருடெரு ளிரண்டி னுக்கும்
  மருடெரு ளிரண்டு மின்றே. (68)

உயிர் இருளுற்ற நிலை ஆன்மா. (சீவான்மா) அருளுற்ற வுயிர் சிவம்.

(இ-ள்) இருட்டன்மையாக உயிரானபோழ்து அனைத்துப் பொருள்களும் இருட்டன்மையாக நிலைபெற்ற பொருளினைப்போல எவ்விடத்தும் (உவமையிலாவாறு) குற்றமற நிறைந்த வுண்மை அருள் உயிர் கலந்து யாவும் அருட் பிரகாசமாகி நிலைபெற்று நிற்கும். மருளாகிய மயக்கத்திற்கும் தெருளாகிய தெளிவினுக்கும் மருட்டன்மையும் தெருட்டன்மையுமாகிய இரண்டும் அப்பொருட்கின்று ஏ—அசை, ஆன்மாக்கட்கு அநாதியே செம்பிற் களிம்பு போலப் பாசத் தடையால் இருளுற்றிருக்கும் பதிப்பொருளாகிய சிவம் அநாதிமல முத்தனுகலின் அருளுற்றிருக்கும் எனல் தெளிவிக்கப் பெற்றுள்ளது.

சாற்றுதற் றெரிச னந்தற்
  சுதத்தன்னி லாப மென்னப்
போற்றுமூ வகையே தென்று
  புகன்றிடில் பாச நீங்கத்

தோற்றரு ஞானம் வந்து
தோற்றலைந் தொழிறு டைத்தல்
மாற்றின்ஞே யத்த ழுந்தல்
என்று நூல் வகுக்கு மன்றே. (69)

(இ-ள்) சாற்று—கூறப்படுகின்ற, தற்றெரிசனம் தற்சுதம் தன்னிலாபம் என்ன—தற்றெரிசனமும், தற்சுதமும், தன்னி லாபமும் என்ன, போற்று மூவகை ஏது என்று—புகழப்பட்ட மூன்று வகை ஏது என்று, புகன்றிடில்—கூறப்படில், பாசம் நீங்க—பாசங்கள் (ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதாயி) திருவருளால் விலகா நிற்க, தோற்றரு ஞானம் வந்து தோற்றல்—புலப்படா நின்ற நல்லறிவு வந்து புலப்படலும், ஐந் தொழில் துடைத்தல்—பஞ்சகிருத்தியங்களும் இல்லாமற் செய்தலும், மாற்றின் ஞேயத்து அழுந்தல்—இவற்றினின்றும் ஒருவின் ஞேயத்திடைப் பதிதலும் என்று—என்று, நூல் வகுக்கும்—நூல்களானவை வகைப்படுத்திக் கூறா நிற்கும். அன்று ஏ—அசை நிலைகள்.

சுட்டறி வறிவி னுண்மைச்
சொரூபமென் றாலும் போயச்
சுட்டறி வறிவாய்க் கொண்டு
துன்பமோ டின்பந் துய்க்குஞ்
சுட்டறி வறியு முண்மைச்
சுத்தபோ தத்தாற் றன்னைச்
சுட்டறி வறியு மந்தச்
சுட்டறும் அறிவாய் நின்றே. (70)

(இ-ள்) சுட்டு அறிவின் உண்மை சொரூபம்—சுட்டு அறிவினுடைய உண்மை வடிவம், என்றாலும்-என்று கூறினாலும், போய்—சென்று, அச்சுட்டு அறிவு—அந்தச் சுட்டறி

வானது, அறிவு ஆய்கொண்டு — அறிவுத் தன்மைமாய்க் கொண்டு, துன்பமோடு இன்பம் துய்க்கும்—துக்கத்துடன் சுகத்தினையும் நுகரும், சுட்டுஅறிவு—சுட்டறிவானது, அறியும் உண்மை சுத்தபோதத்தால்—அறியப்பெருநின்ற உண்மையாகிய சுத்தஞானத்தால், தன்னை—பாசங்கழலப் பெற்ற பதித்துவமுறும் ஆன்மாவாகிய தன்னை, சுட்டுஅறிவு அறியும் —சுட்டறிவானது அறியப்பெறும், அறிவாய்நின்று—ஞானமயமாய்நின்று, அந்தச்சுட்டு — அந்தஆன்மபோதமானது, அறும்—நீங்கப்பெறும் (எ—று)

சுட்டறிவு—காலத்தான் ஏகதேசமாதலும் இடத்தான் ஏகதேசமாதலும், அதுவதுவாய்ப் பலவேறுவகைப்படுதலும் மலத்தொடு விரவுதலும் வேறுபடுதலும் ஆகிய இவ்வியல்புகளுடைய அறிவு.

சார்வறி வதனைக் காட்டஞ்
 சத்திய வறிவி னின்று
சார்வறி வதுவாய் நின்ற
 தன்னையுந் தானாய் நிற்குஞ்
சார்வறி வினையுங் கண்ட
 தன்மையும் இறந்து போதஞ்
சார்வறு பரையே யாதி
 தனிப்பரம் பொருளா மன்றே (71)

(இ-ள்) சார்வு அறிவு அதனைக்காட்டு அம்சத்திய அறிவினீன்று—சார்ந்ததன் வண்ணமாகின்ற சார்வு அறிவானது அதனைத்தெரிவிக்கின்ற அழகிய என்றுமுளதாகிய நிலைத்த அறிவினிடத்தினின்று, சார்வுஅறிவு அதுவாய்நின்ற தன்னையும்—பற்றுக்கோடாகிய சார்வு போதமாய் நிலைத்த ஆன்மாத்தன்னையும், தானாய் நிற்கும் சார்வு அறிவினையும் —சிவபோதங்கெட்டுச் சிவந்தானாய்நிற்கும் சார்வு அறிவினையும் கண்ட தன்மையும்—இவற்றினையறியலுற்ற பண்பினை

யும், இறந்து—கடந்து, போதம்—ஞானமானது, . சார்வுஅறு பரையேஆதி—பற்றற்ற பரையும் முதலும் ஆகிய, தனிப் பொருளாம் அன்றே—ஒப்பற்ற பரம் பொருட்டன்மைத் தாம். அன்று ஏ—அசைநிலைகள் (எ—று)

என்றவிப் பரையே யன்றி
யிதன்முத னிகழ்த்த லென்று(ன்)
என்றிடி லிதுபே ரின்ப
விறைவன தருளா மென்றின்
றுன்னொளி தனிநி லாப்போற்
றுணைவனிங் கிதற்கு மூலம்
ஒன்றுமில் பரன்றன் சத்தி
யீதென வுணர்த்து நூலே. (72)

(இ–ள்) என்ற இப்பரையே அன்றி—என்றுகூறப்பட்ட இந்தப்பரையே யல்லாமல், இதன் முதல்நிகழ்த்தல் என்றுன் என்றிடில் (எங்ஙன மென்றுரைத்தான்) பரையின் மூல மாகிய முதற்பொருளே இயக்குதல் என்று கூறினன் என்று கூறினல், இது பேர் இன்ப இறைவனது அருள் ஆம் என்று –இதுவானது பேரின்பமாகிய முத்திவடிவாம்பரம் பொருளி னுடைய கருணையாகும் என்றுகருதி, இன்று—இல்லை [இது போழ்து] உன் ஒளி தனிநிலாபோல் — உன்னுடையஒளியா னது தனித்து நிற்கமாட்டாத தன்மைப்போல், துணைவன்— பரையின் துணைவனுகிய பரம்பொருள், இங்குஇதற்குமூலம் — இவ்விடத்து இந்நிகழ்ச்சிக்குக் காரணமாம், ஒன்றும்இல் பரன்தன்சத்தி — யாதொருசார்வும் இல்லாத (பற்றுக்கோ டில்லாத) பரம்பொருளினுடைய சத்தியே, ஈதுஎன — இது வாம்என்று, நூல்உணர்த்தும் — சிவாகமங்களானவை தெளிவிக்கும் (எ—று) ஏ—அசைநிலை

சின்மய மான வுண்மைச்
சிவைசிவ மின்றி யுண்மை

பன்மறை பகரும் வெய்யோன்
பாயொளி யிருளைப் பாற்றித்
தன்முத லதனைக் காட்டுந்
தன்மையின் மலம கற்றி
நின்மல முதலை யாவிக்
கருளுமந் நிமலை தானே. (73)

(இ-ள்) சின்மயம் ஆன உண்மை சிவை — அறிவுத் தன்மையாகிய உண்மைப்பரை (சத்தி) சிவர் இன்றிஉண்மை —சிவமில்லாமல் உண்மை யாகமாட்டாது (சிவத்தன்மை சிவையாம்)பல்மறை பகரும்வெய்யோன்-பலவேதங்களாலும் பகரப்பட்ட வெப்பத்தன்மையினையுடைய சூரியனானவன் பாய்ஒளி இருளைபாற்றி—தன்னுடைய பரவிய ஒளியானது இருளினைப்போக்கி (கெடுத்து) தன்முதல்அதனைகாட்டும் தன்மையின்—தன்முதலாகிய சூரியனையும் காண்பிக்கும் இயற்கைபோல, மலம்அகற்றி — ஆன்மாக்களுடைய மலங்களின் வலியினைநீக்கி, நின்மலம்முதலை — நின்மலவடிவாகிய பரம்பொருளாம் சிவமுதலை, ஆவிக்கு — மலவலிநீங்கப்பெற்ற உயிர்கட்கு, அந்நிமலைதான் அருளும்—அந்தநிமலையென்னும் நாமமுடைய பராசத்தியானவள் அருள்புரிகுவள் (எ—று)

(சிறப்புரை) சித்மயம் — சின்மயம், ஞானத்தன்மை (ஞானவடிவு) என்று பொருளாம் சிவை, சிவம் என்பன குணம்குணிபோலச் சிவத்தையுடையது சிவையாம். சத்தியும் சிவமும் என்றபடி. பாவியஒளி—பாயொளியாம், நிருமலம் —நின்மலம் எனவாயது, மலமற்றது என்பது பொருள், அருளும் — அருளுவாள், நிமலை—மலமற்றவள் பராசத்தி, தான் ஏ —அசைகள்.

பூசுரர்க் கடிய சத்தின்
றன்னிடை பொருந்தல் போல

வீசன தருளு யிர்ப்பால்
எய்தலால் இவனே யாவும்
ஆசற வறியு மென்றும்
ஐந்தொழில் புரியு மென்றும்
பேசுத லுண்மை ஞான
மன்றிது பிராந்தி ஞானம். (74)

(இ-ள்) பூசுரர்—பூசுரர்கள், கடியசத்தின்தன் இடை பொருந்தல்போல-விளக்கமாகிய சத்திப்பொருளினிடத்துப் பொருந்தி விளக்கமுறல் போல, ஈசனதுஅருள் உயிர்ப்பால் —சர்வேசுரனாகிய பரம்பொருளினது கருணையாகிய தோற்றத்தினால், எய்தலால் — அடைதலினால், இவனே—இவ்வான்மாவே, எல்லாம் ஆசுஅற அறியும் என்றும்—யாவற்றினையும் குற்றமற அறிந்து கொள்ளல்கூடும் எனவும், ஐந்து தொழில் புரியும் என்றும்—படைத்தலாதி ஐந்து கிருத்தியங்களையும் இயற்றும் எனவும், பேசுதல் — கூறுவதானது, உண்மைஞானம் அன்று—உண்மையாகிய அறிவுத்தன்மையாகமாட்டாது, இதுபிராந்திஞானம்—இதுவானது மயக்க (விபரீத) வுணர்வாம் (எ—று)

பூசுரர்—மறையவர்கள், கடியசத்தின்—கடி அசத்தின் எனவும் பிரித்துப்பொருள்கோடலுமொன்று. உயிர்ப்பு—உண்டாதல் (மூச்சுஎன்றுமாம்) ஐந்தொழில்-படைப்பு காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் ஆம். உண்மை ஞானம்—உள்ளதையுள்ளவாறு அறிவது, பிராந்திஞானம்—ஒன்றனது தன்மையினை வேறொன்ருக வறிவது, பிராந்தி—மயக்கம் (விபரீதம்) புரிதல்—இயற்றல், ஆசு—குற்றம், பொருந்தல் —பற்றல்.

மூங்கையாய்க் கொத்தை யாகி
முடவனு யிடுமொ ருத்தன்

பாங்கொரு கழுது நண்ணிற்
  பார்த்திடல் பார்த்த லேகல்
ஆங்கதற் குளதா னாலு
  மவையவன் பெறுவ தேபோ
லீங்குயிர்க் குளது நல்கு
  மிறைதொழி லியற்று மன்றே. (75)

(இ-ள்) மூங்கை ஆய்—ஊமையாகி, கொத்தைஆகி—அறிவிலது ஆகி (சிதடு) முடவன் ஆய் இடும் ஒருத்தன்—முடத்தன்மை யுடையவனாகியிருக்கும் ஒருவன். பாங்கு ஒரு கழுது நண்ணின் — தன்பக்கத்திடத்து ஒருபேயானது வந்து அடையின், பகர்ந்திடல் பார்த்தல் ஏகல்—கூறலும் காண்டலும், செல்லலும், ஆங்குஅதற்கு உளது ஆனாலும்—அவ்விடத்து அப்பிண்டத்திற்கு (கொத்தையும் ஊமையும் முடவனும் ஆயவவ்வுருவினுக்கு) உண்டானாலும், அவை அவன் பெறு அதுபோல்-அவற்றினை அவன் பெறுததன்மைபோல் ஈங்கு—இவ்வுலகினிடத்து. உயிர்க்குஉளதுநல்கும் — ஆன்மாக்கட்கு உளதாதலைக் கொடுக்கும், இறை—பரம்பொருளானவன், தொழில்இயற்றும்—கிருத்தியங்களையுண்டு பண்ணுவன், அன்று ஏ—அசைநிலைகள் (எ—று)

கொத்தை—குருடு. மூங்கை—ஊமை, முடம்—கையும் காலும் குறைவுற்றநிலை, கழுது—பேய், இறை—எவ்வுயிரிடத்தும் தங்குபவன்.

நிலாவிய கலாதி தன்னா
  னிகழ்தரு போத மென்றும்
புலனறி வுறுவ தன்றிப்
  புலன்களி னுண்மை காணா
மலவிரு டிரந்த சுத்த
  வாய்மையே வடிவா யங்கண்

அலைவற நிற்க வின்ன
வநுபவ முதிக்கு மன்றே. (76)

(இ-ள்) நிலாவிய கலை ஆதிதன்னால் — நிலைபெற்ற கலை முதலியவற்றினால், நிகழ்தருபோதம் — உண்டாகப் பெற்ற ஞானமானது, என்றும்—எக்காலத்தும், புலன்அறிவு உறுவதுஅன்றி—புலன்களாகின்ற ஞானத்தை யடைவதை யல்லாமல், புலன்களின் உண்மைகாணு—புலன்களினுடைய உண்மைத்தன்மையினைக் காணப்பெறமாட்டாவாம், மலம் இருள் துரந்த சுத்தவாய்மையே—பாசங்களாகின்ற இருளினைப்போக்கின தூயமெய்ம்மையே, வடிவாய்—உருவுற்று, அங்ஙன்அலைவு அறநிற்க—அவ்விடத்து அசைவின்றி நிலை பெற, இன்னஅநுபவம்உதிக்கும்—இத்தன்மையவாய அநுபவத்தன்மை தோன்றியிடும் (எ—று)

கலாதி—கலை, வித்தை, அராகம், என்பன. காலம் நியதி, மாயை, புருடன், என்பனவுமாம். துரத்தல்—ஓட்டல், அலைவு—அசைவு, மலவிருள்—அறியாமை, நிகழ்தல்—உண்டாதல்,

சுகமுத லுதிக்கு மென்றல்
சோர்வுடைத் துண்மை சேர்ந்தோன்
சுகமுத லாவ தின்றித்
தோன்றுவ தின்மை யென்னின்
அகமிகு நிலையிற் றன்னை
யறிவுறு னருளி னுந்தற்
றிகழ்வில தென்னிற் பெத்த
முத்திக டெரித்த லன்றே (77)

(இ-ள்) சுகமுதல் உதிக்கும் என்றல்—நலமாகிய இன்பம் முதலிடத்தில் தோன்றும் என்று கூறல், சோர்வுடைத்து—தளர்ச்சி உடைத்தாம். உண்மை சேர்ந்தோன்

வாய்மைத் தன்மையினை யடைந்தவன் ஆகிய நல்வினையாளன் சுகமுதல் ஆவது இன்றி—சுகமுதலாகிய இறைமைத்தன் மையாதல் இல்லாமல், தோன்றுவது இன்மை என்னின்—உண்டாதல் இல்லை என்றால், அகமிகும் நிலையில் தன்னை—இன்பமிக்க நிலைமையின்கண் தானாகிய ஆன்மாவை, அறிவுரான்—அறிதலையடைய மாட்டான், அருளினும்—கருணை புரிந்தவிடத்தும், தன் திகழ்விலது எனனில்—தான் விளக்க முறுதல் இல்லது என்றால், பெத்த முத்திகள்—பெத்தநிலையும் முத்திநிலையுமாகிய இவைகள், தெரித்தல் இன்று (ஏ) தெளிவித்தல் இல்லை (எ-று)

சுகமுதல்—சுகமாகிய முதல், சோர்வு—தளர்வு, அகம்—இன்பம், திகழ்வு—விளக்கம், தெரித்தல்—தெளிவித்தல் இன்று—இல்லை, ஏ—அசை

தத்து சால மொய்த்த
சகலமுஞ் சார்வின் றன்மை
யொத்தகே வலமு நீக்கி
யொழிவற நிறைந்து நின்ற
சுத்தபோ தத்தாற் றன்னைத்
துறந்திடத் தோன்று முண்மை
யத்தொடத் துவித மாத
லநுபவ நிலைய தன்றே. (78)

(இ-ள்) தத்துவம் சாலம் மொய்த்த சகலமும்—தத்துவக்கூட்டம் நெருங்கிய சகலத்தன்மையும், சார்வின் தன்மை ஒத்த கேவலமும்—பற்றுக்கோடாம் தன்மை ஒத்த கேவலநிலையும், (ஆயவற்றினை) நீக்கி ஒழிவு அற நிறைந்து நின்ற சுத்த போதத்தால்—அகற்றி நீக்கமறப் பூரணமாய் நிலைத்த தூய சிவஞானத்தினால், தன்னை—ஆன்மாவாகிய தன்னை, துறந்திட—பற்றுவிட்டுப்போக, தோன்றும் உண்மையத்தொடு-உதிக்கின்ற மெய்ஞ்ஞானத்துடன், அத்துவித

மாதல்—சுத்தாத்துவிதமாகிய இரண்டறக் கலத்த லெனப் படும் ஒன்றுதல், அநுபவநிலையது—சுகாநுபவத் தன்மைத் தாம். அன்று ஏ அசைநிலைகள் (எ—று)

(குறிப்புரை) சாலம்—கூட்டம் (கொத்து) துறத்தல்—பற்று விடல், துவிதம்—இரண்டன்நிலை, அத்துவிதம் இரண்டற்ற நிலை, போதம்-ஞானம், அநுபவம்-ஒன்றன்வழியுண்டாதல், அநுபோகம்—ஒன்றன்வழி நுகர்தல்.

நேதிகள் கருவி பண்ணா
நின்மல ஞானத் தாலே
நேதிகள் கருவி சாரின்
நின்றது நேதி யாகா
நேதியோ டதுவு நாச
மென்றிடின் ஞேய மார்க்கு
நேதிசெய் போத மாறி
நின்றிடி னிகழு ஞேயம். (79)

(இ-ள்) நேதிகள் கருவி பண்ணா — வித்தியா தத்து வங்களிலொன்றான நியதி தத்துவங்களானவை, உபகரணங் களாகின்ற கருவிகளை யுண்டுபண்ணமாட்டா, நின்மல ஞானத் தாலே — களங்கமற்ற அறிவினாலே, நியதிகள் கருவிசாரின் —நியதிகள் உபகரணங்களாகின்ற வற்றினைப் பற்றிடின், நின்றது நேதியாகா—நிலைத்து நின்றது (ஞானமானது) நேதி களாகமாட்டாவாம், நேதியோடு அதுவும் நாசம் என்றிடின் —நியதியுடன் கருவிகளும் அழிவுறும் என்றால், ஞேய மார்க்கு—அறியப்படுவார் தமக்கு, நேதிசெய் போதம்மாறி —நியதி செய்யப்படாநின்ற அறிவு வேற்றுத்தன்மைத்தாகி நின்றிடின்—நிலைக்கப்பெறின், ஞேயம் நிகழும்—அறியப்படு பொருள் இயங்கப் பெறும் (உண்டாகும்) எ—று.

நேதி — நியதி, வித்தியா தத்துவமேழனு ளொன்ருய் மாயையிலே நின்று கால தத்துவத்துக்குப் பின்ருேன்றி ஆன்மாக்கள் அவரவர் செய்த கன்மம் அவரவரே ஏருது குறையாது நுகருமாறு நியமிக்குமொரு தத்துவம். ஞேயம் அறியப்படு பொருள், கருவி—பொறிகளைக் குறிக்கும். ஞானம்—அறிவு.

ஓரியல் பற்ற போத
முபாதிகட் குணவ தாகி
சாருமந் நிலைமை மாறித்
தம நிலை விளக்குந் தீபஞ்
சூரியன் முன்பு நிற்ற
லொத்திடச் சுத்தா னந்த
வாருதி நிறைந்து விம்மி
வரம்பறப் பெருகு மன்றே (80)

(இ-ள்) ஓரியல்புஅற்றபோதம்-ஒருதன்மையொழிந்த அறிவானது, உபாதிகட்கு உணவதுஆகி — துன்பங்கட்கு நுகர்பொருள் தன்மைத்தாகி, சாரும்அந்நிலைமாறி — பற்று இன்ற அந்நிலைமையானது மாறி (வேறுபட்டு) தமம்நிலைவிளக் கும் தீபம் — இருட்டன்மையினைப்போக்கி விளக்குதலைப் புரி யும் விளக்கானது, சூரியன் முன்பு நிற்றல் ஒத்திட—அகல் திரி எண்ணெய் சுடர் முதலியன வேண்டப்பெருது இயற் கையான பேரொளிப் பிழம்பாகிய சூரியன் சந்நிதானத்தில் மின்மினிப்போன்று நிற்றலையொப்ப, சுத்தம் ஆனந்தவாருதி —தூயபேரின்பமாகிய கடலானது, நிறைந்து விம்மி வரம்பு அறப்பெருகும்—நிறையப்பெற்று மேலெழுந்து எல்லையொ ழியப் பெருக்கெடுத்து ஓடும் (எ—று)

வாருதி—வாரி நிதி யெனற்பாலது வாருதி யெனவா யிற்று. கடல் என்பது போந்தபொருள், உபாதி—வேதனை,

மாறி — வேறுபட்டு, தமம் — இருள், ஓரியல்பு அற்ற போதம்—பேரின்பத்திற்கேதுவாய ஞானம், வரம்பு—கரை (எல்லை) விம்மி—மேலெழுந்து, அன்று ஏ-அசைநிலைகளாம்.

சென்றுறு கேள்வி யோடு
சிந்தனை தெளிதல் நிட்டை
யென்று நான் கிவற்றி னிட்டை
யெய்துமா றியம்பின் மூன்றால்
முன்றிகழ்ந் தின்ப மாகு(ம்)
முழுமுத லின்மை யாகி
நின்றது போல மாறி
நின்றிடின் ஞான நிட்டை. (81)

(இப் பாடலானது நிட்டையின் நிலைமை யறிவுறுக்கின்றது.)

(இ-ள்) சென்று உறுகேள்வியோடு சிந்தனை தெளிதல் நிட்டை என்று நான்கு—மனமானது புத்தி வழிப்பட்டுச் செவியிடமாக ஒலியாக வரலைக் கேட்டலும் சிந்தித்தலும், தெளிதலும் நிட்டை கூடலும் ஆக நான்கு வகைப்படும். இவற்றின் நிட்டை எய்துமாறு இயம்பின்-இந் நான்கனுள் நிட்டை கூடலாகின்ற நிலைமையினை அடையுமாறு கூறிடின், மூன்றின்முன் திகழ்ந்து—கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய மூவகை நிலையின்முன் விளக்கமுற்று, இன்பம் ஆகும் முழு முதல் இன்மையாகி—பேரின்ப மயமாகும் முழு முதலாம் இறைவன்றன் நிலைமையிலதாகி (அதுவே தானாகிய நிலைமை) நின்றதுபோல — நிலைத்ததுபோல, மாறி — வேறாகி, நின்றிடின்—நிற்கப் பெற்றால், (அதுவே), ஞானம் நிட்டை — ஞான நிட்டையாகிய நிலையாம் என்றபடி (எ-று.)

கேள்வி — கேட்டல், கேட்டலும்கற்றலோடமையும் "கற்றல் கேட்டலுடையார் பெரியார்" என்பதனாலறியப்

படும், கற்கின்றுழி ஐயம்திரிபு அறியாமை யெனும் முக்குற்றமு மின்றிக் கற்றல்வேண்டும். அங்ஙனங் கல்லாதார் கற்றுவல்ல பெரியார்பால் கேட்டல் வேண்டும். கேட்டனவற்றினைச் சிந்தித்தல்வேண்டும். சிந்தித்தனவற்றினை யொருமாகத் தேர்வதே தெளிதலாகும்.

இம்மூன்றும் ஒருபடித்தாத் திகழப்பெற்ற வழிப் பதிபசுபாசப் பொருள்களினுடைய இலக்கணங்களை யாய்ந்து ஞானமிக்குப் பதியும் தானும் வேறுதலின்றி அதுவே தானேயாகிய அந்நெறி நிற்றலே நிட்டையாகும்.

கேள்விசேர் பாச ஞானங்
  கிளர்பசு ஞானந் தன்னாற்
றாழ்விலா வுண்மை ஞானத்
  தன்முதற் சார வைத்தற்
பாழிலே பரமா னந்தப்
  பயிர்விளைத் தளவு காணா
வாழ்விலா வாழ்வே நிட்டை
  யென்னுமா மறைக டானே. (82)

(இ-ள்) கேள்வி சேர்பாசம் ஞானம்-கேள்வி சேர்ந்த (கேட்டலோடமைந்த) பாசவறிவும், கிளர்பசு ஞானம்தன்னால்—விளக்கமுறும் ஆன்மவறிவு தன்னால், தாழ்வுஇலா உண்மை-குறைவு இல்லாத மெய்ம்மையாகின்ற, ஞானத்தன்முதல் சாரவைத்தல்—அறிவினது முதலாகும் பரம்பொருளைச் சாரவைத்தல். பாழிலே பரமஆனந்தம்பயிர்விளைத்து—சூனியமாகின்றவிடத்து பரமசுகமாகின்ற (பேரின்பம்) பயிர்களை யுண்டாக்கி, அளவுகாணா — அளத்தலாகிய முடிவினைக்காணப் பெறமாட்டாத, வாழ்வு இல்லாத வாழ்வுஏ — பேரானந்தப் பெருவாழ்வே, நிட்டை—ஞானநிட்டையாகும், என்னும்—என்று கூறுநிற்கும், மறைகள் தான்ஏ—வேதங்கள் (எ—று) தான்ஏ—அசைநிலைகள்.

பாசஞானம்—பாச அறிவு, அஃதாவது நால்வகை வாக்கின் பகுதியாகிய வேதம், சாத்திரம், மிருதி, புராணம் கலைஞானமாகிய சொற் பிரபஞ்சமும் நிலம் முதல் நாதமீறாகிய பொருட் பிரபஞ்சமும் என்னும் இவைகள் பற்றி நிகழும் ஏகதேச ஞானம், இஃது பதிஞானம் விளக்குவதற்குக் காரணமாகிய முகத்தாற் பிரயோசனமுடையது.

"வேதசாத்திர மிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியாதித் திறங்கண் மேலாம்
நாத முடிவான வெலாம் பாச ஞானம்"

என்றுஞ் சிவஞான சித்தியார் கொண்டு துணியப் பெறும்.

பசு ஞானம்—உயிர் அறிவு, அஃதாவது மன முதலிய நான்கும் கண்களுக்கு விளக்குப் போல உயிருக்குக் கருவியாய் வேறு நிற்பன வென்றறிந்து நீங்கி நின்று இவற்றினைக் கொண்டறியும் கருத்தாவினுண்மை ஆராய்ந்தார்க்கு இனிது விளங்குவதாகிய ஆன்ம சொரூப ஞானம்.

"கருவியாம் மனமும் புத்தி
யகங்காரஞ் சித்தம் நான்கும்
மருவியான் மாவே யென்ன
வருந்தீப மெனத்தெரிந்தாங்கு
ஒருவியான் மாவி னுண்மை
யுணர்ந்தவர் தமை யுணர்ந்தோர்
தருமிது பசு ஞானம்"

பதிஞானம்—இறையறிவு. அஃதாவது:— ஒருவரறியாமல் சர்வத்தையும் ஒருகாலத்திலே தானறிகை. ஆன்மாவிற்கு சாட்சாத் சிவசத்தியால் விளங்கிய சிற்சத்திவிர்த்தி என்பதாம்.

நிட்டை—அசையாமை. பதி பசு பாச விலக்கணங்களை யுணர்ந்து நிட்டை கூடல் ஆகும்.

ஏலவிந் நிட்டை மாறு
　　தெய்துதற் கரிதே லாங்கு
மேலிடுங் கருவி தன்னை
　　வேறுசெய் தருளி னிற்றல்
சாலமுன் புகலு நிட்டை
　　தருமிரண் டினையுஞ் சாற்றில்
மூலகே வலமு மாயை
　　முயங்குகே வலமும் போலும். (83)

(இ-ள்) ஏல இ நிட்டை மாறுது எய்துதற்கு அரிதுஏல் —பொருந்துற மேலே கூறப்பட்ட இந் நிட்டை யென்னும் ஞான நிலை மாறுபாடுறாதவாறு அடைவதற்கு அருமை யுடைத்து ஆகுமேயானால், இங்கு — இவ்விடத்து, மேல் இடும் – மேற்பட்டு முனைந்தெழும், கருவி தன்னை—பொறி யாதிகளை, வேறு செய்து—தன்னிலையில் போகவொட்டாமல் தடுத்து, (முனைப்பற்று ஒருமுகப்படுத்தி), அருளின் நிற்றல் —சிவன்றன் கருணை செய்தருளியவாறு நிலைத்து நிற்றல், சாலமுன் புகலும் நிட்டை—மிகவும் முன்னர்க் கூறப்பட்ட நிட்டை நிலையாகும் (இங்ஙனமாகக் கூறப்பட்ட) தரும் இரண் டினையும் சாற்றில்—பொருந்திய இந்த இரண்டு நிட்டைகளை யும் கூறிடின், மூல கேவலமும்—காரணமாகிய கேவலத் தன்மையும், மாயை முயங்கும் கேவலமும்—மாயையுடன் கலந்த கேவலத் தன்மையும், போலும் – ஒக்குமாம். (எ-று)

கேவலம் — இரண்டன்மை ஒன்றுயிருப்பது என்று பொருள். ஆன்மாவானது தன்னுடைய இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித்தான் மாத்திரையே யுளதாகிய நிலை கேவலாவத்தையாகும், மாயை—மயக்குவது.

கருதிடிற் கரண முண்டாங்
　　கருத்தறின் மரண மெய்துங்

கருதிடா ததுநா னென்று
கருதுவ னென்னி னீதான்
கருதிட வேண்டா வென்னுங்
கருத்தினுக் கப்பா லானைக்
கருதிடா ருண்மை ஞானக்
கண்டிறந் தவர்க டாமே. (84)

(இஃது மாணவகனை நோக்கிக் கூறியதாகும்.)

(இ-ள்) மாணவக! வினைப் போகத்தாற்றேக மெடுத்த ஆன்மாவானவன், கருதிடின் கரணம் உண்டு ஆம்—உணர்வு மயமாகிய உயிர்ப் பொருள், மனத்தொடுபட்டுக் கருதுதலைப் புரியுமாயின் கருவிகள் உளதாகும். கருத்து அறின் மரணம் எய்தும்—ஒரு பொருளினையும் கருதுதலைப் புரியாமல் அற்றுப் போமாயின் அந் நிலையில் உடலைவிட்டு உயிர்ப் பிரிதலை யடையா நிற்கும், கருதிடாதது—ஒரு பொருளையும் பற்றாதிருப்பது, நான் என்னில் — ஆன்மாவாகிய நானே யாகுவன் என்றால், நீதான்—நீயேதான், கருதிட வேண்டா என்றும்—கருதுதலைப்பற்ற வேண்டாவெனவும், கருத்தினுக்கு அப்பாலானை—மனம் வாக்காதிகளுக்குப் பற்றியெட்டப் பெறாமலிருக்கின்ற பரம்பொருளை, உண்மை ஞானம் கண் திறந்தவர்கள் (தாம்) மெய்ஞ்ஞானக் கண்களைக்கொண்டு கருதுதலைப் புரிபவர்களாகிய (ஞானநாட்டமுடைய) பெரியவர் கருதிடார்—பொறிகளைக்கொண்டு புலன்களிற்ச் சேறலைச் செய்யாது ஒருமித்துச் சிவ பரம்பொருளைவிட்டுக் கருதுதலைப் புரியமாட்டார்கள். (எ—று.) தாம், ஏ-இவ்விரண்டும் அசை நிலைகளாம்.

" ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே "

என்பது சிவஞான போதச் செய்யுள்.

சென்றுறு நிறைவு குன்றுஞ்
சிவனுனைச் சேரா நிற்பன்
என்றிடி லுள்ள தன்றா
யிறைவன்வந் தணுக னீபோ
யொன்றுத லிரண்டு மன்றி
யுன்செல வவன்வ ரத்தாய்
நின்றிடா நிலையே ஞான
நிட்டையாய் நிகழ்த்து நூலே. (85)

(இது ஞான நிட்டையினியல் இயம்புகின்றது)

(இ-ள்) சென்றுஉறு நிறைவு குன்றும்—ஆன்மா வானது தானாகவே இயங்கப் பெறுகின்ற (பொறி புலன்களி டத்திற் செல்லுதலைச் செய்யும் பூரண நிலையும் குறையப் பெறும், சிவன் உன்னை சேரா நிற்பன் —(பக்குவமுற்ற மாணவக) சிவன்றனுனவன் உன்னை வந்தணுகி நிற்பான். என்றிடில் — என்று கூறுமிடத்து, உள்ளது அன்றாய்— ஆன்மாவிற்குரிய நிலைத்த உண்மைத்தன்மை யல்லது ஆகி, இறைவன்—பரம்பொருளானவன், வந்து அணுக —ஆன்மா வினிடத்து வந்துகூட (நெருங்க) நீ போய்—நீ சென்று, ஒன்றுதல்—பொருந்துதல், இரண்டும் இன்றி — ஆன்மாத் தன்மையும், சிவத் தன்மையும் ஆகிய இரண்டும் இல்லாமல், உன் செலவு—நினது செலவானது (போதல்) அவன் வரத் தாய் —அப் பெருமானுடைய வருகை ஆகி, நின்றிடா நிலையே —நிற்கப் பெறாத ஒற்றித்த நிலையே, ஞானம் நிட்டை ஆய்— ஞான நிட்டை ஆகி, (வரும்), நூல் ஏ நிகழ்த்தும்—நூல்கள் நுவலா நிற்கும். (எ—று.)

நூல்கள்-சாத்திரங்கள், நிட்டை-அசைவு அற இருத்தல் குன்றல்—குறையப்பெறல், அணுகல்—நெருங்குதல், ஒன்று தல்—வேறுயின்றிப்பொருந்துதல், இரண்டு மின்றியிருத்தல்

—அத்துவிதமாதல், வரத்து — வருகை, நின்றிடாநிலை— அசைவறநிற்கும் தன்மை, ஞானம் — மெய்ஞ்ஞானம்.

மாறற மயக்கி வந்த
மலச்செல வதனின் வந்த
வேறறு மின்ப வெள்ள
வேதகந் தன்னி லுண்மைப்
பேறொடு பெறுதி சென்ற
பெருமையா மொழிவை வாணாட்
காறலை கண்க டந்தா
னெனுமுரை தடுக்கு மன்றே (86)

(இ-ள்) மாறு அற மயக்கி வந்த மலச்செலவு அதனின் -மாறுபாடுறுதல்நீங்கிட மயக்குதலைச்செய்து வந்த (செம்பிற் களிம்புபோல அநாதியே ஆன்மாவினைப்பற்றி நின்ற) பாசங்களிற் போதலினிடத்து வந்த, வேறு அறும் இன்பம் வெள்ளம் வேதகந்தன்னில்-தனிமை அற்றுப்போம் ஆன்மாக்கட்கு இன்பம் வெள்ளம் வேதகம் தன்னில்—பேரின்பப் பெருக்காகிய காளிதத்தைப் போக்கிய இரசவாதத்தினிடத்து உண்டான தன்மைத்தாக உண்மைப் பேறொடு பெறுதி— என்றுமுளதாகிய அழியாத நிலைமைச் செல்வத்தை யடைகுவை (மாணவக) சென்ற பெருமை—கடந்திட்ட பெருந்தன்மையினை யுடைத்தாம், ஒழிவை—நீங்குவை, வாழ்நாள் (வாணாள்) வாழும் நாட்களானவை, கால் தலை கண்கள் தந்தான் என்னும் உரை, கால்களையும் தலையினையும் கண்களையும் (ஞானேந்திரியங்களையும்) தந்தருளினான் என்னும் ஆப்தவாக்கியமானது, தடுக்கும் —தடுத்தலைப் புரியாநிற்கும், (எ—று) (கடுக்கும்—ஒக்கும்)

கால்தலை — காறலையெனவாயது, பேறு — செல்வம், பெறப்படுதலின் பேருயிற்று, வாழ்நாள்—வாணுளாயிற்று, கண்கள்தந்தான் எனற்பாலது கண்கடந்தான், எனவாயிற்று பெறுதி—பெறுவாய், தடுக்கும்—தடைபுரியும் (தடுத்தலைச் செய்யும்) அன்று ஏ—அசைநிலைகள்

ஏகமா யிரண்டா யேக
மாகுமே லியாவு மேகம்
ஏகமன் றிரண்டர யேக
மாமெனி லேக மின்றி
யேகமற் றிருமை யேயாம்
என்னிலத் துவித மெய்தா
தேகமே லிரண்டி லாமைக்
காணவ மிசையு மன்றே (87)

(இ-ள்) ஏகம்ஆய்—ஒன்ருகி, இரண்டாய்—இரண்டு மாகி, ஏகம்ஆகும்ஏல்—ஒன்ருகுமேயாயின், யாவும்—அனைத்துப்பொருள்களும், ஏகம்—ஒன்ருகும், ஏகம்அன்றி-ஒன்றே யல்லாமல், இரண்டாய்—இரண்டேயாகி, ஏகம்ஆம்எனில் ஒன்ருகுமேயாயின், ஏகம்இன்றி — ஒன்றில்லாமல், ஏகம் அற்று — ஒன்ருதலற்றுப்போய், இருமையேயாம்—இரண்டன்றன்மைத்தேயாம் (துவிதமாம் என்றபடி) என்னில்—துவிதமாம் என்றுரைப்பின், அத்துவிதம்எய்தாது—இரண்டற்ற ஏகத்தன்மையாகமாட்டாது, ஏகம்ஏல் — அத்துவிதமாயின் (ஒன்ருயிடின்) இரண்டு இல்லாமைக்கு — துவிதமில்லாதகாரணத்திற்கு, ஆணவம்இசையும்—ஆணவமாகிய மூலமலம் வந்துறும் (எ—று)

அன்றுஏ—அசைநிலைகள். இப்பாட்டு அத்துவிதமாதலையும் துவிதமாதலையும் ஒருவாறுணர்த்திற்ரும், ஒன்று—ஏகம், இரண்டு—துவிதம், ஆணவம் — ஆன்மாவினை யணுப்படுத்தித் தானே முனைந்து ஆன்மாவினை மறைத்து

நிற்கும் மூலமாம், இசையும்—பொருந்துதலுறும், இருமை—இரண்டு, ஒருமை, இருமை என்பன எண்ணின்கண் வந்தனவாம்.

மோசனம் பாச மென்னில்
நித்தமுன் மொழித லின்று
மோசன மின்மை யாகின்
முத்தியு மின்மை யாகும்
மோசன மடைத றீபம்
முன்னிரு ளிருமை போலும்
மோசன நித்த மென்று
மொழிகுவர் முத்தி சித்தர். (88)

(இ-ள்) மோசனம் பாசம் என்னில்—விட்டுநீங்குவதே மலநிலைஎன்றால், நித்தம்முன்மொழிதல்இன்றும் — அப்பாசமாகிய மலம் எப்பொழுதும் அழியாதது என முன்கூறுதல் இல்லையாய்முடியும், மோசனம்இன்மையாகின்—அப்பாசம் நீங்குதலில்லையாகுமே யாயின், முத்தியும்இன்மையாகும்—முத்திநிலையாகியவீடடைதலும் இன்மையாகி (இல்லாததாகி) முடிவுறும், மோசனம்அடைதல்—விட்டுவிடுகையானது, தீபம்முன்னிருள் — விளக்கும் அதற்கு முன்னர்த்தாயுள்ள இருட்டன்மையும் ஆகிய, இருமைபோலும் — இரண்டன் தன்மைபோலும் (ஆகையினால்) மோசனம்—பாசவலிகெடுதல், நித்தம்என்றும்—என்றுமுளதாதல் (அழியப்பெருமை) என்றும், முத்திசித்தர்—முத்தியாகிய சித்தியினையடைந்தவர் மொழிகுவர்—உபதேசம் புரிதலைச்செய்குவர் (எ—று)

மோசனம்—விலகல், முத்தி—விட்டுஅடைவது, சித்தர்—சித்தியுற்றவர்,

"பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே"
என்பது தேவாரம்.

அவுத்திரி யதனி ஞசை
முன்வினை யாகத் தோடே
தவிர்ப்புறு நின்ற கன்மஞ்
சார்தரும் வினையுண் டேலுற்
பவித்திடா திருளின் மாளும்
பான்மையே தென்னில் வன்னிச்
சுவர்க்கணி லேழு தாக்குத்
தூரியத் தொழில தாமே. (89)

(இ-ள்) அவுத்திரிஅதனின் — பல்வகையான தீட்சா குறிகளுள் ஒன்ருகிய அவுத்திரியென்னும் தீட்சையினுல், நாசம்—அழிவுறும், முன்வினை—முற்பிறப்புக்களில் ஈட்டிய இருவினைகளும், (அதனேடன்றி) ஆகத்தோடு ஏ தவிர்ப் புறும்—இருவினைகட் கிடாகவந்த உடலத்துடன் நீக்குதலை யுறும், நின்றகன்மம் சார்தரும் வினையுண்டேல் — எஞ்சி நின்ற கன்மத்தினைப்பற்றும் வினையுளவாயின், உற்பவத் திடாது—மேலோங்கித் தோன்றிடமாட்டாதாம், அருளில் மாளும் பான்மை ஏதுஎன்னில்—சிவபெருமான்றன் கருணை யினுல் மாளுதலையடையும் தன்மை எதுவென்றுல், வன்னிச் சுவர்க்கணில் — நெருப்பாகிய சுவரினிடத்து, எழுதுஆக்கு தூரியம்—எழுதுதலைப்புரியும் எழுதுகோலின், தொழிலது ஆம்—செயலதுஆகமுடியும் (எ—று)

வன்னியாகிய தீயினிடத்து எழுதப்படும் எழுத்தும் எழுதுகோலும் அழிவுறுமாப்போல, அவுத்திரி தீட்சையினுல் முன்வினை யாதியன அழிவுறும் என்பது கருத்தாகக்கோடல் வேண்டும்.

தீட்சைகளாவன:— தீட்சை-உபதேசம் அது, சட்சுதீட்சை பரிசதீட்சை, வாசகதீட்சை, மாநததீட்சை, சாத்திரதீட்சை, யோகதீட்சை, அவுத்திரிதீட்சை, என ஏழுவகைப்படும். அவற்றுள் மீனனது முட்டையைப் பார்த்துத் தானுக்கு

மாறு போல குருவானவர் உண்மையிலேயே சித்தத்தை வைத்து ஞானக்கண்ணினை விழித்து அத்துவாக்களிற் கட்டுண்ட கன்மங்களைத் தகித்து இராகுவினால் விடப்பட்ட சந்திரனைப்போல மலத்திரயங்களினின்று மாணவகனை நீக்குவது சட்சுதீட்சையாம். (1)

(2) பஞ்சப்பிரம சடங்கங்களை வடிவமாகவுடைய பஞ்சாக்கரத்தை வலதுகையிலேந்திப் பிராரர்த்த வாதனையை நீக்குவது பொருட்டாகச் சீடனுடைய சிரசின்கண்ணே சோதிமயமாக வைத்து அந்தச்சோதி மயமான தடையினை உள்ளும் புறம்பும் பரிபூரணமானதாகத் தியானித்து, அந்தக்கையினால் அவனுடைய ஆகத்தில் பஞ்சகலாத் தானங்களைப் பரிசித்து வாதனை யொழிக்குமது பரிசதீட்சையாம்.

(3) பஞ்சாக்கரத்தின் பொருளாயிருக்கின்ற முப்பொருள்கள் ஞானவொளியுடனே கூடியுபதேசிக்குமது வாசக தீட்சையாம்.

(4) சீடனைத் தானாகப் பாவிக்குமது மாநததீட்சையாம்.

(5) இந்த முறைகள் எல்லாம் இவனுக்குச் சந்தேகங்கள் தீரச்சாத்திரங்களிலே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், உண்டாக்குமது சாத்திர தீட்சையெனப்படும்.

(6) அட்டாங்க யோகங்களினாலே மனோபாவனையைக் கெடுத்து நிட்டையிலே புரிவிக்குமது யோக தீட்சையாகும். (இவ் வாறு வகை தீட்சையும் பக்குவான்மாக்கட்குச் செய்வது).

(7) அவுத்திரிதீட்சையாவது:- குண்டமண்டலத்தோடே செய்யுமதுவாம். தவிர்த்தல் — விட்டுவிலகல், உற்பவித்தல் — தோன்றுவித்தல், மாளும் — அழிவுறும், வன்னி — நெருப்பு

தூரியம் — எழுதுகோல், ஏழுது—எழுதல், தொழிலது—சித்தரிப்பது.

உடறிரி கின்ற திங்கு
 ஞுறைவிட மெரியின் வெந்த
படமடி கும்ப கர்ண
 பணியறு திகிரிப் பான்மை
விடுதிசெய் வருண மைந்தும்
 விதிப்படி யருளான் மாறி
நடுநிலை விளங்க நிற்க
 நின்றது நசிக்கு மன்றே (90)

(இ-ள்) உடல்திரிகின்றது. இங்கு உன்உறைவிடம்— இவ்வுலகின்கண் (மாணவக!) உன்னுடைய தங்குமிடமா கின்ற உடலானது சுழலுதலைச் செய்கின்றது, எரியின் வெந்த படம்மடி - அக்கினியின்கண்பட்டு வெந்திட்டபடமாகிய ஆடை போலும், கும்பம் கர்ண பணிஅறுதிகிரிபான்மை— பாண்டமாகிய சட்டியினைச்செய்த செயல்அற்ற சக்கரப்பான் மையாம், பாண்டமானது உண்டாம்போழ்துவரை துணைக் காரணமாக நின்று சக்கரம் சுழலுவதுபோலும்) விடுதிசெய் வருணம் ஐந்தும் — விடுதலையுறும் நிறங்கள் ஓர்ஐந்தும், விதிப்படி—முறைப்படி, அருளால்மாறி — திருவருட்பான் மையான் வேறுபாடுற்று, நடுநிலை—ஒருபாற்கோடாது நடு நிலைமைத்தாக, விளங்க—விளங்குதலையுறவும், நிற்க — நிலை பெறவும், நின்றது—நிலையுற்றது, நசிக்கும் — அழிவுறுதலை யடையாநிற்கும், (அன்று ஏ—அசைநிலைகள்)

கும்பம்—பாண்டம், திகிரி —சக்கரம், திரிதல்—சுழலல், கர்ணம்—உண்டாதல், வருணம் (வண்ணம்) பஞ்சவர்ணம் அவை:- கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை, யென்பனவாம். நசிக்கும்—அழிவுறும், விதிப்படி — ஆணை யின்படி, பணி—செயல்.

இருள்வலி யிருள தீசன்
அருளுயி ரென்னு மைந்தின்(னை)
பொருடெரி காலை யொன்று
போய்விளை விக்கு மற்றொன்(று)
அருள்செறி சிவமுன் னாக்கி
யாதியோ டிருள்கீ ழிட்டுத்
தெருளுயிர் பொதுவி லாக்கிச்
சிவம்விளை விக்கு மன்றே. (91)

(இ-ள்) இருள்வலியிருளது ஈசன் அருள் உயிர் என்னும் ஐந்தின்—இருளும் வலியிருளதும் இறைவனும், அருளும், ஆன்மாவும் என்று கூறப்பட்ட ஐந்தனது, பொருள்தெரிகாலை — பொருளினையாராயுமிடத்து, ஒன்று போய் விளைவிக்கும் மற்றொன்று-ஒன்றுசென்று வேறொன்றினை யுண்டுபண்ணுவிக்கும், அருள்செறிசிவம்முன் ஆக்கி— கருணைநிறைந்த சிவத்தினை முன்னர்த்தாக உதிப்பித்து, ஆதியோடுஇருள்கீழ்இட்டு — இருளினையும் இருள்வலியை யும் கீழாம்படிச்செய்து, தெருள்உயிர்—தெளிவுற்ற ஆன்மா வானது, பொதுவில்ஆக்கி—நடுவுடைத்தாக உண்டுபண்ணி, சிவம்விளைவிக்கும் - சிவபோகத்தினை விளைவியாநிற்கும், அன்று ஏ—அசைகள்.

ஈசனும் அருளும் ஒன்றும். இருளும் உயிரும் ஒன்றும். உயிரானது இருளையும் இருள்வலியினையும் போக்கி இறைவனையும் அருளையும் முன்னர்த்தாக சிவபோகத் தை நுகரா நிற்கும். ஆகவே இருளும் வலியும் முன்னர்த் தாகவும் ஈசனும் அருளும் பின்னர்த்தாகவும் இவற்றின் இடையில் உயிர் நிற்றலான் பொதுவிலாயிற்றும் என்று கரு துதல் வேண்டும்.

(நமவினை யத்த னுப்ப
ணீறைகின்ற மலமதாக).................(92)

செலவறு சிய்ய தாகுஞ்
 செலறு சேர்வாய்ச் சேறல்
நிலவிய வாயவ் வின்பின்
 நிறைவது நிறைவுக் கன்மை
யிலதென விரண்டு மற்ற
 வின்னவா மினிய மேன்மே
லுலைவற லம்ம வென்றே
 யுணர்த்துவ தெழுத்தி னுண்மை (93)

இஃது (பஞ்சாட்சரத்தில் முதலட்சரத்தின் நிலைமை நிலைபெறுத்தப் பெறுகின்றது)

(இ-ள்) செலவு அறு சி அதாகும் — போதல் அற்ற சிகரம் அதுவாகும். சி என்னும் அட்சரம் இறைவனாகிய பதியுருவாம் செலவு அறுசேர்வு ஆய்சேறல் — போதலற்ற சேர்வாய்ச் செல்லுதல். நிலவியவாய்— யாண்டுமுலவுவதாகி, அ இன்பின் நிறைவது—அந்த இன்பின் பூரணத்தன்மையினை யுடையது. நிறைவுக்கு அன்மை இலது—நிறைவுடைமைக்கு (பூரண மாதலுடைமைக்கு) அல்லாமை இல்லாதது, என இரண்டும்—என்று கூறப்பெறுகின்ற அவ்விரண்டும், அற்ற அற்றவையும், இன்னவாம் — இன்னத்தன்மையினையுடையவாம், இனிய—இனியபண்பினையுடைய, மேல்மேல்உலைவு அறல்—மேலும் மேலும் அசைதல் அற்றுப்போதல், என்றே என்று கருதுவதையே, உணர்த்துவது — அறிவுறுத்தப் பெறுவது, எழுத்தின்உண்மை-அட்சரத்தினது மெய்ம்மைத் தன்மைத்தாகும்.

சிய்யது சிருட்டி வாவே
 திதியவ்வே யழிவு நவ்வே
யையமில் திரோத மவ்வே
 யருளது பவ நடத்தில்

துய்யவஞ் செழுத்தி னுன்மைத்
தொழில்களைந் தினையு மாறு
துய்யுமா றுயிர்க்குச் செய்த
லீதென வுணர்த்து நூலே (94)

(இது பஞ்சாட்சரமே சிருட்டியாதி கிருத்தியங்களைப் பண்ணும் என்கின்றது.)

(இ-ள்) சிய்யது — சிகரமே, சிருட்டி — படைப்பாம், வா திதியே — வகரமே காத்தலாகும், யவ்வே அழிவு— யகரமே அழித்தலாகும், நவ்வே ஐயம்இல் திரோதம் — நகரமே சந்தேகமில்லாத மறைப்பேயாகும், மவ் வே — மகரமே, அருளது — அருளலாகும், பவம் — உண்டாம், நடத்தில்—நடராசப் பெருமானுடைய ஆனந்த தாண்டவத்தில், உய்ய — கடைத்தேற, அஞ்செழுத்தின் உண்மை தொழில்கள் ஐந்தினையும் மாறுது — பஞ்சாட்சரத்தின் மெய்ம்மையாகின்ற சிருட்டியாதி கிருத்தியங்கள் ஐந்தினையும் மாறுபாடுறுது, உய்யும் ஆறு—பிழைக்கும் மார்க்கமாக, உயிர்க்கு — ஆன்மாக்கட்கு, செய்தல் — உண்டாக்கல், ஈது என—இதுவாம் என்று, நூல் உணர்த்தும்—நூல்களே அறிவுறுத்தா நிற்கும். (எ—று).

உண்மை விளக்க வெண்பாவினையும் நோக்குக.
“ தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு ”

என்பதாம்.

பொறிபுல னுதி போக்கிப்
போக்குடன் வினையைப் பாற்றிச்

செறியிருட் கிடைய கன்று
  சிற்பரை யாகி ஞேயத்(து)
அறிவெலா மின்ப மாக
  வின்பெலா மறிவாய் நிற்பர்
பிறிவிலத் துவித வுண்மைப்
  பேறுபெற் றவர்க டாமே (95)

(இது, அத்துவிதமாகின்ற உண்மைப் பேறு பெற்றவர் நிலையுணர்த்துவதாம்.)

(இ-ள்) பொறிபுலனுதி போக்கி — ஐம்பொறிகளும் ஐம்புலன்களிற் செல்ல வொட்டாமற் றடுத்தலைச் செய்து, போக்குடன் வினையை யாற்றி — அங்ஙனந் தடுத்தலுடன் அவற்றின் செயல்களையும் கெடுத்து, (பொய்ப்புலன்களைந்து நோய் புல்லியர்பாலன்றியே மெய்ப் புலவர் தம்பால் வினை யாவாம்.) செறி இருள் கிடை அகன்று—ஆன்மாவிலே யநாதியே பற்றிநின்ற இருளாகின்ற மலமாகிய கிடைக்கை யினின்று நீங்கி (மலவலி தொலைத்து) சிற்பரைஆகி—பராபரனின் வேறுபடாத பராசத்தியாகி, ஞேயத்து—அறியப்படு பொருளிடத்து (உண்டாம்) அறிவுஎலாம்—உணர்வுயாவும் இன்பம்ஆக — பரசுகமாக, இன்புஎல்லாம்—பேரின்பமெல்லாம், அறிவாய்—பரஞானமாய், நிற்பர் — நிலைபெறுவர், பிறிவுஇல்அத்துவிதம்உண்மை, பேறு பெற்றவர்கள் (தாம் —ஏ—இவ்விரண்டும் அசைநிலைகளாம்) பிரிவில்லாத அத்துவித நிலையாகின்ற மெய்ம்மைப் பேற்றினைப் பெற்றவர்கள், (எ—று)

செறிஇருள்கிடைக்கை—மலத்திலே கிடத்தல், கை— தொழிற்பெயர் விகுதி, பொறி—இந்திரியம் (ஞானேந்திரியக் கன்மேந்திரியக்கொத்து) பாற்றி—சிதறச்செய்து, புலன்— பொறிகட்குப் புலனுதலின் புலன் ஆயிற்று, அவை:- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்பனவாம், பிறிவு—மற்

றையது, பிரிவு என்பதன் மரூஉ வாகலுமாம் பிறிவு என்பதாம்.

ஆசனஞ் செபந்த வம்மா
   மர்ச்சனை,விரதங் காலந்
தேசமோ ரிடங்கு றித்தல்
   திக்கொடு த்தான மியாவும்
நாசமோ டியற்ற லற்று
   ஞாதுரு ஞேய மாதல்
பேசிடி லுறங்கு வோர்கைப்
   பொருளொழி பெற்றி யாமே. (96)

(இ-ள்) ஆசனம் — இருக்கையும் (யோகாசனங்கள்) செபம்—செபமும், தவம்-தவமும், அர்ச்சனை-அர்ச்சனையும், விரதம்-விரதமும், காலம்-காலமும், தேசம்-தேசமும், ஓரிடம்-ஓரிடமும், குறித்தல்-குறித்தலும், திக்கொடுதானம் யாவும்-திக்கும், தானமும், யாவும்ஆகிய அனைத்தும், நாசம்ஒடு இயற்றல்அற்று-அழிவும் ஆக்கமும் (ஆக்கலும்) அறப்பெற்று (நீங்கப்பெற்று) ஞாதுரு ஞேயம் ஆதல் — அறிபவனும் அறியப்படுபொருளும் ஆகுதல், பேசிடில்—பேசினால் (கூறினால்) உறங்குவோர் — துயில்கின்றவருடைய கைப்பொருள் கையிடத்துப் பொருள்களானவை, ஒழிபெற்றி ஆம் (ஏ) நீங்கப்பெறும் தன்மைத்தாம் தூங்குபவர் கைப்பொருள் நீங்குதல் தூங்கினார்க்கு அறிதல் கூடாது.

ஆசனம்—இருக்கை, யோகாசனங்கள் அவை, பத்மாசனம், சுகாசனம், குக்குடாசனம், மயூராசனம், சிரசாசனம் முதலியனவாம். செபம்—தியானிக்கப்படும் பொருளை எதிர் முகமாக்கும் பொருட்டு அதனையுணர்த்து மந்திரத்தை யுச்சரித்தல். தவம்—மனமானது பொறிவழி போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயிலில் நிற்றலும், மாரியினும் பனியிலும்

நீரிலே நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற் றுற்றம் முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப்பிறவுயிர் களை யோம்புதல் மனத்திற்கும் இந்திரியத்திற்கும் ஏகாக்கிரம் வருவதுமாம். அர்ச்சனை (அர்ச்சனை) அருச்சனை பாட்டேயாம் என்பதும் கருதத்தக்கது பூக் கைக்கொண்டரன் பொன்னடி போற்றிலார் என்பது தேவாரம்

**விரதம்:—** புண்ணியம் ஏழனுள் ஒன்ருகிய நோன்பு, உண்டி சுருக்கல், வாய்மையோடிருத்தல் முதலியன. **காலம்**—வித்தியா தத்துவங்களுள் ஒன்று. அது, கலாதிதத்துவங் களுக்கு முன்னரே யுண்டாய்ப் பரமேசுவர சத்தியினால் அதிட்டிக்கப்பட்டதாய் இறப்பு நிகழ்வு எதிர்காலமென மூன்று விதமாகப் பரிணமித்ததாய் ஆன்மாவிற்குச் சீக்கிரம் சாவகாசம் என்பன முதலாயபோதத்தைச் செய்வதால் சரீரா திகளைப் பரிணமித்து அழியச்செய்கின்றது. இது மாயை யிலே பிறந்தது ஆன்மாக்களுக்கு மோட்சத்தை நியமிக்கும் அவதரத்தில் செனன ஏதுவான மும்மல பந்தத்தைத் தனது கடிகையாலே பந்தித்து நீக்கும். நெடுங்கால நுகர்ந்தான், சிறிதுகால நுகர்ந்தான் எனப் புருடனுக்குப் போகத்தை வரையறுத்தல்.

உள்ளொடு புறம்பே தென்ன
வுற்ற பூசனை யிரண்டும்
மெள்ளவே நழுவ வங்கண்
மலமிலா வேதத் தார்த்திட்(டு)
எள்ளுமா றிலாத ஞேய
மாகவே யின்ப மான
நள்ளொடு கீழ்மேல் விம்மி
நவையில ராவ ரன்றே (97)

(இ-ள்) உள்ளொடு புறம்பு ஏது என்ன உற்ற பூசனை இரண்டும்—அகமும் புறமும் ஏதுவென்று கூறுமாறு

பொருந்திய பூசைகள் இரண்டும் (அகப்பூசையும் புறப்பூசையுமாம்) மெள்ள ஏ நழுவ — மெதுவாக தன்னைவிட்டு அறியாதவாறு விலக, அங்கண் — அவ்விடத்து, மலம் இலா(த) வேத்து ஆர்த்திதிட்டு—அழுக்கற்ற இரசவாதத்தாற் சுத்திகரிக்கப்பட்ட) செம்புபோல விளக்கமுற்று. ஏள்ளும் ஆறுஇலாத ஞேயம் ஆக ஏ— இகழப்பெருத (இகழ நிலையற்ற அறியப்படு பொருளாகவே, இன்பம்ஆன —முத்திநலமான, நள்ளொடுகீழ்மேல் விம்மி—நடுவும் கீழும் மேலும் பூரித்தலையுற்று, நவையிலர் ஆவர்—குற்றமிலர் ஆகுவர் (அன்று ஏ—அசைநிலைகள் ஏன்றவாறு.

அகப்பூசையாவது:— இருதய கமலத்தில் இறைவனை எழுந்தருளச்செய்து பூசிப்பது

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைபநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டி னேமே''

என்னும் பாடல் கொண்டறியப் பெறுவது. இஃது அந்தரியாகப்பூசையெனவும் புறப்பூசையெனவும் பெறும். புறப்பூசை புறத்தில் பீடத்திலே பஞ்சசுத்திசெய்து சுவாமியை எழுந்தருளப்பண்ணி குண்டமண்டலாதிகளை வகுத்து அக்கினிகாரியஞ்செய்து திருமஞ்சன முதலியன வற்றினை நிரப்பி அன்பினை அடிப்படையாக்கொண்டு அபிடேகாதிகளைப்புரிந்து நால்வகைப் பூக்களையுங்கொண்டு அருச்சனை புரிந்து நிவேதனம் செய்து செபஞ்செய்வதாம்.

"பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்
பிள்ளை யார்தம் முள்ளத்தே
ஒருமை நினைவா லும்பர்பிரா
னுவக்கும் பூசை யுறுப்பான

திருமஞ் சனமே முதலவற்றுட்
டேதா தனவன் பீனினிறைத்து
வருமங் நெறியே யருச்சனைகள்
செய்து வணங்கி மகிழ்கின்றார்''

என்பது பெரிய புராணம். இது புறப்பூசையின் அங்கமாயின வற்றுள் ஒருசிறிது உரைக்கப்பெறுகின்றது.

மெள்ளவே நழுவலாவது:— இருவகைப் பூசையினையும் ஒருவாறுமுற்ற முடித்துப் பின்னர்த்தியானம் செய்கின்றுழி காலங்கடத்தலைச்செய்யாநிற்கும். அதுகாலை மெதுவாகப் பூசனைபுரியவேண்டுமெனும் நினைவு மற்றுநிற்கையாம். மலம் —அழுக்கு, பாசம்

ஆர்த்திடல்—பிணித்திடல், நள்—நடு, நவை—குற்றம் அன்று—ஏ—அசைநிலைகள்.

மங்குலின் மன்ன யாவும்
யாவையும் மங்குன் மன்னி
யெங்குமாய் நிற்றல் போல
விறையருள் ஞான மெங்கும்
பங்கற நிறைத லான்மெய்ப்
பார்வையிற் பார்த்த வெல்லாஞ்
சங்கர னுருவ மாக்கித்
தாமற வளர்வ ரன்றே (98)

(இ-ள்) யாவும் — அனைத்துப்பொருளும், மங்குலின் மன்ன—ஆகாயத்துநிலைபெறவும், (மறைவுற்றுநிறைவுறவும்) யாவையும்—அவ்வனைத்துப்பொருள்களையும், மங்குல்மன்னி —ஆகாயமானது தன்னிடத்தே யடக்குதலைப்புரிந்து, எங்குமாய்நிற்றல்போல — வியாபகமாய் நிலையுறுதல் போல, இறை அருள் ஞானம்-இறைவன்றன் கருணையாகின்ற ஞான

மானது, எங்கும்—எவ்விடத்தும், பங்கு அற நிறைதலின்—ஊனமின்றி நிறையப் பெறலால்; மெய்பார்வையின் பார்த்த எல்லாம்—அவ்விறையருள் ஞான மாகின்ற உண்மை நோக்கத்தினுல் நோக்கப்பட்டன அனைத்தும், சங்கரன் உருவம் ஆக்கி—சிவபெருமானுடைய வடிவமாகவே விளங்குவதாகச் செய்து, தாம் அறவளர்வர் — ஞானநாட்டமுடையவர்களாகிய தாங்கள் (மெய்ஞ்ஞானிகள்) நன்ருக சிவஞான போத வளர்ச்சியுறுவர். (எ—று)

மங்குல்—ஆகாயம் (மேகமும்ஆம்) மன்னுதல்—நிலைபெறல், எங்குமாய்நிற்றல்—சருவவியாபகமாகி நிலைபெறல் பங்கு (பங்கம்) ஊனம் (குற்றம்) சங்கரன்-சுகங்கொடுப்பன் (சங்காரஞ் செய்பவனுமாம்) அன்று ஏ—அசைநிலைகள்.

தரைமுதற் கருவி யாவுஞ்
சடமென வுணர்ந்து ஞானம்
பரையினின் றெவையு முண்மைப்
பார்வையா லழித்துப் பஞ்ச
வரையுமஃ தருளான் மாறி
வரையறு சிவமே யாகுங்
கரையிலா ஞான பூசை
கைவிடார் மெய்வி டாதார் (99)

(இ-ள்) தரைமுதல் கருவி யாவும்—பார்முதல் (பிருதிவிதத்துமுதல்) தத்துவக்கூட்டங்களெல்லாம், சடம் என வுணர்ந்து—அசித்துப் பொருள் என்று அறிந்து, ஞானம்—வந்துள்ள உண்மையறிவானது, பரையினின்றும் — பரனினின்றும் பிரிவிலதாகிய பராசத்தியின் அதிட்டிப்பினின்றும் எவையும் — எல்லாவற்றினையும், உண்மை — உள்ளதனையுள்ளவாறறியப்பெறும் மெய்ம்மையாகின்ற, பார்வையால் —நோக்கினுல், அழித்து—பொய்ம்மையவாயினவற்றினைப்

பொய்ம்மையாகவே யறிந்து, (போக்கி) பஞ்சவரையும்—ஐம்பூதக்கலப்பாலாகிய இவ்வண்ட பிண்டாதிகளையும், அஃது அருளான்மாறி — அந்த சிவையின் கருணைப்பெருக்கினால் வேறுமாறு செய்து (அவற்றின் பெற்றிமையறிந்து) வரை அறும்சிவம் ஏ ஆகும்—அளவுபடாத (எல்லையில்லாத) சிவமேயாதலையுறும், கரையிலா—வரம்பு இலாத, ஞானபூசை—ஞானபூசையினை, மெய்விடாதார் — மெய்ம்மைத்தன்மையினின்றும் நீங்காதவர்கள் (சித்தராகிய முத்தர்கள், கைவிடார்—பற்றுவர் (நீங்காதுகொள்வர்) எ—று.

இப்பாட்டானது ஞானபூசையானது இப்பெற்றித்து என்றும், இதனைமேற்கொள்வார் இவரெனவும் வரையறை செய்தவாறும், சடம்—அறிவிலது, ஞானப்பரை—ஞானசத்தியுமாம், வரை—அளவு, (எல்லை) கரை—வரம்பு, மெய்விடாதார் — பத்தரும் சித்தருமாம், ஞானபூசை—சிவமாந் தன்மைப் பெருவாழ்வு வாழும் பூசையாம்.

கண்டது சடமாக் காணுங்
   கருத்தினை யதம மாகக்
கொண்டது கழன்ற காணுக்
   காட்சிமத் திமத்திற் கூட்டி
யுண்டெனு மிவையி றந்த
   வுத்தம நிலைய தான
தொண்டிலத் துவித மாவர்
   தொலைவறு துகளி லோரே. (100)

(இ-ள்) கண்டது சடம் ஆக காணும் கருத்தினை—கண்ணுற் காணப்பட்டதாகிய பொருளை, அறிவிலது ஆக காணப்பெறும் உட்கருத்தினை, அதமம் ஆக-இழிவாக (கடையாக) கொண்டது கழன்ற காணுதகாட்சி—அங்ஙனம் கொள்ளப்பட்டதை நீங்கப்பெற்ற காணுத காட்சியை (உள்ளதை உள்ளவாறுணரும் அறிவை) மத்திமத்தின்கூட்டி நடுவிடத்

திற் சேர்த்து (இடைப்பட்டதாகச் சேர்த்தி) உண்டு என்னும் அவை இறந்த உத்தம நிலையது ஆன தொண்டில் உள்ளது என்னும் அவற்றினைக்கடந்த முதன்நிலையினது ஆகிய தொண்டினில் (மேலானது ஆகிய) தொலைவு அறு துகள் இல்லோர்—அழிவற்ற பெரியவரும் குற்றமற்றவரும் ஆகிய ஞானிகள் அத்துவிதம் ஆவர்—அத்துவிதமாகிய முத்திநிலையினராவர். (எ—று)

தொண்டு—குருலிங்க சங்கமபத்தியினிற்றலே மேலான தொண்டு ஆகும். இறத்தல்—கடத்தல். முதல், இடை, கடை யென்பனவே உத்தம, மத்திம, அதமமாகும். சடம்—அறிவிலது, தொலைவு—அழிவு, காட்சி—ஞானம், கழன்ற—நீங்கின, துகள்—குற்றம்.

ஈசனு மீச னன்பர்
வேடமு மிருமை நல்குந்
தேசிக னுருவு முண்மைச்
சிவமென வுருகி நெக்குப்
பேசுதல் குழற லன்பு
பெருகிட விழி நீர் பொங்க
வாசற வழிவ ரின்ப
வநுபவ மளவி லோரே (101)

(இ-ள்) ஈசனும்—இறைவனும், ஈசன் அன்பர் வேடமும் — சிவனடியார் வேடமும், இருமை நல்கும் தேசிகன் உருவும்—இம்மை மறுமையாகிய இருமைப்பயனும் கொடுத்தருளும் குருவடிவும் ஆயவற்றினை, உண்மை சிவம் என உருகி — என்றுமழியாத அநாதிமல முத்த சித்துருவாகிய சிவமாகவே கருதி மனமிளகி, நெக்கு—நெக்குவிட்டு, பேசுதல்குழறல்—உரைதடுமாறல், அன்புபெருகிட-பத்திமேலிட

விழிநீர்பொங்க-கண்களினின்றும் ஆனந்தவெள்ளம் பெருக, ஆசுஅறஅழிவர்-குற்றமறத் தன்வயமற்றிருப்பர், (இங்ஙனம் இருப்பவர் யாவர் என்னில்) இன்பஅநுபவம் அளவில்லோர் —சுகாதீதப் பெருவாழ்வுற்ற பெருமையாளர். (எ—று)

இன்பம்அநுபவம்—முத்திப்பேறுநுகர்வு, (முத்திநிலம்) ஆசு—குற்றம், தேசிகன் — ஞானவொளியுண்டாக்குபவன், இருமை—இரண்டன்தன்மை, பொங்க — மிகுதலையடைய, நெக்குவிடல்—குழைவுண்டாதல், அன்பர்—அடியவர், (பத்திமான்களாம்)

“செம்மலர் நோன்றாட் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே”

என்ற சிவஞான போதப் பன்னிரண்டாஞ் சூத்திரமுங் கருதற்பாலதாகும்.

பெத்தமு முத்தி தானும்
பேசிடின் முன்னும் பின்னும்
ஒத்துல காயு தாதி
யுணர்கி (லாரெ)ன்று மித்தை.
வித்தகர் நாலுக் கெட்டா
விமலவே தாந்த மாகி
நித்தமா யுளதா மொன்றை
நிகழ்த்திடு மிந்நா லன்றே (102)

**(இ-ள்)** பெத்தமும் முத்திதானும்பேசிடின்—பெத்தநிலையையும் முத்திநிலையையும் பேசிட்டால், முன்னும் பின்னும் ஒத்து—ஆதியும் அந்தமும் ஒன்றாகி (பெத்தமும் முத்தியும் ஒத்து) உலகாயுதம் ஆதியுணர்கிலார் என்றும்—உலகாயுத முதலிய மதவாதியர்கள் உணரமாட்டாதவராவர் என்

றுரைத்தாம். ஆகவே இந்நிலைகளுணர மாட்டார்கள் கீழ்ப் போன மதவாதியர்கள், மித்தை—அறியாமைப் பெரிதும் உடைய, வித்தகர் — ஆற்றலுடையவர் (மதவாதியர்) நூலுக்கு-ஆகமங்கட்கு, எட்டா(த) முடிவு அறியமாட்டாத விமலவேதாந்தம்ஆகி—தூய (நிருமல) வேதாந்தத்தன்மைத் தாகி, நித்தமாய் — அழியாத்தன்மைத்தாகி, உள்ளதுஆம் ஒன்றை—என்றும் உள்ளதாய் நிலவும் (சத்தாகி யிருக்குந் தன்மை) ஒருபொருளை, இந்நூல்—இத்திருநெறி விளக்க மானது, நிகழ்த்திடும்—கூறுநிற்கும், அன்று ஏ—அசைநிலை கள் (எ—று)

பெத்தம் — பாசத்தோடு கட்டுப்பட்டு நிற்கை என்பது பொருள். முத்தி இரண்டு வகைப்படும். பதமுத்தி யென வும் பரமுத்தியெனவும். பதமுத்தியாவது சிவசாலோக சாமீப சாரூபம் என மூவகைப்படும். பரமுத்தியாவது சிவசாயுச்சியமாகிய இரண்டறக் கலத்தலாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நிலைகளினின்றோர் அடை யும் பதவியாகும்.

உலகாயுதம் முதலவாவன:— உலகாயுதம், சௌராந்திகம், வைபாடிகம் யோகசாரம், மாத்தியமிகம், ஆருதெம் (சைனம்) என்னும் புறப்புறச்சமயம் ஆறும்; தருக்கம் மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் ஆகிய புறச்சமயமாறும், சைவம், பாசுபதம், மகாவிரதம், காளா முகம், வாமம், வைரவம் என்னும் அகப்புறச்சமயம் ஆறும், பாடாணவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், அவிகாரவாத சைவம், பரிணாமவாதசைவம், சுத்தசைவம், பேதவாத சைவம், என்னும் அகச்சமய மாறும் ஆக இருபத்துநான்காம்.

உலகாயுதம் ஆவது:— இம்மதத்திற்குரிய நூல் மூவகைப் படும், சார்வாகன் கோட்பாட்டின்படி, உலகவின்பமே மேலானது என்னும் ஒரு நிரீச்சுரவாதம். உலகாயுதம்பற்றிய நூலினைச்செய்தவன் பிருகற் பதிபகவான் ஆவர்.

இது கூறுவது:— காட்சியொன்றுமே பிரமாணமென்றும் காட்சிப்பொருளாகிய மண், தீ, நீர், காற்று நான்குமே மெய்ப்பொருள் என்றும் இந்த நால்வகைப் பூதக்கூட்டமான சரீரமே ஆன்மாவென்றும், உடம்புவளர உணர்வு வளரும் என்றும், உடம்புதேய அறிவுதேயும் என்றும், கடவுள் ஒருவன் இல்லையென்றும் இம்மையில் இன்பத் துன்பங்களே சுவர்க்க நரகங்கள் என்றும், உடலானது அழிந்தால் மேலைக் காவது ஒருவினையிருப்பதில்லை என்றும் இயம்புவதாம்.

பௌத்தம் ஆவது:— பிருதிவியாதி புத்தியந்தமான இருபத்துமூன்று தத்துவாத்மகமான பிரபஞ்சம் தீபச்சுவாலையைப்போலக் கணிகமாத்திரம் என்றுரைக்கும்.

ஆருகதம்:— அருகன் என்றொருகடவுள் அநாதியேயுள்ளவன், என்றும், சீவன் என்றொருபொருள் அநாதியே குற்றமுடையதாயிருக்கும் என்றும், இச்சீவன் தூலதேகந்தேயத் தேயும் வளர வளரும் என்றும், மற்றை இந்திரியங்கள் உளவென்றும் இவையெல்லாம் அத்திகாயம், நாத்திகாயம் என்று வழங்கப்படும் என்றும், இந்நூற்பொருள் ஞானத்தாலும் இந்நூலிற் கூறப்படுஞ் சுடுபாறையிற் கிடத்தல் முதலிய பாவங்களினீங்கி, அருகன்போலக் குற்றந் தீர்ந்தவனாவனென்றும், இந்த நூலும் இந்தப்பொருளும் உண்டா இல்லையா என வினாவினால் உண்டாம் இல்லையாம், உண்டும் இல்லையுமாம் எனமூவகையாகச் சொல்லும் என்றும் வகைப்படுத்துமாம், இங்ஙனமாக ஏனைச் சமயங்களும் படிப்படியாகக் கூறுநிற்கும், தத்தஞ் சமயவுண்மைகளையெல்லாம். மித்தை — பொய்ம்மை, எட்டா—ஈறுகெட்ட எதிர்மறையெச்சம், விமலம் — தூய்மையானது, வேதம் அந்தம் — வேதாந்தம், வேதத்தின்முடிவு, உபநிடதாங்களாம், நித்தம்—என்றுமுளது (அழியாத்தன்மைத்து) நிகழ்த்திடும்—கூறிடும், வித்தகர்—ஆற்றலுடையவர், உளது-உள்ளது, ஆம் ஆகும், அன்று ஏ—அசைநிலைகள்.

இந்தநூ லுணர்த்து மெல்லை
யருளளித் தேது நாடி
முந்திய வுவமை நான்கு
முறைமையிற் கண்டு முன்பின்
வந்தவா றொக்க நோக்கி
மலைவற மயக்கந் தீரச்
சிந்தைவைப் பவர்பா லுண்மைத்
தெளிதரத் தெருட்ட லாமே. 103

(இ-ள்) இந்த நூல்—இந்த திருநெறிவிளக்கமெனும் சாத்திர நூலானது, எல்லை-வரம்பு, ஆனது அருள் அளித்து —கருணைபுரிந்து (தந்து) ஏதுநாடி—காரணங்களை யாராய்ந்து, முந்திய உவமைநான்கும்—முற்பட்ட உவமைகள் நான்கினையும், முறைமையின்கண்டு-ஒழுங்கான வகையில் நல்லவகையில் உற்றுராய்ந்து, முன் பின் வந்த ஆறு ஒக்க நோக்கி— முன்னும் பின்னும் வந்த நெறிகளை ஒப்பத்துருவி, மலைவுஅற —மலைத்தல் ஒழிய, மயக்கம்தீர—தெளியாமையாகிய மயக்க வுணர்வு நீங்க, சிந்தைவைப்பவர் — மனத்தினைவைப்பவர், பால்—இடத்து, உண்மை — மெய்ம்மையாந்தன்மையினை, தெளிதர — தெளிவுண்டாக, தெருட்டல் ஆம் — தெளிவு உண்டாகும், எ—று, ஆம்—அசைநிலையுமாம்.

உவமைநான்காவன:— வினைபயன் மெய் உருவென்பன பற்றிவருவனவாம் இதனைப்பற்றி முன்னர் உணர்த்தப்பட்டுள்ளது, எல்லை-முடிவு(வரம்பு)மலைவு மாறுபாடு, மயக்கம்-விபரீதவுணர்வு, சிந்தை—மனம், தெருட்டல்—தெளிவு.

திருநெறி விளக்க மென்னச்
சிவாகமத் தெய்வ நூலின்
பெருமையைச் சிறுமை யாக்கிப்
பிழைப்புவாய்ப் பறியா நாயேன்

அருளெ னும் பித்து மேலிட்
டறைந்தன னங்க ணக்கண்
வருபகீ ரதிபோ லிந்நூல்
மதிப்பர்நன் மதிபெற் றோரே. 104

(இ-ள்) சிவாகமம் தெய்வம் நூலின் பெருமை—சிவ பெருமானுடைய ஈசானம், தற்புருடம் அகோரம், வாம தேவம், சத்தியோசாதம் என்னும் பஞ்சமுகங்களினின்றுந் தோன்றியனவாயுள்ள மூலாகமம் இருபத்தெட்டும், உபா கமம் இருபத்தெட்டும், ஆகிய நூல்களின் சாரமாகிய பெரு மையினை, பிழைப்பு வாய்ப்பு அறியாநாயேன் – வாழ்க்கை நயம் அறியப்பெறமாட்டாதவனாகிய நாயேன், அருள் எனும் பித்து மேலிட்டு — கருணையென்று கருதப்படும் பைத்திய மானது மேலிட்டு, திருநெறிவிளக்கம் என்ன—திருநெறி விளக்கமெனு நாமம் சூட்டி, சிறுமை-சிறியதாக்கி, அறைந்த னன்–கூறினன், அங்கணக்கண்—சாக்கடைநீரினிடத்து, வரு பகீரதிபோல்-வந்தகங்கா நதியினைப்போல, நன்மதிபெற்றோர் —நல்லறிவு வாய்க்கப்பெற்ற பெரியோர், இந்நூல்—இத் திருநெறிவிளக்கத்தினை, மதிப்பர்—மதித்திடுவர், எ-று.

திருநெறி விளக்கம்—முத்தியாகிய நெறியினை (மார்க்கத் தினை) விளக்கமுறுவிக்குங் கலை நூல் என்று பொருள். திரு- முத்தியாகிய திரு, ஆகமம்—முப் பொருள்களையும், நான்கு பாதங்களையும், சிவ பேதங்களையும், திருக் கோயில் எடுப்பிக் கும். சிற்பக் கலையும், மந்திர முறையும், சிவ பூசனை பண் ணும் நெறியும் பிறவும் உணர்த்தும் என் பர் (நூல்.) தெய்வம் — விளக்கமுடையது. பெருந் தன்மை—பெருமை யெனவும், சிறிய தன்மை சிறுமை யெனவும்படும், பிழைப்பு —சீவனம் (வாழ்க்கை) வாய்ப்பு—நயம். (விளக்கம்) அறியா -ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், அருளெனும்பித்து —உருவகம், மேலிட்டு—அதிகரித்து, அறைந்தனன்—கூறி னன், பகீரதி — பகீரதனால் கொண்டுவரப்பட்டதாகலின்

கங்கைக்குப் பாகீரதி யெனப் பெயர்வந்தது, நன்மதி—சிவ ஞானம், பெற்ருர்—பெற்ரோர் எனவாயிற்று.

> " ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்காற்
> பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் "

என்பது நாலடியார்.

இங்கு அவ்வாறன்றி சாக்கடையில் கங்கை வந்தாற் போல என மாறிக் கூறப்பட்டுள்ளமை ஆயற்பாற்ருர்.

கங்கைக்குச் சானவி எனவும், பகீரதி எனவும், சுரநதி யெனவும் பெயர்கள் உள. ஒருகாலத்தில் இறைவி இறைவ னுடைய திருக்கண்களைப் புதைத்தகாலத்தில் இறைவியினு டைய பத்து விரல்களினின்றும் தோன்றிப் பத்து விதமான கங்கை யுண்டாயின வென்பர். ஒருகாலத்தில் பகீரதனுல் மண்ணுலகினிற் கொண்டுவரப்பட்டது. இறைவன் சடா மகுடத்திற் றங்கிய தென்பர். இதனுல் இறைவனுக்குக் கங் காதரன் எனப்பெயர் போந்தது. அங்கணக்கண் — சாக்கடை யினிடத்து.

## வாழ்த்து

> வாழிபுகழ்க் காழிநகர் வாழிதிருத் தண்டைக்கால்
> வாழிதிருக் கண்ணுடைய வள்ளலதாள்—வாழி
> சுருதி தொடர்ந்தபெருந் தோணியிறை வாழி
> திருநெறிச்சந் தானத் திரள் (105)

(இ-ள்) புகழ்காழிநகர்வாழி — பன்னிரு திருப்பெயர் களையுடையதும், குருலிங்க சங்கமபத்தி குலாவற் கேதுவாய தோணியப்பரும், பிரம புரீசரும், சட்டையப்பரும் எழுந் தருளியிருக்குஞ் சிறப்புடையதும் ஆகிய பெரும்புகழினை யுடைய காழி யெனுந் திருப்பெயரினை யுடைய நகரமானது வாழ்வதாக.

திரு தண்டை கால் வாழி — அழகிய தண்டையெனும் அணியினை யணிந்த திருவடி வாழ்வதாக, திரு கண்ணுடைய

வள்ளல்தாள் வாழி — அழகிய கண்ணுடைய வள்ளலார் எனும் திருப் பெயருடைய பெருமான் திருவடிகள் வாழ்வதாக. சுருதி தொடர்ந்த பெரும் தோணி இறை வாழி— வேதங்கள் பலகாலும் பின்பற்றிப் போற்றுகின்ற பெரி தோணிபுரம் எனும் நகரின் அவதரித்த திருஞான சம்பந்தப் பெருமான் வாழ்க, (பரமேசுவரன் வாழ்க என்றுமாம்) திருநெறி சந்தானம் திரள் வாழி—திருநெறியாகிய முத்தி நெறி வழிவந்த பரம்பரைக் கூட்டம் வாழ்க. (எ—று.)

காழிநகர் வந்த கவுணியப் பெருமான் வாழ்க அவர் திருத் தண்டையணி திருவடிகள் வாழ்க வென்பது போந்த பொருளாம். கண்ணுடைய வள்ளலார் என்பவர் கவுணியனைக் குல தெய்வமாகவும் குருவாகவும் வழிபட்ட கூட்டம் அறுபத்து நான்கு வள்ளலார் ஆவர். அவருள் கண்ணுடைய வள்ளலும் ஒருவராவர். இவரே ஒழிவில் ஒடுக்கம் எனும் பெருநூலை யாத்தவர் சுருதி—எழுத்தாக் கிளவியெனும் பேர் படைத்ததும் காதுகளால் உபதேச வழியாகக்கேட்டுத் தெளிவடைவதும் ஆகியது வேதம், ஆம்.

பெருந்தோணிபுரம் பிரளய முற்றபோது இவ்வூர்த் தோணியாக மிதந்ததால் தோணிபுர மாயிற்றென்பர்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர் நளிர்மதியம்
கால்வண்ணைச் சடைவிரித் தாடுங் கழுமலவற்கு
ஆளன்றி மற்றுமுண்டோ! அந்தண்ணாழி யகலிடமே

என்னும் திருவிருத்தப்பாவினலும் ஒருவாறு துணியப்படும், சந்தானம் — பரம்பரை, (வழி வழிவரற்பாலராயுள்ளவர்) திரள்—கூட்டம்.

திருச்சிற்றம்பலம்.
திருநெறி விளக்க மூலமு முரையும்
முற்றிற்று.

96-ம் பாடலில்,

பாசஞானமும் பசுஞானமும் பதிஞானமும் கிளக்கப் பெறுகின்றது. இவற்றுள் சரியை, கிரியை, யோகம், ஞானங் களைப் பற்றியவற்றினைப் பகரும் சிவஞானசித்தியார் பாடல்கள் வருமாறு. சரியை மார்க்கத்தினின்றவர் பதமுத்தி யாகியசாலோக முத்தியையடைகுவர்.

தாதமார்க்கஞ் செப்பிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட்டிலகு திருமெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோன் ஈசனுல
[கிருப்பர்."

சரியை யளவிலன்றி மைந்தர்க்குளதாகிய உரிமைபோல் அவ்வக்கிரியைக்கேற்ப அவ்வப் புவனபதிகளுக்குச் சமீபத் திற் பொருந்தி வசித்துக்கொண்டு அவ்வப் போக விசேடங் களை அநுபவித்து வாழ்வது சாரூபம்.

புத்திர மார்க்கமாகிய கிரியை வருமாறு:—

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதலனகொண்
[டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்திமானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினா லருச்சித்துப் பரவிப் போற்றி
பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி

நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்கள்
நின்மலன்றன் அருகிருப்பர் நினையுங் காலே.''

இனி,

சாரூபமாகிய பதமுத்தியாவது:- மேலேகூறிய அவ்வளவோ டமையாது தோழர்க்குரிய வுரிமைபோல அவ்வப்போகத்திற் கேற்ப அவ்வப் புவனபதிகளோடொத்த வடிவமும் ஒத்த அணிகலனும் ஒத்தபோக நுகர்ச்சியும் பெற்று வாழ்வது சாரூபம்.

சகமார்க்கமாகிய யோக நிலைக்குரிய பாடல் வருமாறு: —

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்கு
அணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்துண்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்றன் உருவத்தைப் பெறுவர்.
(எ—ம்)

இனிப்பரமுத்தியாகிய சிவசாயுச்சிய நிலையாவது, சரியையில் ஞானம்முதல் யோகத்தின் ஞானம் ஈறுகிய ஞானவிசேடங்கட்குப் பயனெனப்படும் சாயுச்சியமாவது ஒத்தவடிவினராய் வாழ்தன் மாத்திரையே யன்றி, அவ்வப் புவனபதிகளான் அதிட்டிக்கப்பட்டு அவ்வவ்வதிகாரங்களை அவ்வவர் போலவே செய்துகொண்டு வாழ்வது.

இச்சாலோக, சாமீப, சாரூப சாயுச்சியங்கள் உரிமை விசேடம்பற்றி முறையே தொண்டர் முதலியோர் இயல்பை யொத்தலின் இவற்றை யடைவதற்குரிய நெறியாகிய சரியை முதலிய நான்கும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப் பெயர் பெற்றனவாம்.

நான்காவது சன்மார்க்க நிலை வருமாறு:—

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.

என்பன வாதிய செய்யுளைக்கொண்டொருவாறு நானிலையின் பெற்றி யறிவோமாக.

அவுத்திரி தீட்சைகட்கான பாடல் வருமாறு:—

"நோக்கான் மாயை பரிசத்தால் நுண்மை வினைமந் திரச்சொல்லாற்
றுக்குஞ் சுத்த மாயையது தியானந் தன்னாற் சாருமலம்
பார்க்குமிகு பாவனையா லேபகைத்த திரோதம் யோகத்தாற்
றேக்கு மான்ம போதமிவை சேரக் கழலுங் கண்டேரே"

இங்ஙனங் கூறப்பட்ட தீட்சைகளான் மலங்கள் கழலப் பெறும். இங்ஙனங் கூறிப்போந்த வகையிலடையும் முத்தியின் முப்பதுவகையான நெறியினைப் பின்வரும் சிவானந்த ஆசிரியப் பா வருமாறு.

முப்பது வகைப்படும் முத்திநன் னெறியினைச்
செப்புவ னமைத்துத் தசகா ரியத்திற்
பொறையிலம் பூதமும் பொய்யென வருளான்
முறையுற நீங்கு முத்திச் சகலமும்
பஞ்ச பூதப் பழிப்புறு முடலும்
அஞ்சு புலன்றனை யறிந்திடும் பொறிகளுஞ்
செறிந்திடு புலனைத் தெரிந்திடிற் றனித்தனி

யறிந்திட வறியா வந்தக் கரணமும்
அக்கர ணங்கள் அகல வகன்றிடுந்
தக்க கலாதித் தத்துவக் குழுவும்
அத்தகு கலாதிக ளகல வகன்றிடுஞ்
சுத்ததத் துவமுந் தொடர்ந்தெழு முயிர்ப்பும்
வடிவுறக் கண்டு மலமெனத் தெளிந்து
நெடிதுற வாங்கவை நீங்கலிவ் வேழுந்
தத்துவ ரூபந் தத்துவ தரிசனந்
தத்துவ சுத்தி தன்னு ளடங்கும்
மாயையுங் கன்மமு மாமா யையுமென
வாயவிம் மூன்று மகன்றிடு மிவணே
தத்துவா தீதந் தன்னின்மைக் குழம்பினை
யொத்திடு மலவிரு ளூறுவது கேவலம்
அற்படு கேவலத் தந்தகா ரத்துயிர்
நிற்பது கேவல நிலையது வாகும்.
இருண்மல நீங்குதற் கெண்ணுத றிரோதம்
அருள்வடி வான வவதார மாகும்
அங்குயிர் காண்பதற் காதர வுறுமிடஞ்
சங்கர னிச்சா சத்தியின் றெரிசனம்
முருவுயிர் வெளிப்பட வல்லிரு ணீக்கந்
தருவது கிரியா சத்திய தாகும்
அந்தவா ருயிர்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்
மூழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியும்
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்
புணர்ந்தவல் லிருளினைப் புரைபுரை தொறுஞ்சென்
றுணர்ந்திடு மறிவாத் மரூபம தாகும்
கேவல வல்லிருள் கீழ்ப்படத் தான்முழு
தாவதே யாத்ம தரிசன மாகும்.
நயந்திடு மிச்சா ஞானக் கிரியையிற்
பயின்றி டாநிலை யதுபரை தெரிசன

மெதிர்ப்படு பரையினிற் சேதன வியாபகப்
பரப்பினைக் கண்டது பரையின் வியாத்தி
விரவியப் பரையினில் வியாபகத் துடனுயிர்
பரவிநின் றறிவது பரையினில் யோகம்
ஆங்குறு பரையி னனுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரைதனிற் போகம்
மூற்பரை யோக முழுப்பரை சாக்கிரந்
தற்பரை போகஞ் சாக்கிரா தீத
மோர்ந்திட நின்ற வுணர்வது முழுதுஞ்
சோர்ந்திட லாத்ம சுத்திய தாகும்
இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலுளத்
தருளெழ வாணவ மகன்றது மிவணே
யறிவக லதீதத் தநுபவஞ் சிறிதாங்(கு)
உறுவ தேசுக ரூபம தாகும்
ஆன்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்ற நிற்பதுவே சுகாதீத மாகும்
அகண்டமுஞ் சுகவடி வாஞ்சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்
எங்குங் கலந்த விறைவனைந் தொழிலையும்
அங்கங் கறிவ தருஞ்சிவ தரிசனம்
மருளதி கார மலமகன் றிடவே
யருளது மேலிடு மவதார மிவணே
யற்புத வருளா லத்துவி தம்பெறச்
சிற்பரத் திசைவது சிவயோக மாகும்
நற்பர சிவத்துற நண்ணுபே ரின்பஞ்
சிற்பரா னந்த தெரிசன மாகும்
பெறுபரா னந்தப் பெருக்கினைக் கவர்ந்தாங்(கு)
உறுவ தானந்த யோகம தாகும்
அருந்துமா னந்த அவச மேலீடு
பொருந்திய நிலைசிவ யோகம தாகும்

மெய்யுறு சமாதியை விடுத்துமவ் விருளினுள்
வையகங் காண்பது மறித்துமக் காட்சியே.

என்பதாம்.

இங்ஙனம் ஐவகை மலங்களும் பஞ்ச சத்திகளும் தீக்கையாலும், அநுபவத்தாலும் நீங்கப் பெற்றே ஆன்மா முடிவான பரமானந்தவச சாயுச்சிய சிவபோகத்தில் அழுந்தும். பஞ்சமலங்கள் அநுபவத்தாலும் நீங்கும். இதற்குப் பிரமாணம் :

எண்ணியமுற் புசிப்பகலா மாயா போகத்
திதமகித மறுகையினுல் திரோதாயி நட்டம்
நண்ணுமிரு வினைதுலையொப் பாத லாலே
நாடியமா மாயையுமைந் தொழிலு நட்டம்
பண்ணுமவ னவளதுவா மூன்னிலைச் சுட்டொழியிற்
பற்றுகுங் கன்மமலம் நட்ட மாகுந்
திண்ணமிகும் வடிவகல மாயை நட்டஞ்
சிவபோகம் விளைந்திடம்விட் டகன்றிடுமா
[ணவமே.

பஞ்சப்பெருஞ் சத்திகளும் நீங்குமுறைமைக்குச் செய்யுள்:—

கூட்டரவு வொழிகையினுற் கிரியையவிழ்ந் தகலும்
குலவுதரி சனமகல வநுபோகம் விளையின்
நாட்டரிய ஞானசத்தி வேற்றுமையா யகலும்
நவையாரும் பெறுதியொழிர் இடுதலினு
[லெவையுஞ்
சேட்டிதமா மிச்சையுமங் கப்பரிசே யகலும்
சிவம்பிரகா சிக்கையினுற் றிரோதாயி யகலும்
நீட்டியதற் போதமறச் சிவாநுபவத் தழுந்தி
நித்தியமாம் பராசத்தி விட்டகலுங் காணே.

என்பதாம்.

நிட்டையாகிய சாயுச்சிய நிலையுற்றிடற்குச் செய்யுள்.

மாயநட் டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் கூடிப்பின் தாதையைச் சேர்ந்துபின் றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்று னெழிற்கச்சி யேகம்பனே.

என்பது பட்டினத்தார் பாடலாகும்.

இங்ஙனம் திருநெறி விளக்கத்திற் காணப்படும் தீட்சைகளும் முத்தி நிலைகளும் குறித்த ஒரு சில பாடல்களைக் குறிப்பிட்டிருத்தலை நோக்கி யமைதி பெறுகவென வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

திருநெறி விளக்கவுரை யொருவாறு முற்றும்.



உ

திருச்சிற்றம்பலம்

# திருநெறிவிளக்கம் மூலமும் உரையும்.

## செய்யுண் முதற் குறிப்பகராதி


| பாட்டு எண். | செய்யுள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| | **அகரம்** | | |
| 6 | அருவிசொரி விழியிணையும் | .... | 7 |
| 11 | அன்புநிறை குருவுருவும் | .... | 10 |
| 1 | அருளிலர் பாலிருளாகி | .... | 12 |
| 11 | அகணிதமா யழிவிலதாய் | .... | 23 |
| 17 | அணையவுரு வொருவகை | .... | 28 |
| 18 | அளவிலிருண் மாயையினும் | .... | 29 |
| 46 | அவையவ மதனுளெய்தி | .... | 55 |
| 65 | அறிவினூற் பொறிகளந்தக் | .... | 69 |
| 89 | அவுத்திரி யதனிினுசம் | .... | 92 |
| | **ஆகாரம்** | | |
| 2 | ஆருயிர் மூவகை மூலம் | .... | 13 |
| 28 | ஆர்ந்தவினை யாதியென | .... | 39 |
| 96 | ஆசனஞ் செபந்த வம்மாம் | .... | 99 |
| | **இகரம்** | | |
| 35 | இல்லாத தனைப்பண்ணி | .... | 45 |
| 42 | இருவினைகள் புரிந்தருந்தி | .... | 51 |
| 58 | இருடரு மதீத மொன்றில் | .... | 64 |
| 63 | இறையவ னறிவு கொண்டே | .... | 68 |
| 68 | இருளுயிரான காலை | .... | 72 |

| செய்யுள் எண். | செய்யுள் | பக்க எண். |
|---|---|---|
| 91 | இருள்வலி யிருள தீசன் | .... 95 |
| 103 | இந்த நாலுணர்த்துமெல்லை | .... 109 |
| | **ஈகாரம்** | |
| 32 | ஈங்கிவைமற்றுயிர்போக | .... 43 |
| 101 | ஈசனு மீசனன்பர் | .... 105 |
| | **உகரம்** | |
| 90 | உள்ளொடு புறம்பேதென்ன | .... 100 |
| 90 | உடறிரிகின்றதிங்கு | .... 94 |
| | **ஊகாரம்** | |
| | **எகரம்** | |
| 9 | எம்பந்த பாசமறக் | .... 8 |
| 20 | எண்ணியகன் மேந்திரியம் | .... 31 |
| 23 | எய்திடு மறுமையினும் | .... 34 |
| 56 | எண்ணுசாக் கிராதி | .... 62 |
| 72 | என்றவிப்பரையே யன்றி | .... 75 |
| | **ஏகாரம்** | |
| 50 | ஏதசத்தறிந்த போதம் | .... 58 |
| 83 | ஏலவிங்கிட்டை மாறு | .... 86 |
| 87 | ஏகமா யிரண்டா யேகம் | .... 90 |
| | **ஒகரம்** | |
| 12 | ஒன்றாகி யொன்றுமிலா | .... 24 |
| 66 | ஒன்றிடுங் கரணமின்றேல் | .... 70 |

### ஓகாரம்

14 ஓங்குபரா பரனருளால் .... 26
30 ஓதுமிருண் மூலமலம் .... 40
80 ஓரியல்பற்ற போதம் .... 82

### ஔகாரம்

### ககரம்

54 கரிபரி தேரோடளாற் .... 61
59 கருவியில் விடயந்தானும் .... 65
84 கருதிடிற் கரணமுண்டாம் .... 86
100 கண்டது சடமாக்காணும் .... 104

### கா

1 காயமெனுங் கூடத்து .... 1
27 காணுத வாணவநீர் .... 38

### (கி கீ கு) கூ

43 கூறிய சத்திநிபாதம் .... 52

### கெ கே

82 கேள்விசேர் பாசஞானம் .... 84

### கை கொ கோ

### சகரம்

60 சத்தியபோதமாய் .... 66

### சா

22 சாற்றியவிக் கன்மவழி .... 33
36 சாற்றுசெவி துவக்குவிழி .... 46
57 சாக்கிர நிலைமையின்கண் .... 63

69 சாற்றுதற் றெரிசனம் .... 72
71 சார்வறி வதனைக் காட்டுஞ் .... 74

## சி

51 சித்தினை யசித்துக்காணு .... 59
62 சிற்றறி வறியான் றுணுப்ச் .... 67
73 சின்மயமான வுண்மை .... 75
94 சிய்யது சிருட்டிவாவே .... 96

## சீர சு

7 சுட்டறிவுக் கெட்டரிய .... 20
70 சுட்டறி வறிவி னுண்மை .... 73
77 சுகமுத லுதிக்கு மென்றல் .... 79

## சூ செ

8 செங்கமலத் தயன்படைக்கு .... 20
81 சென்றுறு கேள்வியோடு .... 83
85 சென்றுறு நினைவு குன்றுஞ் .... 88
93 செலவறு சிய்யதாகும் .... 96

## (சே சை) சொ (சோ)

16 சொல்லிய விம்மாயை .... 27
13 சொன்மையொடு .... 11
45 சொற்றனனருளி னுண்மை .... 54

## தகரம்

73 தத்துவசால மொய்த்த .... 80
53 தங்கிய வேகதேசந் .... 60
99 தரைமுதற் கருவியாவும் .... 103

## (தா) தி

104 திருநெறி விளக்கமென்ன .... 109

## (தீ து தூ தெ தே தை) தொ (தோ)

21 தொல்குரம்பைக் காரணம் .... 32
26 தொகுதிமிகு முயிரதுகே .... 37
41 தொல்லைய விப்பிற விகளில் .... 51

## நகரம்

6 நண்ணுபரை யிச்சைதொழில் .... 18
55 நனவினில் முப்பத்தைஞ்சு .... 61
92 நமவினையத்த னுப்பண் .... 95

## நா

31 நாடரிய வுணர்வாகி .... 42
10 நாட்டியவைந் தொழிலிறைவன் .... 22

## நி

76 நிலாவிய கலாதி தன்னுல் .... 78
8 நீருலவு சடைதாழ .... 7
33 நீணில மீதினிலரச .... 43

## (நு நூ) நே

79 நேதிகள் கருவிபண்ணு .... 81

## (நை நொ) நோ

52 நோக்கொளி தீபம் .... 59

## பகரம்

10 பத்திநிறை கடல்குன்றைப் .... 9
39 பகர்ந்திடு மிக்கருவி .... 48
67 பற்றிய நிறங்களாகும் .... 71

## பா

5 பாழமணர் சிறைநீங்கி .... 4
44 பாவையர்கட் படும்வீடு .... 53

## (பி பீ) பு

38 புறத்து நிரந்தரமாகி .... 47
47 புரமறி விலாமையாலும் .... 55

## பூ

74 பூசுரர்க் கடியசத்தின் .... 76

## பெ

102 பெத்தமு முத்திதானும் .... 106

## பே

2 பேரொளியாய் .... 2

## பொ

4 பொய்யுடைய பரசமய .... 3
61 பொறிகளி லொன்று பஞ்ச .... 67
95 பொறிபுலனதி போக்கி .... 97

## போ

49 போதமே தறிந்த வந்தப் .... 57
30 போதமெழும் போகநுகர் .... 41
48 போதமேற் பொறியென் .... 56

## ம

93 மங்குலின் மன்னயாவும் .... 102
4 மன்னுசரிதா கிரியை .... 16
3 மருவுமனுவர்ச்சனேயோ .... 14
12 மருளினிலை கெடவமுத .... 10
6 மறைமுதல்வன் வழுத்த .... 5

## மா

86 மாறற மாயக்கிவந்த .... 89

மு

34 முக்குணத்தின் .... 44
5 முற்சுருதி மிருதிசிவா .... 17

மூ

75 மூங்கையாய்க் கொத்தை .... 77

மெ

15 மெய்யாதி நால்வகை .... 27
29 மெய்யுணர்வை .... 40

மே

37 மேதகு மைம் பூதவயி .... 47
19 மேவிய விம்மாயையினில் .... 30
2 மேவுபரை திரோதமுடன் .... 3

(மை) மோ

83 மோசனம் பாசமென்னில் .... 91

யோ

40 யோனிவகை யெண்பத்து .... 50

வகரம்

25 வஞ்சமுறு மாருயிர்கட்கு .... 36

வா

24 வாக்கு மனங் காயம் .... 34
105 வாழிபுகழ்க் காழி .... 111

(வி வீ) வெ

13 வெந்துயரை நோயாளன் .... 25
64 வெய்யவனன்றி யொன்றும் .... 69

வை

9 வையமெலா மாண்பெண் .... 21

அகச்சந்தான குரவர்

அருட்குரவர் எழிற்கயிலை முழுக்காவல்
நந்திபிரான் அடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சனற்குமர
முனிவனிரு திருத்தாள் போற்றி
இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரி
சனிசரன விணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சீல
குருபரன்காண் மலர்கள் போற்றி.

புறச்சந்தான குரவர்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டா ரிணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த
வருணந்தி நற்றுள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றுள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி

பண்டைநற் றவத்தாற் றேன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினிற் றெருகுப்பன் மார்க்கர்
கண்டநூ ரோதி வீடு
காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும்
பரிசினைப் புகழ லுற்ரும்

அருளினுல் ஆக மத்தே
யறியலாம் அளவி ஞலும்
தெருளலாஞ் சிவனை ஞானச்
செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு
வாழலாம் பிறவி மாயா
இருளெலா மிரிக்க லாகும்
அடியரோ டிருக்கலாமே.

சிவஞான சித்தியார்.

உ

திருச்சிற்றம்பலம்

# திருநெறி விளக்கவுரை.

## பிழை திருத்தம்

| பிழை | திருத்தம் | | பக்கம் | வரி |
|---|---|---|---|---|
| பாவனா ருபத்தில் | பாவனா ரூபத்தில் | .... | 3 | 17 |
| தீவிளையும் | தீவினையும் | .... | 16 | 22 |
| இச்சையும | இச்சையும் | .... | 13 | 29 |
| அழீத்தல் | அழித்தல் | .... | 23 | 2 |
| வரூந்தும் | வருந்தும் | .... | 27 | 20 |
| அக்சிவனை | அச்சிவனை | .... | 28 | 19 |
| துவலாநிற்கும் | நுவலாநிற்கும் | .... | 29 | 17 |
| வினைப்போகங்கனை | வினைப்போகங்களை | .... | 30 | 2 |
| எணணப்பட்ட | எண்ணப்பட்ட | .... | 31 | 10 |
| தோன்யியிடும் | தோன்றியிடும் | .... | 34 | 25 |
| இரூவினைஞ்ரோ | இருவினையுஞ்சேரா | .... | 34 | 26 |
| சந்திநிபாதம | சத்திநிபாதம் | .... | 39 | 11 |
| கூறுநிப்பர் | கூறுநிற்பர் | .... | 45 | 10 |
| மூண்டாகும் | முண்டாகும் | .... | 52 | 20 |
| சுந்தம் | சுத்தம் | .... | 52 | 26 |
| ஒளியானது | ஒளியானது | .... | 53 | 23 |
| தரனங்கள் | தானங்கள் | .... | 62 | 21 |
| போறியைந்து | பொறியைந்தும் | .... | 62 | 21 |
| ஓரவத்தை | ஓரவத்தை | .... | 63 | 9 |
| ஐந்தும் | ஐந்தும் | .... | 65 | 10 |
| ஓடல | ஓடல் | .... | 65 | 12 |
| மாதலாகும | மாதலாகும் | .... | 66 | 25 |

| பிழை | திருத்தம் | | பக்கம் | வரி |
|---|---|---|---|---|
| இவன் றன்ருல் | இவன் றன்ஞல் | .... | 67 | 16 |
| கூறப்ட்ட | கூறப்பட்ட | .... | 75 | 14 |
| அங்ஙன் | அங்கண் | .... | 79 | 11 |
| எனனில் | என்னில் | .... | 80 | 8 |
| முக்குற்றமுமின்றி | முக்குற்றமுமின்றி | .... | 84 | 3 |
| புலன்களிற்ச் | புலன்களிற் | .... | 87 | 23 |
| ஏகத்தன்மும | ஏகத்தன்மை | .... | 90 | 23 |
| னுன்மை | னுண்மை | .... | 97 | 2 |
| ஏன்றவாறு | என்றவாறு | .... | 101 | 11 |
| வள்ளலதாள் | வள்ளல்தாள் | .... | 111 | 19 |
| பெரிதோணிபுரம் | பெருந்தோணிபுரம் | .... | 112 | 15 |
| தேக்கி | தேக்கு | .... | 114 | 15 |
| மூழுதுநின் | முழுதுநின் | .... | 115 | 25 |
| யொழிர்திடுதலினு | யொழிந்திடுதலினு | .... | 113 | 22 |
| கண்டநூரேருதி | கண்டநூரலோதி | .... | 128 | 6 |
| புகழலுற்ரும் | புகலலுற்ரும் | .... | 128 | 9 |

முற்றும்.